


# என்னுயிர் நீ தானே!

புலோலியூர் செ.கந்தசாமி

நூலக ஆவணக் காப்பகம்
சேகரத்தில்

அன்பளிப்பு

கோண்டாவில்
புலோலியூர். ஆ. கந்தசாமி

# என்னுயிர் நீ தானே..!

புலோலியூர் செ.கந்தசாமி

வெளியீடு:

கவிதா நிலையம்,

தும்பளை.

| | | |
|---|---|---|
| நூலின் தலைப்பு | : | என்னுயிர் நீதானே! |
| விடயம் | : | சிறுகதைத் தொகுதி |
| ஆசிரியர் | : | புலோலியூர் செ.கந்தசாமி |
| பதிப்புரிமை | : | திரு.கந்தசாமி பிரதீபன் |
| முதலாம் பதிப்பு | : | மார்கழி 2018 |
| அச்சுப்பதிப்பு | : | **S.P.M** Printers,<br>V.M.Road, PPD. 0212260055 |
| பக்கங்கள் | : | 106 + iv |
| விலை | : | 250/= |
| ISBN No. | : | 978-955-71203-0-0 |

| | | |
|---|---|---|
| Title of the Book | : | Ennuyir Nee Thane |
| Facts | : | Collection of Short Stories |
| Author | : | C.Kandasamy |
| Copy Right | : | Mr.Kandasamy Pratheepan |
| Fist Edition | : | December 2018 |
| Printers | : | S.P.M Printers,<br>V.M.Road, PPD. 0212260055 |
| Pages | : | 106 + iv |
| Price | : | 250/= |
| ISBN No. | : | 978-955-71203-0-0 |

இந்நூல் வடமாடகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலாசார செயற்றிட்டம் 2018ன் கீழ் வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு ஒதுக்கப்பட்ட எழுத்தாளர் ஊக்குவிப்பு நிதிப் பங்களிப்புடன் வெளியிடப்படுகிறது.

# சமர்ப்பணம்

என்னுடன் உயிருக்குயிராய் இணைந்திருந்து

பிரிந்தும், நெஞ்சில் நீங்காத

ஓவியமாய்

நினைவில் நிற்கும்

சிவாம்பிகையாம் இதய தெய்வத்திற்கு

இந்நூல் சமர்ப்பணம்.

# பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலக பிரிவு இலக்கிய வளம் கொண்ட ஒரு பிரதேசமாகும். கவிதை, சிறுகதை, நாவல், அகராதி, இசைநாடகம், வில்லுப்பாட்டு ஆய்வு, நவீன நாடகம் முதலான பல துறைகள் வடமராட்சியில் ஆழமாக வேரூன்றியுள்ளன. நீண்டகாலமாக சிறுகதைத் துறையில் இயங்கி வரும் புலோலியூர் செ.கந்தசாமி அவர்களும் இம்மண்ணிற்கு பெருமை சேர்ப்பவர் என்பது மகிழ்ச்சி.

இது இவரது இரண்டாவது சிறுகதை நூலாகும். தன் கண்முன்னே நிகழ்வனவற்றையும் கேட்பனவற்றையும் சிறுகதையாக்கும் கலை இவருக்கு வாய்த்திருக்கின்றது. இதில் உள்ள பல சிறுகதைகள் இவரது ஆளுமைக்கு சான்று பகரவல்லன. ஒரு சில சிறுகதைகள் சமூகத்தை விமர்சிக்கின்றன. ஒரு சில கதைகள் சமூகத்தைப் பார்த்துப் பரிதாபப் படுகின்றன. இவருடைய கதைகளில் எல்லாவிதமான மாந்தர்களும் உலாவுகிறார்கள். குறை நிறை உள்ள சாதாரண மனிதர்களாகக் காட்சியளிக்கிறார்கள். இவரது சிறுகதைகள் சமூகத்தில் இருந்து விலகி நிற்கவில்லை. சமூகத்திற்குள்ளேயே நிற்கின்றன. இதுதான் சிறுகதையின் வெற்றி எனலாம்.

சிறுகதை என்பது வாசித்து முடித்த பின்னர் சிந்தையில் ஒரு நெருடலை உண்டாக்க வேண்டும். நிச்சயமாக சிறந்த சிறுகதை ஒரு தோற்றுகையை ஏற்படுத்த வேண்டும். இவ்வகையில் இவரது சிறுகதைகள் பல வெற்றி பெற்றுள்ளன எனலாம்.

தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமையுள்ள இவர் உலகளாவிய சிறுகதைகள் பலவற்றை ஆர்வமுடன் வாசிப்பவர். சில காலம்

வெளிநாட்டிலும் பணியாற்றிய இவருக்கு ஆங்கிலச் சிறுகதைகள் மீது அதிக நாட்டம் ஏற்படலாயிற்று. மலையாளம், சிங்களம் ஆகிய மொழிகளில் உள்ள பெரும்பாலான சிறுகதைகளில் இவருக்குப் பரீட்சயம் உண்டு.

எண்பது வயதைக் கடந்துவிட்ட நிலையிலும் இவரது இலக்கிய ஆர்வம் குறைந்துவிடவில்லை. இவரது வாசிக்கும் ஆர்வமும் குன்றவில்லை. எப்பொழுதும் ஏதோவொன்றை வாசிப்பது இவரது பழக்கம். இவர் அதிகம் வாசிப்பதால் எழுதுவதைக் குறைத்துக் கொண்டார். எழுதியவை கொஞ்சமாக இருந்தாலும் கனதி மிக்கவை.

இந்த வயதிலும் சிறுகதை நூலை வெளியிடும் இவரை பாராட்டுகிறேன். நூல் சிறப்பாக வெளிவருவதற்கு வாழத்துக்களைக் கூறுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

28.12.2018

**திரு. ஆழ்வாப்பிள்ளை சிறி**
(SLAS, MA & MPM)
பிரதேச செயலாளர்
பருத்தித்துறை.

# என்னுரை

இது எனது இரண்டாவது சிறுகதைத் தொகுதி. எனது முதலாவது சிறுகதைத் தொகுதி "மெல்லத் தமிழ் இனி....... " என்ற மகுடத்தில் 1999 இல் வெளியிடப்பட்டது. இது காலவரை பதினெட்டு வருடங்களின் பின் இரண்டாவது தொகுதி வெளிவருகிறது.

ஏன் இந்த தேக்கம் என்ற நோக்கம் எவர் மனதிலும் உதிக்கலாம். எனது வேலைப் பளு. உடன் பாடாக இல்லாமல் இருந்தாலும் கூட அதுவே உண்மை. உண்மையைத் தவிர வேறொன்றுமில்லை.

இந்த பதினெட்டு கால இடை வெளியில் ஆங்காங்கே கிள்ளித் தெளிந்தாற் போல எனது படைப்புக்கள் வெளிவந்த வண்ணமாகவே இருந்தது. இச் சிறு கதைகள் கால மாற்றத்திற்கேற்ப அவைகளின் தன்மையும் போக்கும் மாறுபட்டிருக்கலாம். எழுத்து என்பது காலக் கண்ணாடி தானே!

எழுத்தாளன் தான் கண்டு கேட்டு அனுபவித்தவற்றை கலை நயத்துடன் எடுத்தியம்ப முடியும். அதில் ஒரு ஆத்ம திருப்தி காண முடியும் சமூகத்தைத் திருத்துகிறேன் பேர்வழி என்று வரிந்து கட்டிக்கொண்டு எழுதுவதால் மட்டும் சமூகத்தை திருத்திவிடலாம் என்று கருத இடமில்லை. எழுத்தாளன் என்ன சமூகத்தை "ஜாக்கி" போட்டு நிமிர்த்தவா முடியும் அப்படியெனின் இது காலவரை ஜெயகாந்தன் பாலகுமாரன் முதற் கொண்டு டொமினிக் ஜீவா, செங்கை ஆழியான் முதலான முன்னோடிகள் ஆண்டாண்டு காலமாக எழுதாததையா நாம் எழுதிக் கிழித்துவிட்டோம். எனினும் சமூகம் திருந்தியதா? முன்னிலும் பார்க்க கொலை கொள்ளை, களவு, கற்பழிப்பு என்று நாடு சீரழிந்து கிடக்கின்றதே!

எழுத்துக்கள் ஆர்வமுடன் வாசித்துணர்ந்து எது நல்லதோ அதைப்பின்பற்றி வாழப்பழகி கொள்ள வேண்டும். அதற்கெல்லாம்

வளர்ந்து வரும் சமூகத்திற்கு அவகாசமில்லை. எதிலும் அவசரம் எதற்கும் அவசரம் இதற்குரிய படிப்பறிவும் பகுத்தறிவும் அவர்களிடையே அற்றுப்போய்விட்டது.

எழுத்தாளர்களிடையே காழ்ப்புணர்ச்சி உட்கருத்துக்களும் பம்மாத்துகளும் மலிந்துவிட்டன. ஒற்றுமையும், நட்புறவும் அற்றுப்போனாற் போல் தனித் தனிக் குழுக்களாய் கலைஞரின் கூட்டு முயற்சிகளாக இலக்கியப் பயணம் அறுவடை போடும் காலகட்டத்தில் என்போன்றோர் இலைமறை காயாக இருப்பதில் வியப்பில்லை.

வருமிடர் தாண்டி இன்னும் எழுதவேண்டும் என்ற தீராத வேட்கையுடன் எழுத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றேன். எழுதிக்கொண்டே இருப்பேன். இதே முனைப்பின் பயன்பாடாக இத்தொகுதியை வெளியிட வாய்ப்பளித்தமைக்கு மாகாண கலாசார பண்பாட்டுத் திணைக்களத்திற்கும் பெற்றுத் தந்த பிரதேச செயலர் அவர்கட்கும் எனது நன்றியைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இத்தொகுதி வெளியிடுவதில் எனக்கு ஊக்கமும் உதவியும் புரிந்து ஆதரித்த பெரிய ஐங்கரன் மற்றும் புதுக்கடியிருப்பு ஜெயம் ஜெகன் ஆகியோருக்கு எனது அன்பு கலந்த நன்றிகள் எப்பொழுதும் உண்டு.

இதை ஆதரிப்பதும் தள்ளி விடுவதும் எள்ளி நகையாடுவதும் வாசகர்களாகிய உங்கள் கையில் தான் உண்டு. உங்கள் ஒத்துழைப்பும் உதவியும்தான் என் போன்றோரின் பணியை முன்னே இட்டுச் செல்லும்.

புலோலியூர் செ.கந்தசாமி
யக்கோவளை ஒழுங்கை.
தும்பளை

# மலரில் மணம் வீசுபவை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | உன்னை ஒன்று கேட்பேன் | 01 |
| 2. | மூடுதிரை | 08 |
| 3. | இலாபக்காசு | 18 |
| 4. | அவளும் ஒரு தாய்தானே | 26 |
| 5. | காருண்ய காண்டம் | 33 |
| 6. | இடிபாடுகள் | 39 |
| 7. | தூவானம் | 49 |
| 8. | என்னுயிர் நீதானே | 55 |
| 9. | பக்குவம் | 64 |
| 10. | இருப்பும் செப்பும் | 73 |
| 11. | மொட்டு | 82 |
| 12. | ஏக்காயம் | 89 |
| 13. | இப்படியும் சிலபேர் | 94 |
| 14. | வீட்டுக்கு வீடு | 101 |

# உன்னை ஒன்று கேட்பேன்

அறி துயிலில் அயர்ந்துபோய் இருந்தவனுக்குச் சிற்றெறும்பு கடித்துவிட்ட மாதிரி என் உள்மனம், போய் எங்கோ ஆழங்காண முடியாத அதலபாதாளத்தில் தள்ளிவிட்ட மாதிரி அதிர்ச்சியை அளித்தன அவர் கூறிய வார்த்தைகள். என் விடா முயற்சியையும் முன்னேற்றத்தையும் பாராட்டி என் முதுகில் தட்டிக் கொடுத்தவர், எங்கள் காதலை ஊக்குவிக்கும் பாணியில் மறைமுகமாகப் பேசியவர், எனது பழைய வரலாற்றை மடடும் சாந்தாவுக்குச் சொல்ல வேண்டாம் என்றால் என்ன அர்த்தமாம். எனக்கு ஏதோ புரிகிற மாதிரியும் அதே நேரம் ஒன்றுமே புரியாத மாதிரியும் ஒரே மயக்கமாய்............

அவர் அப்படிக் கூறிக்கொண்டு என் விழிகளை ஊடுருவி நோக்கினார். என் உள்ளத்தைத்தான் ஆராய்ந்து கொண்டிருந்தாரோ! எனக்கு என்ன பதில். சொல்வதென்றே புலப்படவில்லை. "........சரி. பார்க்கலாம் " என்ற வார்த்தையை அரை குறையாக மென்று விழுங்கிக் கொண்டவன் தொடர்ந்து "அட நேரம் போனதே தெரியவில்லையே" என்று வியப்புக்காட்டியபடி அவசரம் காண்பித்தேன். எப்படியாயினும் அந்த இடத்தில் இருந்து அகன்று விட்டால் போதும் போல் இருந்தது எனக்கு.

சரி தம்பி போயிட்டு வாங்கோ. அடிக்கடி வீட்டுக்கு வந்து போங்கோ என்று சொல்லியபடி திடீர்க் காற்றினால் சாய்ந்துபோன ஒரு மல்லிகைக் கொடியை நிமிர்த்த முயன்று கொண்டிருந்தார். நான் மீண்டும் வரவேற்பறையில் பிரவேசித்த போது சாந்தாவை அங்கே காணவில்லை. அவளிடம் சொல்லிவிட்டுச்

செல்வதற்காகச் சிறிது நேரம் காத்துக்கொண்டு இருக்க வேண்டியிருந்தது. ஏனோ என் மனம் நிலையின்றித் தவித்துக் கொண்டிருந்தது. சிறிது நேரத்தின் பின் ஆடும் மயிலாய் ஒல்கி ஒசிந்து நடை பயிலும் அவள் நடையில் அவ்வளவு தளர்ச்சி ஏனோ! ஆயிரம் நிலவின் அழகுப் பொலிவுடன் அருள்வடியும் அவளின் திருமுகம் இருள் சூழ்ந்த மேகமாய், ஏதோ சொல்லத் துடிப்பிருந்தும் சொல்லமுடியாமல் தவிக்கும் இதழ்கள், ஏக்கம் ததும்பும் இரு விழிகள்........இவளுக்கு என்ன நேர்ந்து விட்டது!

எனக்கு இருந்த மனோநிலையில் அவளோடு ஒன்றும் பேச என் மனம் இசையவில்லை. அங்கு நிலவிய சூழ்நிலையும் அதற்குச் சாதகமானதல்ல தான். " நான் போய் வருகிறேன் சாந்தா" என்று கூறியபடி வாசலண்டை சென்று என் சையிக்கிளை எடுத்தேன். என்னைப் பின்தொடர்ந்து வாசல் வரை வந்தவள் "தயவு செய்து மாலையில் சந்தியுங்கள்" என்றாள் மெதுவாக.

"எங்கே!" என்ற அர்த்தம் தொனிக்க நான் புருவத்தை நெரித்தேன்.

"வேறு எங்கோ அங்கே தான்.......கடற்கரையில்" என்ற கருத்து விளங்க தலையைச் சாய்த்து கண்களை ஒருக்களித்து, கைகளை அசைத்துச் சைகை காட்டினாள். அதுவே ஒரு தனிக் கவர்ச்சி தான்.

சைக்கிளில் ஏறி அமர்ந்த நான் ஏதோ உத்வேகத்தில் சைக்கிள் பெடலை உன்னி மிதித்தேன். வேகமாய் சுழலும் சக்கரங்களோடு போட்டியிட்டுக் கொண்டு என் சிந்தனைச் சக்கரம் சுழலத் தொடங்கியது.

சாந்தாவின் அப்பா அப்படியோர் எறி குண்டைத் தூக்கிப் போட்டு என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கத் தேவையில்லை தான். எனது பழைய வரலாறு சாந்தாவுக்குத் தெரிந்தால் எங்கள் தூய காதலுக்குக் குந்தகம் ஏற்பட்டுவிடும் என்று எண்ணினாரோ? அப்படியென்றால் சாந்தா என்னைக் காதலிப்பது...? எனது அழகில் மயங்கியா? எனது திறமையில் மயங்கியா? அவள் என்னை உளமாரக் காதலிப்பதாக இருந்தால் எனது பழைய வரலாறு எப்படிக் காதலுக்குத் தடையாகும்?

நான் ஓர் ஏழையாகப் பிறந்து கூலிக்காறனாக வளர்ந்தவன். வாழ்க்கைப் பாதையில் முன்னேற எத்தனையோ மேடு பள்ளங்களைத் தாண்டி

வெற்றிபெற வேண்டியிருந்தது. உண்மையில் மனமார என் திறமையைப் பாராட்டுவதாக இருந்தால் அந்த மகிழ்ச்சியை மகளுடன் பகிர்ந்து கொள்ளலாமே! மகளிடம் சொல்லாதே என்றால் நான் ஏழையாக இருந்த விவரம், கூலிக்காரனாக இருந்த சங்கதியைச் சாந்தா விரும்பமாட்டாள் என்று நினைக்கிறாரா அல்லது அந்த விவரங்கள் வெளியில் தெரிந்தால் தங்கள் அந்தஸ்திற்கு இழுக்கு என்று எண்ணினாரா?

உனது முயற்சியை பாராட்டுவாள். விடா முயற்சியும் திடசித்தமும் நிரம்பிய திறமைசாலி தான் என் காதலன் எனச் சாந்தா மகிழ்வாள் என்று சொல்ல வேண்டியவர் ஏன் இப்படித் தவிர்க்க வேண்டும்? இரகசியமாக என்ன அழைத்துச் சென்று, அவளுக்கு சொல்லவேண்டாம் என்று மன்றாட்டமாய்ப் புத்தி சொல்லும் அளவிற்கு எனது முன்னைய நிலை அருவருப்பானதா? அப்படியானால் என் சாந்தா கூடப் போலி வேஷக்காரி தானா? இருக்க முடியுமா? ஐயோ! என்னால் நம்பமுடியவில்லையே!

என் அழுக்குத் துணிக்குச் சவர்காரம் தந்துதவி, பரீட்சைக்குப் பணம் கட்ட உதவிய அந்த அடுத்த வீட்டு அக்காவும் ஒரு பல்கலைக்கழக பட்டதாரிதான். சாந்தாவும்.. சீ.. அந்த அக்கா எங்கே? சாந்தா எங்கே? எனது பழைய வரலாறு அவள் மனதை மாற்றிவிடுமாமே!

நீ படித்து பட்டம் பெற்று உன்னுடைய பெற்றோரை நல்ல முறையில் காப்பாற்றவேண்டும் என்று அந்த அக்கா புத்திமதி சொல்ல... . நானோ! பெற்றவள் கடன்பட்டு உள்ள நகைகளை விற்றும் என்னைப் படிப்பித்துப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிவைக்கப் பட்டபாடு. காலம் கனவாக கனவே நினைவாக நினைவே வாழ்வாக வாழ்வே சுமையாக என் அன்னை காலத்தை தள்ளிவிட்டாள். அவளின் நெஞ்சச் சுமையை இறக்க வேண்டிய புனித காரியம் என்னுடையது. நானோ...?

பல்கலைக் கழகப் படிப்பு ஓர் எல்லையைத் தொடும் முன்னர் காதல் என்னும் சாகரத்தில் ஆழம் தெரியாமல் காலை விட்டு அவதிப்பட்டுக் கொண்டு, அதுவும் போலி கௌரவமும் வெளிவேஷமும் கொண்ட இந்தக் குடும்பத்தில் மாட்டி... சே..சே..!

நான் கூலிக்காரனாக வளர்ந்து வந்ததை ஏற்க மறுக்கும் மனப்பாங்குடையவளாக இருந்தால் என் ஏழைப் பெற்றோரைக் கடைசிவரையில் வைத்துக் காப்பாற்றத் துணைநிற்பாள் என்பது மட்டும் என்ன நிச்சயம்? என் பெற்றோரை மாமா மாமி என்று அழைக்கக்கூட அவளுக்கு கூச்சமாக இருக்குமோ என்னவோ!
சாந்தாவின் தந்தையோ இலகுவில் ஒரு மாப்பிள்ளை கிடைத்து விட்டானே என்று திருப்திப்படலாம். ஆனால் எனக்கு...

இன்றே அவளிடம் என் பழைய வரலாற்றைச் சொல்லப் போகிறேன். அவளைக் கண்டு அம்மா! தாயே! நான் பாலும் பழமும் உண்டு பஞ்சணையில் உறங்கிச் செல்லப்பிள்ளையாக வளர்ந்து இந்த நிலைக்கு வரவில்லை. வாழ்க்கையில் பெரிதும் நொந்து போனவன். காலையில் பட்டினியுடன் பாடசாலைக்குச் சென்ற நாட்களும் அளுக்கு உடையுடன் மற்றவருக்கு ஓர் அருவருப்பின் சின்னமாய் உலவிய நாட்களும் அனந்தம். ஆனால் வாழ்க்கையில் வீசிய வறுமைப் புயலுக்கு நாணலாக வளைந்து கொடுத்து இந் நிலைக்கு வந்தேன். என் பழைய வரலாறும் என் வாழ்க்கை முறையும் உன் கௌரவத்துக்குப் பங்கம் விளைவிக்குமானால் நம் காதல் இன்றுடன் முடிந்து போகட்டும் என்பேன்.

உண்மையாகவே சாந்தா நம் காதலை நிராகரித்து விடுவாளோ! சீ.. ஒரு போதும் நம்பமாட்டேன். ஐயோ என் மூளை குழம்பித் தவிக்குதே! என் இதயக் கூட்டினில் சிறை பிடித்து வைத்திருந்த சாந்தா என்னும் காதல் சிட்டு எங்கோ தூரத்தில்... தொடு தூரத்திற்கப்பால் பறந்து போவது போல... இது வெறும் கனவு தானே... நிஜமாக இருந்து விடக்கூடாதே..

வெள்ளவத்தையில் இருந்து பம்பலப்பிட்டியில் உள்ள அவனது இருப்பிடம் இரண்டு மைல் தூரம் தான் என்றாலும் ஏதோ இரு நூறு மைல்களைத் தாண்டிவிட்ட மாதிரி உடம்பல்லாம் ஓரே அசதி. மன உலைச்சலுடன் உடல் அசதியையும் கொண்டு வருமோ!

சைக்கிளைச் சுவரோடு சாத்திவிட்டு அறையில் போய்ப் படுக்கையில் விழுந்த நான் ஏதோ இனம் புரியாத வேதனையில் சிக்குண்டு புரண்டு புரண்டு படுத்தேன். உறக்கம் வரவுமில்லை. நித்திரைக்கும் விழிப்புக்கும் இடைப்பட்ட

திரிசங்கு நிலையில்.. ஏதோ கனவாய்க் கண்டு கையை வேகமாக... நல்ல வேளை! அருகில் மேசை மேல் இருந்த 'ரதி-மன்மதன்' சிலை கீழே விழாமல் கையேந்தலாய்ப் பிடித்துக் கொணடேனோ சிலை மயிரிழையில் தப்பியதோ!

நிமிர்ந்து மணிக் கூண்டைப் பார்த்தேன். நான்கு மணி! எழுந்து அவசர அவசரமாகப் புறப்பட்டுக் கொண்டு கடற்கரையை நோக்கி நடந்தேன்.

வழக்கமாகச் சாந்தாவும் நானும் சந்திக்கும் அந்தத் தோணிக்கருகில் அமர்ந்து கொண்டேன். மஞ்சள் பூசி, நீலக்கடலில் குளிக்க ஆயத்தம் செய்யும் ஆதவனும், நீலப் பட்டுப் புடைவையில் ஊர்ந்து திரியும் வண்ணாத்திப் பூச்சியாய் அங்கும் இங்கும் பொட்டுப் பொட்டாய்த் தோன்றும் தோணிகளும் இன்னும் பிறவும் என் உள்ளத்தைக் கவரவில்லை. எல்லாம் ஒரே மாயை என்ற ஏதோ விரக்தி தான் மனத்தில் மேலோங்கி நின்றது.

அதோ! தூரத்தில் அந்தக் கடலை விற்கும் பையனுக்குப் பின்னால் அவள்-சாந்தா தான் வருகிறாள். வரட்டும் என்ன செய்கிறாள் பார்க்கலாம். நான் அவளைக் காணாதது போல் திரும்பி உட்கார்ந்து கொண்டேன். என் ஆட்காட்டி விரலோ வெண் மணலில் ஏதோ அர்த்தமில்லாமல் கிறுக்கிக் கொண்டிருந்தது.

பின்னால் ஒரு மெல்லிய கனைப்புச் சத்தம், ஆ..அ..அ..அது என் சாந்தாவுடையது தான். என்ன செய்கிறாள் என்று தான் பார்ப்போமே. நான் கேட்காதது போல் உட்காரந்திருக்கிறேன். ஏன்தான் என் மனம் இப்படி முரண்டு பிடிக்கிறதோ!

"ஸ்ரீ" என்று கனிவாய் மொழிந்தபடி என் கண்களைப் பின்னாலிருந்து பொத்துகிறாள்.

"யார் அது?" என்றபடி கைகளைப் பற்றி விடுகிறேன்.

"வேறு யார் இப்படி உங்கள் கண்களைப் பொத்துவார்கள்.?" என்றவளின் விழிகள் என்னமாய்க் கலங்கிவிட்டன. அப்பப்பா! பெண்களுடன் பேசும் போது எவ்வளவு விழிப்பும் முன்னெச்சரிக்iயையும் வேண்டியிருக்கிறது.!

"என்ன ஸ்ரீ இப்படிப் பலமான யோசனை: கப்பல் கவிழ்ந்துவிட்ட மாதிரி?"

கப்பல் கவிழவில்லை. சுக்குத்தான் திசை மாறிவிட்டது என்றேன் விட்டுக்கொடுக்காமல்.

"ஏன் ஸ்ரீ புதிர் போடுகிறீர்கள்? உள்ளதைச் சொல்லாமல் உண்மை அன்பு இருக்குமிடத்தில் ஒளிவு மறைவு ஏன் ஸ்ரீ?"

"சாந்தா உன்னை ஒன்று கேட்பேன். மறைக்காமல் பதில் சொல்வாயா!"

"உங்களுக்கு மறைப்பேனா? கேளுங்கள் ஸ்ரீ."

"சாந்தா நீ உண்மையிலேயே என்னைக் காதலிக்கிறாயா?"

"ஏன் இந்த சந்தேகம்?"

"சாந்தா, நீ செல்வத்தில் பிறந்து, செல்வத்தில் வளர்ந்து செல்வத்தில் மிதப்பவள். நானோ... ஏதோ இளமை வேகத்தில் காதல் வலையில் சிக்கிக் கருத்தால் இணைந்தோமே தவிர, நம் கடந்த காலத்தையும் எதிர்காலத்தையும் எண்ணிப் பார்த்தோமா..?"

"ஸ்ரீ! நீங்கள் என்னவெல்லாமோ மனதில் வைத்து குமைந்து கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் ஏழையாகப் பிறந்ததும், கூலிக்காரனாக் எங்கள் வீட்டிலேயே வேலை செய்ததும்.."

"சாந்தா!"

"ஆம் ஸ்ரீ அடுத்த வீட்டு அக்காவின் உதவியால் முன்னுக்கு வந்ததும் எல்லாம் தான் முன்கூட்டியே அறிவேன். உங்கள் விடாமுயற்சியையும் அயராத உழைப்பையும் திடசித்தத்தையும் அந்த அக்கா வாயிலாகக் கேட்க கேட்க என் கருத்தை உங்கள் வசம் இழந்துவிட்டேன். உங்கள் வாழ்விலும் தாழ்விலும் நான் நிழலாய்த் தொடர்ந்து துணை நிற்பேன். கலவரம் வேண்டாம்."

"அப்பொழுது நீங்கள் அப்பாவுடன் பூந்தோட்டத்தில் உலவியபோழுது நான் அந்தப் பக்கம் சென்றேன். அப்பா உங்களுடன் பேசிக்கொண்டிருந்ததைச் செடி மறைவில் நின்றபடி கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். உங்களை அடையாளம் கண்டுகொண்டதும் எங்கே நம் காதலைத் துண்டித்துவிடும் படி உங்களை வேண்டப் போகிறாரோ என்று பயந்தேன். அவர் உங்களை

விரும்புகிறார். உங்கள் பழைய வரலாறு என் மனதை மாற்றிவிடும் என்று எண்ணிவிட்டார். என்னைப்பற்றி அப்பா புரிந்து கொண்டது அவ்வளவுதான். பாவம் அப்பா!"

"சாந்தாவுக்குச் சொல்லதே!" என்று அப்பா உங்களுக்குச் சொன்னதும் உங்கள் முகம் மாறியதை அப்போதே அவதானித்தேன். அப்பொழுது உங்களுடன் பேச அவகாசமில்லாமல் போய்விட்டது. உங்களைக்கண்டு என் உள்ளக் கிடக்கையைப் பேசும் வரையில் என்னளவு தவித்துப்போனேன் நான். ஸ்ரீ! உங்கள் இலட்சிய வாழ்க்கையில் நான் ஒரு போதும் இடைஞ்சலாய் இருக்கமாட்டேன். என்னைக் கைவிட மாட்டீர்களே!" என்றவள் என் மார்பில் முகம் புதைத்தபடி விம்மினாள்.

கீழ் வானத்தில் தாரகைத் தோழிகள் புடைசூழ வெண்ணிலவுப் பெண்ணரசி வீதிவலம் வரத்தொடங்கிவிட்டாள்.

– தினகரன் , மாசி 1970 –

# மூடுதிரை

"டேய் சண்முகம்! எழும்படா கழுதை. விடிய விடியத் துரைக்கு இன்னும் தூக்கம் தீரயில்லை.... ஆங்.....".

பாதி ஏளனமும், பாதி அதிகாரமும் கலந்து தெறித்த கணக்கப் பிள்ளை கனகலிங்கத்தின் அதட்டல் சண்முகத்தின் செவிப்பறையில் நாராசமாக முட்டி மோதி அவனை விழிக்க வைக்கிறது.

"ம்: ஊஹும்...." என முனகியபடியே போர்வையை மேலும் சற்று இறுக்கமாக இழுத்துப் போர்த்தவன் பாதி நைந்து போன அந்த மாச்சாக்கில் புரண்டு படுத்து: கணக்கப்பிள்ளையை அவன் உதாசீனம் செய்தான்.

கனகலிங்கத்தின் நெஞ்சில் ஆத்திரம் மண்டியது "விடிந்து இவ்வளவு நேரமாகியும் எழுந்து வரவும் காணோம்: எழுப்பினால் கூட உசும்பிகிறான் இல்லையே !"

என மனதிற்குள் புழுங்கியவர் " பாரன் அவற்றை திமிரை ! இது என்ன கொப்பன் வீடு என்று நினைப்போ, நேரத்திற்கு எழும்பி தன் காரியங்களைத் தான் கவனிக்காமல் ...... இனித் திருப்பள்ளியெழுச்சி பாட நான் வர வேணுமோ? வரட்டும் முதலாளிகிட்டே சொல்லி...."

கனகலிங்கத்தின் கீழுதடு பற்களுக்குள் சிறைப்பட்டு அவதிப்பட்டது.

" என்ன சொல்லப் போறியள்?'

படுத்திருந்த நிலையில் தலையைப் பக்கவாட்டில் நிமிர்த்தி கண்களைக் கூசி வினவினான் சண்முகம். அந்த நோக்கில் எத்தனை ஏளனம்! அவன் குரலில் தான் எவ்வளவு நையாண்டி!"

" நீா மறுகதை பேச வெளிக்கிட்டு விட்டீா என்ன? முதலாளி வரட்டும், உனக்கு காட்டி வைக்கிறன். ஓ.."

" ஓ முதலாளி வரட்டும் பாா்ப்போம் " இது சண்முகம்.

"இதர சிப்பந்திகளின் முன்னிலையில் சண்முகம் தன்னை அவமதித்த ஆத்திரத்தில் நிலை கொள்ளாமல் கறுவிக்கொண்டே விறுவிறுப்பாகக் கடையின் முன்பக்கம் சென்ற கனகலிங்கம் பணம் வைக்கும் இரும்புப் பெட்டிக்கு நோ் மேலே சுவரில் மாட்டப்பட்டிருக்கும் சட்டம் போட்ட பெரிய வினாயகா் படத்திற்கு பூ வைத்து, ஊதுபத்தி கொளுத்தி, கற்பூரம் ஆராதனை காட்டி, பின் நெற்றியில் விபூதி அணிந்து, பொட்டிட்டுக் கல்லாப்பெட்டியின் அருகில் சாவகாசமாக அமருகிறாா்.

பதினைந்து வருடங்களுக்கு முன், பதினைந்து வயதுச் சிறுவனாக வாாிவிடப்படாத தலையும், குழி விழுந்த விழிகளும், முட்டி வயிறும், வற்றிய உடம்புமாக அந்தக் கடைக்கு எடுபிடி வேலைக்காரனாக வந்து சோ்ந்த கனகுப் பொடியனைக் கண்டு இந்தப் பூனையும் பால் குடிக்குமோ?" என எவரும் நாக்கை வளைத்தனா். அப்படி வெகுளி என்ற அடைமொழியைச் சுமந்து கொண்டு உலகம் தொியாப் பயிராக அந்தக் கடையில் நுழைந்தவன். இப்போது கணக்கப்பிள்ளை என்ற ஸ்தானத்திற்கு உயா்ந்திருக்கிறான் என்றால் வியாபாரத்தின் நெளி[illegible] சுளிவுகளைக் கற்றறியும் சாமா்த்தியமும் கடின உழைப்பும் விடாமுய[illegible] தான் காரணம்.

முதலாளியின் [illegible]னமறிந்து அதற்கேற்றவாறு பிற்பாட்டுப் பாடக் கற்றுக் கொண்ட கனகலிங்கத்தை கணக்கப்பிள்ளையாக்கி கல்லாப்பெட்டியில் அவா் அமா்த்தியதில் ஆச்சாியமில்லைத்தான்.

கனகலிங்கத்திற்கோ புதிய பதவி தலைக்கனத்தை ஏற்றிவிட்டது. விற்பனையாளாிடம் கண்டிப்பும் கறாரும் காட்ட ஆரம்பித்தான். முதலாளி அவாிடம் கடை நிா்வாகத்தை ஒப்படைத்துவிட்டு ஊருக்குச் செல்லும் போதெல்லாம் கனகலிங்கத்தின் அதிகாரம் ஆட்சி செலுத்தும். கணக்கப்பிள்ளை தன் இஷ்டப்படி சிப்பந்திகளை ஆட்டி வைக்க முற்பட்டான்.

அவனுடைய கெடுபிடி தாங்காது, அந்தக் கடையில் வேலைக்கு நிற்கத் தமக்குச் சரிப்பட்டு வராதென வேலையை உதறிவிட்டுச் செல்பவர்கள் பலர்.

கடையின் முன்கதவுகளை மாலை ஐந்து மணிக்கே அடைத்துச் சட்டத்திற்கே மூடுதிரையிட்டாலும் உள்ளே வேலைகள் இயந்திரகதியில் இயங்கிக் கொண்டுதான் இருக்கும். அன்றன்று லொறியில் வந்து இறக்குமதியான பொருட்களை ரகம் பிரித்து அடுக்கிவைப்பது, கணக்கெடுப்பது, விலை குறிப்பது, புகையிலைச் சுருட்டுகளுக்குக் கோடாத் தோய்ப்பது, வெற்றிலைக்குத் தண்ணீர் தெளித்து அடுக்குவது போன்ற இத்தியாதி வேலைகளில் மத்தியில் சிப்பந்திகள் பம்பரமாய்ச் சுழல்கையில், கேவலம் மாசம் முடிவில் அவர்கள் வரவில் எழுதப்படப் போகும் ஐம்பதோ அறுபதோ ரூபாகாசுக்காகத்தான் இந்த ஆட்டமெல்லாம் என்னும் வேதனை பார்ப்போர் நெஞ்சில் வண்டல் மண்ணாய்ப் படியும்.

சண்முகம் ஆறு மாதங்களின் முன் இந்தக் கடைக்கு வேலைக்காகப் புறப்பட்டு வந்தபோது, " அடே சண்முகம் ! போயும் போயும் உந்தக் கடையிலேயா வேலைக்குப் போகிறாய். முதலாளி ஆள் படு கறார் பேர்வழி : காசு கறக்க மாட்டாய் இலேசிலே" எனத் தெரிந்தவர்கள் இடித்துரைத்த போதெல்லாம்.

"விடுங்கோடா வெட்டிப் பேச்சை: நாங்கள் சரியாக நடந்தால் எல்லாம் தானே சரிவரும் " என மறுத்துரைத்துவிட்டு வந்து வேலையற்றவனுக்கு இங்கே என்னவென்றால்.....? சத்தியம் ஒழுங்கு கண்ணியம் இவையெல்லாம் வர்த்தகத்தைப் பொறுத்தளவில் வெறும் பேச்சாகிப் போய்விட்டதைக் கண்டு வெறுப்படைந்தான்.

முதல் நாளிரவு லொறியில் வந்த மா மூட்டைகளைச் சுமந்ததால் உடம்பு முழுவதும் மூட்டு மூட்டாய் வலிக்க எழுந்திருக்கவும் தெம்பில்லாதவனாய்ப் படுத்திருந்த சண்முகத்தை கணக்கப்பிள்ளை கனகலிங்கம் தன் கால் பெருவிரலால் சுறண்டி எழுப்பிய ஆத்திரத்தில் ஏதோ இரண்டு வார்த்தைகள் கணக்கப் பிள்ளைக்குச் சூடாக கொடுத்துவிட்டான். " ஏதோ முறுக்கிக் கொண்டு போகிறாரே ! போகட்டும் ... போகட்டும்..." என முணுமுணுத்தபடி நீட்டி நிமிர்ந்து படுத்தான் சண்முகம்.

எதிர்சுவரில் ஆணியில் தொங்கிய சட்டையின் பைக்குள் இருந்து தலையை நீட்டி அவன் கவனத்தை ஈர்த்து கடந்த தினம் அவனுக்குத்

தாயிடமிருந்து வந்த கடிதம், பெற்றவளின் நினைவு நெஞ்சில் படர உடல் வலியிலும் பார்க்க உள்ளத்து வலி மீறி வர கண்கள் பனித்தன.

அடிக்கடி மீண்டும் படிக்க வேண்டும் என்ற துடிப்பு உழுந்து கடிதத்தை எடுத்தவன் மீண்டும் படுக்கையில் சாய்ந்தபடியே வாசிக்கலானான். பக்கத்து வீட்டுப் பரமேஸ்வரிப் பெட்டையின் முத்து முத்தான கையெழுத்தில் அன்னையின் பிரலாபங்கள்.

“,..... பட்சம் மறவாத அருமைமகன் சண்முகத்திற்கு ! ஆண்டவன் கிருபையால் இவ்விடம் ஏதோ இருக்கிறோம். இரண்டு வருடக் குத்தகைக் காசு கொடுபடவில்லை என்ற காரணத்தால் தோட்டத் தரையெல்லாம் கல்வீட்டு மாணிக்கர் வேறு யாருக்கோ பயிர்ச் செய்கைக்குக் கொடுத்துவிட்டாராம். கொப்பருக்கும் இந்தவாட்டி தொழில் இல்லை. எனக்கும் கால்வாதம் குத்திக் கரச்சலாய் இருக்கு. செலவுப் பாடு மிகவும் திண்டாட்டமாய் இருக்கடி அப்பு. ஏதோ உன்னாலை இயன்றதை அனுப்பு.

“பெற்றவள் உடல்நலமின்றி இருக்கிறாள். செலவிற்கு எவ்வளவு கஷ்டப்படுகிறாளோ, ஐயோ! நேரில் போய் பார்க்காவிட்டாலும் சிறிதளவு பணம் அனுப்பினாலும் அவர்களுக்கு ஆறுதலாக இருக்குமே !” என்ற நினைப்பே நெஞ்சில் கனக்கின்றது.

எப்பொழுதாவது பணம் என்று கேட்கப் போனால் முதலாளி ருத்திர மூர்த்தியாகி விடுவார். “அடேய் சண்முகம் ! உன்ர காசை நான் கொண்டு ஓடவில்லை ! உனக்கு மாசா மாசம் காசைத் தந்தால் வாலிப முறுக்கிலை காசை விரயமாக்கி விடுவாய், கடைசியிலை அது உனக்கு ஒரு முதலாகச் சேரட்டும். நீ வியாபாரத்தைப் பழகி ஒரு முதலும் சேர்த்துவிட்டால் பின்பு உனக்குத்தானே நல்லது ...” என்று நயமாகவும் தந்திரமாகவும் கண்டிப்பாகவும் பேசி அவனைத் திருப்பி அனுப்பிவிடுவார்.

சிப்பந்திகளுக்குச் சம்பளத்தை மாதாமாதம் கொடுத்து கணக்குத் தீர்த்து விட்டால், இடையில் சொல்லாமல் கொள்ளாமல் அவர்கள் கம்பி நீட்டி விடுவார்களே என்ற பயமும், சம்பளப் பணம் கொடுபடாமல் கடையில் இருந்தால், ஒரு முதலாகச் சேர்ந்து கடைக்கு இலாபம் பெருகிக் கொண்டிருக்குமே என்ற எண்ணமும்தான் முதலாளிக்கு !

"சரி சரி பொறுத்துப் பார்க்கலாம். முதலாளியுடன் சச்சரவுப்பட்டுக் கொண்டு போய் வீட்டில்தான் என்ன செய்வது பார்க்கலாம்" என்று ஒரு நெட்டுயிர்ப்பிலே கவலைகளை ஊதித் தள்ளிவிட்டு மீண்டும் காரியங்களைக் கவனிக்கச் சென்றுவிடுவான்.

கடிதத்தை மடித்து மீண்டும் சட்டைப் பைக்குள் திணித்த சண்முகம், சாரத்தையும், பனியனையும் எடுத்துச் சுருட்டிக் கொண்டு குளத்தடிக்குச் சென்றான். படிக்கட்டில் உடைகளை வைத்துவிட்டுப் பல் துலக்கிய வண்ணம் புடவை தோய்க்கும் கல்லின்மேல் அமர்ந்து விட்டான். எண்ணக் குமிழிகள் வெடித்துச் சிதறின.

" இனி மாதாந்தம் முதலாளியிடம் பணத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்..

... எப்படியும் இல்லை இல்லை என்று போனாலும் ஒரு முன்னூறு ரூபா காசு என் கணக்கில் தேறும். இந்த ஆறுமாதங்களுக்குரிய சம்பளப் பணத்தில், ஒருமுறை ஊருக்குப் போகும்போது ஐம்பது ரூபா வேண்டியிருக்கிறேன். ஒருமுறை பாரம் தூக்கிச் சுழுக்கி நோவுக்கு மருந்து கட்ட ஒரு பதினைந்து ரூபா வேண்டியிருக்கிறேன்.. மீதி ஒரு இருநூறாவது இருக்கும். முதலாளி வரட்டும் முழுப் பணத்தையும் வேண்டி ஊரில்பட்ட கடன் எல்லாம் தீர்த்து விட வேணும். அம்மாவிற்கு ஒரு சேலை, அப்புவுக்கு வேட்டி... அம்மாவின்ர காது கூட மூளியாக இருக்கு. ஒரு சோடி தோடு வாங்க வேணும். இன்னும் ... இன்னும்... அவள் பரமேஸ்வரிக்கு ஒரு முத்துமாலை...

பரமேஸ்வரி ! அந்தக் கள்ளி ! அவள் அன்று தனியாக இருந்தபோது என்னைக் கல்யாணம் கட்ட சம்மதமா என்று கேட்டதற்கு என்ன சொன்னாள்.

அத்தான் நான் தையல் வேலை செய்து வீட்டில் இன்னும் ஆடோ, மாடோ, கோழியோ வளர்த்து சீவியத்தைக் கொண்டிழுக்கும் நம்பிக்கை எனக்கு இருக்கு. இருந்தாலும் நீங்கள் ஒரு கௌரவமான தொழிலில் ஈடுபடுங்கள். கழுத்தை நீட்டுகிறேன் என்று நயம்பட அவள் சொன்ன வார்த்தைகள்.

இம்முறை ஊருக்குப் போய் " இப்போ என்ன சொல்கிறாய் ? " என்று அவளைக் கேட்பேன்.

அவள் வாய்ப் பேச்சிற்கு இடமின்றி நாணத்தால் தலைகுனிந்து நிற்பாள். இல்லை வெட்கத்தில் ஓடுவாள்... நான் பின்னே ஓடி அவளைப் பிடித்து...

திடீரென உடல் இலேசாகி இரு இறக்கைகள் முளைத்து ஆகாயத்தில் பறப்பதுபோலவும், வெண்முகிற் கூட்டங்களுக்கிடையே சர்வாலங்கார பூஜிதையாகி பரமேஸ்வரி தன்னை எதிர் கொண்டழைப்பது போலவும் ஏதோ ஒரு சுகானுபவ லயிப்பில் ஆழ்ந்து போய் கனவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்த வேளை ...

" என்னடா சண்முகம் ! யோசனை பலமாயிருக்கு ?" என்ற சச சிப்பந்தியான துரையின் குரல் அவனை யதார்த்த உலகிற்கு அழைத்து வந்தது.

குளிக்கவும் மறந்து யோசனையில் ஆழ்ந்துவிட்டதை அப்பொழுதுதான் உணர்ந்த சண்முகம் " இல்லை துரை ! என்னுடைய நிலைமையை நினைக்கத்தான்."

"அட..... கவலையை விட்டுடா ! துன்பம் என்றால் உனக்கு மட்டும்தான் என்று எண்ணுகிறாயா ?"

என் மனமறிய நான் ஒருவருக்கும் தீங்கிழைத்தது கிடையாதே ! எனக்கு ஏன் இந்தச் சோதனை .... எப்படியும் எனக்கு ஒரு எதிரி முளைத்துவிடுகிறானே..., இப்பொழுது கணக்கப்பிள்ளை ரூபத்தில்....

"எப்படியடா காரியத்தைக் கவனிப்பது? என் மனச்சாட்சிக்கு விரோதமாக என்னால் செயல்பட முடியவில்லையே துரை !".

துரை பல சமாதானங்கள் சொன்னான். ஏனோ துரையின் சமாதானங்களை சண்முகத்தால் ஏற்க முடியவில்லை. "சரி அப்பா ! இது தீராத தலைவலி. நம் இருவருக்குள்ளும் தீர்ந்துபோகும் பிரச்சனை அல்ல. இதற்கு ஒரு விடிவை நாம், நாமாகவே ஏற்படுத்த வேண்டும்" பேச்சுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டுக் குளத்தில் இறங்கி நீரில் அமுங்கினான்.

இப்பொழுதெல்லாம் கனகலிங்கம் சண்முகத்துடன் பேசும்போது அளந்துதான் பேசுவார். அவனிடம் கதை கொடுத்து வீணாக மூக்குடைபட வேண்டி வருமேயெனப் பல்லைக் கடித்துக் கொண்டிருந்தார். " முதலாளி வரட்டும் " என அவரின் உள்மனம் " கறுவிக் கொண்டிருந்தது.

திடீரென ஒருநாள் இரவு, யாவரும் வேலையை முடித்துக் கொண்டு தூக்கத்தில் ஆழ்ந்திருக்கும் வேளை யாரோ கதவில் தட்டும் ஓசை கேட்டது. முதலாளிதான் வந்துவிட்டார். இப்பொழுதெல்லாம் முதலாளி சொல்லாமல்

கொள்ளாமல் அகால வேளைகளில் வந்திறங்குவது சகஜமாகிவிட்டது. அதற்குக் காரணம் அவர் கள்ளக் கடத்தலில் ஈடுபட்டிருப்பதுதான் என்று சொல்லிக் கொள்கிறார்கள்.

முதலாளி வந்துவிட்டார். ஒரு பிரளயமே நடக்கப் போகிறது. கனகலிங்கத்தின் குற்றப் பத்திரிகை வாசிப்பில் ஒரு பூகம்பமே ஏற்படும். அதன் பிரதிபலிப்பாகத் தன் சீட்டும் கிழிபட்டுவிடும் என ஏங்கிக் கொண்டிருந்த சண்முகத்திற்கு கனகலிங்கத்தின் நீண்ட மௌனம் வியப்பையூட்டியது. கதை வெளிப்பட்டால் எங்கே தன் திருகு தாளங்களும் அம்பலமாகிவிடுமோ என்ற பயம்தான் அந்த மௌனத்திற்குக் காரணமோ!

கனகலிங்கம் முதலாளி முன்னிலையில் சண்முகத்துடன் இன் முகத்தில் உரையாடுவதும், முதலாளியிடம் குழைவதும் சண்முகத்தின் மனதில் இனமறியாத குழப்பத்தையும் ஆச்சரியத்தையும் விளைவித்தது. ஏன் இந்த அமைதி?

அன்று முதலாளி பகல் ஆகாரத்தை முடித்துக் கொண்டு சாவகாசமாகச் சாய்மனைக் கதிரையில் சாய்ந்திருக்கும் வேளை சண்முகம் மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தான்.

"முதலாளி ! நான் ஊருக்குப் போய் வர வேணும்"

"ம்... போயிற்று ஆறு நாட்களிலை திரும்பி வந்திடவேணும் விளங்கிச்சிதோ?"

" ஓம் முதலாளி"

" நீ வரத் தவறினால் வேறே ஆளை உன்னுடைய இடத்திற்குப் போட்டிடுவன்".

"இல்லை முதலாளி கட்டாயம் வந்திடுவன்..."

.............

"ம்...ம்....பிறகென்ன நிண்டு முழிகிறாய்?"

"முதலாளி எனக்கு வரவேண்டிய காசு..."

"காசோ? எவ்வளவு வேணும்!"

"இருநூறு ரூபா தேவை"

"இருநூறோ? என்ன கணக்கிலை ! என்ன பகிடி பண்ணுகிறீரோ?"

"ஏன் முதலாளி? ஆறு மாசம் எழுபத்து ஐந்து ரூபாய்க் கணக்கின்படி பார்த்தாலும்.."

"என்ன கணக்கிலை எழுபத்தைந்து ரூபா ? ஐம்பதுதான் போட்டிருக்கு.." நீ உடுப்புகள் எடுத்திருக்கிறாய்...."

சண்முகத்திற்கு நா எழ வில்லை. கடையில் வேலைக்கு வரும்படி தன்னை ஆசைகாட்டி அழைத்தபோது முதலாளி பேசிய தேன் சிந்தும் வார்த்தைகளும் இப்பொழுது அவர் பேசும் தோரணையும் நினைத்தால் இனாமாக 'வேட்டி, ஷேர்ட்' எல்லாம் முதலாளி எடுத்துக் கொடுத்ததாக மகிழ்ந்திருந்த அவனுக்கு அதன் விலையைக் கூடச் சம்பளத்தில் கழிக்கப் போவதாக முதலாளி சொன்னதும் விரக்தியில் அவன் குன்றிப் போய்விட்டான்.

என்ன இழவோ தருவதைத் தரட்டும் என அவன் யோசித்துக்கொண்டே தனது உடுப்புப் பெட்டியை எடுத்துத் துணிகளை அடுக்குவதில் முனைந்தான்.

"சண்முகம் ! நீ இப்போ போய் " கே.வீ.எஸ் " கடையிலை உழுந்து வந்திருக்கா என்று பார்த்துக் கொண்டு. கந்தோருக்குப் போய் இந்தக் கடிதத்தையும் தபாலில் சேர்த்துவிடு" என்று ஒரு கடிதத்தை நீட்டினார் அங்கு வந்த கணக்கப்பிள்ளை கனகலிங்கம்.

" எங்கே கொஞ்சம் தாமதித்தால் கூட என்ன வில்லங்கங்கள் விளையுமோ?" என்று பயந்த சண்முகம் அடுக்கிக் கொண்டிருந்த உடுப்புக்களை அப்படியே விட்டது விட்டபடி கடிதத்தையும் பெற்றுக் கொண்டு புறப்பட்டான்.

சண்முகம் எல்லா விபரங்களையும் முடித்துக்கொண்டு வர இரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாகி விட்டது. கடைக்குள் பிரவேசித்த சண்முகத்திற்கு அங்கு நிலவிய சூழ்நிலை அச்சத்தை ஊட்டியது. அவனைக் கண்டதும் "இங்கே வாடா திருட்டு றாஸ்கல் ! என்று முதலாளி போட்ட கர்ஜனையில் அதிர்ந்து போய் முதலாளியின் முன் சர்வாங்கமும் பதற நின்று விழித்தான். அவரின் கண்கள் கொவ்வைப்பழமாய்ச் சிவந்திருந்தன. உதடுகள்

மேவிச் சடைத்துத் தொங்கும் மீசை துடிக்க முகத்தில் அத்தனை விகாரம் ஏன்? கரங்களைப் பின்னால் கட்டிய படி முன்னும் பின்னும் உலாவிக் கொண்டிருந்த முதலாளியைக் கண்டதும் ஏதோ அசம்பாவிதம் நிகழ்ந்துவிட்டது என்பதை ஊகிக்க சண்முகத்திற்கு அதிக நேரம் பிடிக்கவில்லை.

"டேய் கழுதை ! உண்மையைச் சொல்லிப் போடு ! " முதலாளியின் கர்ஜனை கடையின் "சீலிங்" முகட்டையும் முட்டி மோதி எதிரொலித்தது.

" என்னசொல்லுறியள் முதலாளி? என்றான் சண்முகம் நெற்றியைச் சுருக்கியபடி.

"ஒண்டும் தெரியாத மாதிரி மாயம் கொத்தாதை. நீ தானே எடுத்தனி?"

"எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. என்ன நடந்தது முதலாளி? என்றவன் பார்வையை சுற்று முற்றும் மேய விட்டான்.

சக சிப்பந்திகளின் பீதி கலந்த முகங்கள் அவனுக்கு இன்னும் குழப்பத்தை கொடுத்தனவே தவிர ஒன்றும் விளங்குவதாயில்லை. கணக்கப்பிள்ளை கனகலிங்கம் ஏதோ "சிட்டைகளைப்" புரட்டியபடி முதலாளியின் பக்கத்தில் பவ்யமாக நின்றார்.

திடீரென சண்முகத்தின் உடுப்புப் பெட்டியைத் தன் பக்கம் இழுத்த முதலாளி அதற்குள் அடுக்கப்பட்டிருந்த உடுப்புக்களை வாரி வீசி எறிந்தார். பெட்டியின் அடியில் ஒரு வேட்டி மடிப்பிற்குள்.....

...... காசுக்கற்றைகள் !

ஐயோ ! இது யார் செய்த வேலை? கணக்கப்பிள்ளை கனகலிங்கம் கண்ணில் ஏளனம் தெறிக்க. கொடுப்புக்குள் சிரித்தபடி பெருமிதம் பொங்கப் பார்த்தான்.

"நான் அப்பொழுதே நினைத்தேன். இவன்தான் பணத்தை எடுத்திருப்பான் எண்டு" என்றார் கணக்கப்பிள்ளை.

"ஐயோ ! நான் பணத்தை எடுத்தேனா?"

"நீ கையும் களவுமாக அகப்பட்டுவிட்டாய். காசு இரண்டாயிரம் காணவில்லை. இதிலே அறுநூறு இருக்கு. மீதியை என்ன செய்தாய் உண்மையைச் சொல்லும்?"

"ஐயோ ! முதலாளி நான் ஒன்றும் அறியேன். இது யார் செய்த சதியோ... கடவுளே !" சண்முகம் கதறினான். தலைமயிரைப் பிய்த்தான்: மன்றாடினான். அவனுடைய கதறல் யார் காதிலும் விழுந்ததாகத் தெரியவில்லை.

"பொலிசைக் கூப்பிடப் போகிறேன் உண்மையைச் சொல்லு" என்ற முதலாளி "போன்" அருகில் போய் நின்றார்.

கணக்கப்பிள்ளை இடைமறித்தார். சண்முகம் பக்கம் திரும்பி, "தம்பி ! உண்மையைச் சொல்லு ! சொன்னால் இவ்வளவோடு முடிந்து போகும் அல்லது பொலிசு வழக்கு என்று ... " ஏதோ சமரசம் பேசுபவர் போல கணக்கப்பிள்ளை சண்முகத்திடம் தயவாகச் சொல்லப் போக சண்முகம் அவரை வெறித்துப் பார்த்தானே ஒரு பார்வை. கணக்கப்பிள்ளை பெட்டிப்பாம்பாக அடங்கிவிட்டார்.

சண்முகம் புதிய துணிவோடு நின்றான்.

"தம்பி ! இந்த நாயின் கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளு" எனக் கர்ஜித்தார் முதலாளி.

சண்முகம் அலட்சியமாய்ச் சிரித்தான்.

"அந்தச் சிரமம் உங்களுக்கு வேண்டாம்" என்று விறைப்பாகச் சொன்னவன் துணிகளைப் பொறுக்கியெடுத்துப் பெட்டிக்குள் திணித்துக்கொண்டு சக சிப்பந்திகளுக்கு மௌன மொழியில் விடை பகர்ந்தவன். பெட்டியை எடுத்துக் கொண்டு வெளி வாசலைத் தாண்டிப் பாதையில் இறங்கினான்.

ஏதோ எண்ணியவனாக நின்று திரும்பியவன் காலையும், மாலையும் தொழும் அந்த வினாயகரை நோக்கினான். கண்கள் பனித்தன. மறுகணம் விறு விறுவெனப் பாதையில் இறங்கி நடந்தான்.

அப்போது விநாயகர் படத்தின் பின்னால் மறைத்து வைத்திருந்த ஆயிரத்து நானூறு ரூபாவையும் அப்புறப்படுத்தும் வழியைத் தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தார் கணக்குப்பிள்ளை கனகலிங்கம்.

– கற்பகம், 1971 –

# இலாபக் காசு

"**அ**ம்மா! இண்டைக்குச் சமையலுக்கு அரிசி இல்லை, கறிச் சரக்குகளும் முடிஞ்சு போச்சு."

அடி வளவுக்குள் இருந்து காய்ந்த மூரித்தண்டுகளும் பனை மட்டைக் கங்குகளுமாக விறகு கட்டை சுமந்துகொண்டு வந்து முற்றத்தில் போட்டுவிட்டு திண்ணையில் இளைப்பாறப்போன பொன்னாம்மாவிற்கு, மதியச் சமயலைப் பற்றி மகள் சரஸ்வதி கொடுத்த முன்னெச்சரிக்கை, அலுப்பைக் கொடுத்தாலும், தான் படுத்தால் காரியங்கள் எல்லாம் படுத்துவிடும் என்ற பொறுப்புணர்ச்சியில் விளைந்த வேதனை நெஞ்சை அழுத்த...

"ம்..., எனக்கு ஒரு நாளும் அடங்காது; ஓட்டமும் பாட்டமும்தான். பெட்டியைக் கொண்டுவா! களையோட களையாக கூப்பன் அரிசியையும் எடுத்துக்கொண்டு வர" சலிப்புடன் மொழிந்தவள், கொடியில் மடித்துப் போட்டிருந்த புடவையை எடுத்து உடை மாற்றுவதில் முனைந்தாள்.

அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்கள், பெட்டி, காசு, வாங்கவேண்டிய பொருட்களின் பட்டியல் யாவையும் தாயிடம் நீட்டிய சரஸ்வதி,

"அம்மா! இண்டைக்குச் சுப்பிரமணியம் அண்ணன் வந்தவர் அல்லோ!"

"எந்தச் சுப்பிரமணியம்?"

"அவர்தான்.. சங்கக் காரியதரிசியாக இப்ப புதுசா தெரியப் பட்டிருக்கிறார்..."

என்னவாம்?"

"அப்புவைச் சந்திக்க வேணும் எண்டார். அப்பு தோட்டத்துக்குப் போயிட்டார் எண்டு சொல்ல உங்களை விசாரிச்சார். அம்மா விறகுக்குப் போயிட்டா எண்டு சொன்னனான்."

"என்ன சங்கதியோ?" வெற்றிலைத் 'தைலா'வில் இருந்து பாக்கு வெற்றிலையை எடுத்து வாய்க்குள் அவசர அவசரமாகத் திணித்தாள் பொன்னம்மா.

"ஏதோ சங்க விசயமாம். இலாபக் காசு ஏதோ கொஞ்சம் இருக்காம். அதோட கூடுதலாக காசு கட்டச் சொல்லி..."

"நல்ல சங்கம், நல்ல இலாபக் காசு. இங்க படுகிற பாட்டுக்குள்ளை சங்கத்திற்கு இன்னும் காசு கட்ட முடியாது. அவன்கள் கிடந்தான்கள். கொண்டா பிள்ளை பெட்டியை, நான் போக..."

தலையிலே பெட்டியும் மனதிலே சுமையுமாக நடந்தாள். தெருவில் இறங்கிய பொன்னம்மாவிற்கு சங்கத்தைப் பற்றி நினைக்கையில் ஆத்திரம் ஆத்திரமாக பற்றிக்கொண்டு வந்தது. "முன்னம் ஒரு வாட்டி காசு கட்டி இலாபக் காசு கண்டதுமில்லை. கேட்டதுமில்லை. சங்க மொண்டு இருந்தும் நாங்கள் கொத்த மல்லிக்கும் கிழங்குக்கும் சீனிக்கும் படுகிற தவண்டை அடிப்பு சொல்லி மாளாது. சங்கம் எண்டு அவதிப்படுகிறான்கள். என்ன சாதிச்சவன்கள்."

"நான் இந்தக் காசு ஐம்பது ரூபா மிச்சம் பிடிச்சு வைச்சது. ஒரு மூக்குத்தி வேண்டவெண்டு. அதுக்கும் ஏதோ அனுத்த காலம் போல."

மனதில் ஒரு பட்டிமன்றம் அமைத்து பொங்கி எழும் எண்ணப் பிரவாகங்களை அலசி ஆராய்ந்து சங்கம் தேவைதானா என்று தீர்ப்புக்காணும் முயற்சியில் தோல்வியுற்றவளாய் நடந்தாள். நறுவிலி வைரவர் கோயில் முடக்கையும் தாண்டி அடிப்பாதை இட்டுச் செல்லும் பனங்காணித் தொங்கலை அடைந்து விட்டவள் யாரோ கூப்பிட்ட குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

கமலாம்பிகை தான் வந்து கொண்டிருந்தாள். கணவனுடன் கொழும்பில் இருந்தவள். வயது என்னவோ ஒரு முப்பதைத்தான் சேரும். என்றாலும் மற்றப் பெண்களைப் போல் ஒரு டாம்பீகம், எடுப்புச் சாய்ப்பு, கர்வம் துளி கூடக் கிடையாது. இப்போதைய சிங்காரிகள் சிதறுதொங்கலும், குருவிக் கொண்டையுமாக அலங்காரத்திலேயே வாழ்க்கையின் அரைப்பொழுதை விரயமாக்குகிற நேரம், இவள் ஊரில் உற்பத்தியாகிற கைத்தறிச் சேலையைக் கொண்டு பழைய பாணியில் தான் உடுப்பு; சாதாரண குடுமி. கர்வம் துளிகூட இல்லாத அடக்கமான பெண். இவளுடைய கணவன் வகிக்கிற உத்தியோகத்திற்கு இவள் ஒன்றுக்கு மூன்று வேலைக்காரரை அமர்த்த முடியும். ஆனால் 'தன் கையே தனக்குதவி' என்ற தன்மான உணர்ச்சி, உழைக்க வேணும் என்ற துடிப்பு, அவளை இப்போது சங்கக்கடைக்கு பெட்டியுடன் கால் நடையாக வர வைத்திருக்கிறது.

"கொழும்பிலையிருந்து எப்ப வந்தனி பிள்ளை?" என்றாள் பொன்னம்மா வாயெல்லாம் பல்லாக.

"நான் வந்து ஒரு கிழமை இருக்கும். மாமி. எனக்கு அந்தப் பட்டினத்திலே இருந்தாலும் மனம் இங்கதானெணை. பள்ளிக்கூடம் போகிற பிள்ளைகளை இங்கே விட்டுட்டு அங்கை இருக்க மனம் கேட்கயில்லை. எவ்வளவுதான் சொகுசாக திண்டு குடிச்சிருந்தாலும் ஊரில் கிடைக்கிற நிம்மதியும் ஆறுதலும்.."

"அது சொன்னாயே நூறு முறையும் சரி. பிள்ளை, நீயும் சங்கக் கடைக்குத்தான் போறியோ?"

"ஓம் மாமி"

"சரி எட்டி மிரி பிள்ளை. பொழுது ஏறிப்போச்சு. உங்கே எத்தினை அலுவல் கிடக்கு."

கமலாம்பிகை கொழும்பில் வசித்து வந்த கால எல்லைக்குள் ஊரில் நடந்த விருத்தாந்தங்களை பொன்னம்மா வக்கணையாக அள்ளித் தெளிக்க, கொழும்புப் புதினங்களை கமலாம்பிகை கதை கதையாக அளந்து கொட்ட நடந்த அலுப்புத் தெரியாமல் சென்றவர்கள் ஒற்றைடிப் பாதை வழியாகப் பனங்கூடலையும் தாண்டி, மக்கிப் பாதையில் இறங்கி விட்டனர். அந்த மக்கி ஒழுங்கையையும் கடந்தால் பிறகென்ன சங்கக் கடைதான்.

சர்ச்சைகளில் ஈடுபட்டுக்கொண்டு முன்னே நடந்து கொண்டிருந்த கமலாம்பிகை திடீர் 'பிரேக்' போட்டவளாய் ஏதோ காணாததைக் கண்டுவிட்ட மாதிரி 'சடக்' கெனத் திரும்பினாள். லட்சையுடன் முகம் என்னவோ பச்சைப் பாகற்காயைக் கடித்துவிட்டவள் மாதிரிப் பல கோணங்களில் நெரிந்து நொறுங்கியது.

'ஏன் பிள்ளை?' எனப் பரபரத்தபடி முன் தெருவில் பார்வையை நழுவ விட்ட பொன்னம்மாவின் உதடுகள் வெறுப்பில் பிதுங்கின.

"சீ! மூதேவிகள். பெண் பிரசு கடை கண்ணிக்குப் போக, உலாவ வழியல்லை. இது என்ன அலங்கோலமடி" எனப் புறுபுறுத்த வண்ணம் மறுபக்கம் வேலியோரமாகத் திரும்பிக் கொண்டாள் பொன்னம்மா.

அவர்கள் கண்ட காட்சி..!

அங்கே தெரு முடக்கில் யாரோ ஒரு வாலிபன் கண்ணியமற்ற முறையில் சிறுநீர் கழித்துக் கொண்டிருந்தான். ஒரு கையில் புகைந்து கொண்டிருக்கும் பீடித்துண்டு. உடுத்திருந்த சாரம் சொல்வழி கேட்காமல் அரையில் இருந்து நழுவி அடம்பிடித்தது. அப்படியும் ஒரு வெறியோ! நாகரிகம் முன்னேற்றம் என்று இளவட்டங்கள் தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கிற இந்த நாட்களிலும் இப்படியும் ஒரு வெட்கக் கேடான செயலா?

"ஆரடி பிள்ளை பொடியன்?" இது பொன்னம்மா.

"தெரியாதோ மாமி! வேறே ஆர் அவன்தான் சுந்தரம், தங்கம் அக்காவோட மோன்."

"அதுதானே பார்த்தன். வேறே ஆர் இந்தக் கிலிசை கெட்ட வேலை செய்யிறது. ஏனடி கமலாம்பி இந்த வயலுக்கு சந்து பொந்து வழிய குச்சொழுங்கை வழிய என்ன அலுவல். ஆளைப் பார்த்தால் வன்னிமாடு மாதிரி. வேலை வெட்டி இல்லாமல் திண்ணைக்கு மண் எடுத்துக் கொண்டு... இப்பிடியான ஆட்களால் தானே ஊரின்ரை மதிப்பே கெட்டுக்கிடக்கு. அவள் தங்கம் என்ன தங்கமான மனுஷி. அவளுக்குப் பாவம் இப்படி ஒரு தறுதலை வந்து பிறந்துதே!"

"பாருங்கோ மாமி! பிற தேசத்திலை உள்ளவன்கள் என்ன தொழில் எண்டாலும் சந்தோஷமாக ஏற்று, கிடைச்சதைக் கொண்டு சந்தோஷமாக,

மானம் மரியாதையாக இருக்கிறான்கள். இவை என்னடி எண்டால் நாலெழுத்துப் படிக்க முன்னம் காற்சட்டை உத்தியோகம் வேணுமாம்..."

பொன்னம்மா இடை வெட்டினாள்.

"கண்டறியாத களிசான் உத்தியோகம். என்ன தொழில் எண்டாலும் செய்யும் தொழிலே தெய்வம் எண்ட எண்ணம் வேணும். அதுசரி. இவன் சுந்தரம் என்னம்போ இந்தப் பொடியள் சொல்லுங்கள், வாயிலும் வராதாம்.. சீ... சீ..."

"என்ன மாமி 'ஜீ.சீ.ஈ' யோ"

"ஓம்பிள்ளை! அதுதான். அதுகூட அவன் 'பாஸ்' பண்ணவில்லையாம். நாலோ ஐஞ்சு தரம் எடுத்தும் பெயிலாம்.. ஒரு யோக்கியமில்லாத பொடியன்... அவரும் அவற்றை கூட்டாளியளும் கோயில் மடத்திலை நிக்கிறதும், சந்திக்குச் சந்தி நிற்கிறதும். விசில அடிக்கிறதும்...."

"அது தானே! பெண் பிள்ளைகளை காலை மாலை எண்டு கடை கண்ணிக்கெண்டு தெருவழிய உலாவ விடவும் பயமாக் கிடக்குது."

அப்போது...

ஓரக்கண் பார்வையை வீசியபடி, சாரத்தை அவிழ்த்து உடுத்து, சண்டிக்கட்டுக் கட்டியபடி அவர்களைக் கடந்து மறுகி மறுகி நடந்து செல்கிறான் சுந்தரம். அவனைக் கண்டதும் உலகத்திலுள்ள வெறுப்பு முழுதையும் ஒன்றாகச் சேர்த்து உமிழ்பவள்போல் அவன் மேல் உமிழாகக் குறையக வேலியோரம் காறி உமிழ்ந்தாள் பொன்னம்மா.

"பாருங்கோவன் அவரட நடையும் 'மங்கி' தலை இழுப்பும், கிறுதா மீசையும்... இவனுக்கென்ன கொள்ளை. அவள் சின்னம்மாவின்ர மோன் ராசேந்திரன் சப்பாணி. உவன் எங்கே ஆளா வரப்போகிறான் எண்டு தான் எல்லாரும் நாக்கு வளைச்சவையள். அவள் சின்னம்மா செய்த புண்ணியம் பொடியன் தீராத நோய் தீர்ந்து, எழும்பி, நெசவுத் தறி ஒண்டு சொந்தமாக வைச்சு நாளுக்கு நாற்பது ரூபா உழைக்கிறதானாம். முயற்சி இருந்தால் முன்னுக்கு வரலாம்தானே. அதைவிட்டு இவன் சுந்தரன் போல வீட்டுக்கும் ஊருக்கும் பாரமாய்.."

"இப்ப எங்கடை சங்கத்திலேயே பயிர் செய்ய எத்தினை வழி வகைகள் வகுத்துக் கொடுக்கினம். விதை கிழங்கு கூட எடுத்துத் தருவினமாம். தோட்டக் காணியெல்லாம் வெறும் காடாகக் கிடக்குது. விவசாயம் செய்தால் என்ன குறைஞ்சு போமோ..?"

"ஓமடி பிள்ளை! நல்ல சங்கங்கள் தான். இவை சங்கம் சங்கம் எண்டு என்னத்தை அளந்து விட்டவை." இது பொன்னம்மா வெறுப்புடன் மொழிந்தவை. அவளுடைய வெறுப்பு சங்கப் பக்கம் திரும்பியது.

"பாவக் கதை பறையக் கூடாது மாமி. முந்திச் சங்கத்திலை இருந்தாக்களே பதவிக்கும் பணத்துக்கும், புகழுக்கும் ஆசைப்பட்டு, நெஸ்பிறேயும், கொத்தமல்லியும் பின் கதவாலை அனுப்பிற ஆட்கள் எங்கட சங்கத்தை குட்டிச் சுவராக்கினாங்கள். இப்ப இருக்கிற தலைவர், காரியதரிசி மற்ற நிர்வாககிகள் எல்லாரும் எவ்வளவு கஷ்டப்படுகினம். அவை செய்தால் போதுமோ? சங்கம் எண்டால் ஒரு ஊரே சேர்ந்தது. ஊர் எண்டால் எத்தனையோ குடும்பங்கள். குடும்பம் எண்டால் ஒரு வீட்டில் உள்ளவர்கள் ஒவ்வொருவரும் சேர்ந்து ஒற்றுமையாக நடந்தால் சங்கத்திற்கும் விருத்தி, ஊருக்கும் நன்மை, பெருமை. அதை விட்டுவிட்டு இதென்னடா சிலர் இவைக்கென்ன சங்கம் எண்டு நெளிக்க சிலர் காசு கட்டப் பின்னுக்கு நிற்க.... எங்களிலும் குறைபாடு இருக்க குறையை அவர்கள் தலையில் போடுறது என்ன நியாயம்."

"ஓமடி பிள்ளை! நீ சொல்றதிலும் நியாயம் இருக்குமாப்போல. இப்ப உள்ள சங்கம் பிறம்பாகக் காய்கறிக்கடை கூட போட்டிருக்காம். இப்பிடி எல்லாரும் தன்நலம் மட்டும் கருதாமல் ஒற்றுமையாக சேவை செய்தால் ஊர் தானாகவே திருந்தி விடாதே! என்ன?"

"அதை விட்டுட்டு மாமி, ஒவ்வொருவரும் யோசிக்காமல், முன்னேற்றம், திருத்தம், விருத்தி எண்டு மேடைகளில் பேசுறதிலும் கூட்டங்களில் விளாசுவதிலும் குறைச்சல் இல்லை. செயற்பாட்டிலை பின் தங்கி நிற்பினம்."

"அது சரி பிள்ளை. நாங்களும் உணர்ந்து நடக்க வேணும் தானே."

"பாருங்கோ மாமி. முன்னே எப்போதோ நாங்கள் கட்டிய இருபது ரூபா இலாபக் காசுமாகச் சேர்ந்து எழுபது ரூபா அளவிலை இருக்காம். அதை இப்ப

எடுக்காமல் இன்னும் முப்பது ரூபா போட்டால் ஒரு முதலாக இருக்கும். காசு இருந்தால் அவர்களும் நல்ல முறையிலை நடத்துவினம் தானே. இப்ப சங்கத்திலை என்ன சாமான் இல்லை. குறைஞ்ச விலையில் நிறைஞ்ச சாமான்கள்."

"ஓமடி பிள்ளை. நீ சொல்றது சரிதான். கதைச்சு கதைச்சு கடையடிக்கும் வந்திட்டம். எடி ஆத்தே! சரியான கூட்டம். எப்ப சாமான் வேண்டி எப்ப திரும்புகிறது."

"ஆ! பாருங்கோ! காரியதரிசி, கணக்கர் எல்லாரும் வந்தாலோ 'படபட'வென வேலை முடிச்சுப் போடுவினம்."

அப்படி இருக்கையில் ஒரு சலசலப்பு. குழுமியிருந்த பெண்கள் குழாமிற்குள், வெண்கலக் கடையில் யானை புகுந்த மாதிரி பெரிய ஆரவாரம் போட்டுக் கொண்டு இராசம்மா வந்து பெட்டியைத் தொக்கெனப் போட்டாள். கூப்பனை 'தொக்' கென மேசையில் வீசியவள் விற்பனையாளர் குமாரை நோக்கி "தம்பி! இந்தச் சாமான்களைச் சட்டுப் புட்' டெண்டு போடு, நான் கொஞ்சம் அவரசரமாகப் போகோணும்" என்றாள்.

இத்தனை பெண்களும் காத்திருக்க. இவள் மட்டும் இப்பொழுது வந்து சாமான்களை வாங்கிக்கொண்டு செல்ல எத்தனித்தால் யாருக்கம் கோபம் வராதா? காரியதரிசி சுப்பிரமணியத்தின் தமையன் மனைவி என்றால் அந்த உறவுமுறை வீட்டில். அதற்காக இந்தப் பொது இடத்தில் என்ன ஒழுங்கீனம்?

இராமு இயல்பாகவே துடுக்கான பையன். விட்டானா? "என்ன இராசம்மாக்கா! நீ இப்ப வந்திட்டு, 'சுடுகுது மடியைப்பிடி' எண்டு நாண்டு கொண்டு நிற்கிறாய். இந்தனை பெண்டுகள் உங்களுக்கு முன்னம் வந்து, காத்துக் கொண்டிருக்கிறது தெரியேல்லையோ?"

"அவை எத்தனையோ பேர் வேலை இல்லாமல் இருப்பினம். போகிற நேரம் போவினம், எனக்கெண்டா செண்டு போச்சு."

கூப்பன் துண்டுகளை வெட்டி ஒட்டிக் கொண்டிருந்த மனேஜர் தன்னுடைய கண்ணாடிக்கு கீழாக நோக்கியவண்ணம் ஒரு புன்னகையைக் கசிய விட்டார்.

காரியதரிசியும் எட்டத்தில் நின்று பார்த்துக் கொண்டிருக்கவும், அவருடைய மதனிக்குத் தான் சொல்கிறோம் என்ற எண்ணம் இல்லாமல் நேருக்கு நேர் நல்ல சூடு கொடுத்தான். நியாயத்தை பேச ஏன் தயங்க வேண்டும்? வெளியில் சொல்லிக் காண்பிக்காவிட்டாலும், விற்பனையாளரின் நேர்மையான போக்கைக் கண்டு எல்லோரும் மனதிற்குள் வியந்தனர்.

மேலே 'கூட்டுறவுச் சங்கம்' என்று கொட்டை எழுத்தில் பொறிக்கப் பட்டிருக்கிறது. கீழேயோ கூட்டுறவும் நாட்டுயர்வும் காற்றில் பறக்கிறது. இப்படி ஒற்றுமையின்மையால் தானே ஊரே கெட்டுக் கிடக்கிறது என மனதிற்குள் மறுகிக் கொண்டே 'பாரத்தை' எடுத்துத் தலையில் வைத்தாள்.

சுமையைத் தலையில் ஏற்றி, காலை எட்டி வைத்த பொன்னம்மா யாரோ அழைத்த குரல் கேட்டுத் திரும்புகிறாள். சுப்பிரமணியம்; காரியதரிசி,

"என்ன தம்பி வீட்டுக்கு வந்தியாம்?"

"ஓமணை உங்கட இலாபக்காசு நாற்பது ரூபா.."

"அது இருக்கட்டும் தம்பி. இந்த பத்து ரூபா இதையும் சேர்த்து எங்களின்ரை பேரிலை போடுங்கோ. தம்பி! இந்த முறை விதை கிழங்கு சங்கத்தாலை எடுத்துத் தாறதாக..."

"ஓமணை! அம்மானை ஒருக்கால் சந்திக்கச் சொல்லுங்கோ ஒழுங்கு செய்கிறம்."

அகமும் முகமும் மலர பொன்னம்மா திரும்பி அடி எடுத்து வைத்தாள்.

–1971 – தினகரன் வாரமஞ்சரி–

# அவளும் ஒரு தாய்தானே!

"இந்தச் சண்டாள உலகத்திலை என்னை இப்படி இம்மிசைப் பட விட்டுவிட்டு போக்காளன் போய் சேர்ந்திட்டான். நான் படுகிற ஆறணிவை ஆரிட்டைச் சொல் அழ.

என்ர சீராளன் போன நாள் தொட்டு
வீடோ விடிய இல்லை - என்ர விளக்கிலோ ஒளியுமில்லை.
ஐயோ என்ர ராசா என்ரை கோப்புக் குலையுமுன்னே
உன்ர கோயிலுக்கு கூப்பிடணை
என்ரமானம் அழியுமுன்னே - உன்ர
மாளிகைக்குக் கூட்பிடணை"

அன்ன முத்தாச்சியின் ஒப்பாரி ஓய்ந்த பாடில்லை. கிழிந்த அலவல் சேலை 'சற சற' வென்று பிரிந்த மாதிரி புறுபுறுத்துக் கொண்டிருந்தாள். ஆச்சி இப்படித்தான். ஏதாவது கவலை எல்லை மீறும் போதெல்லாம் எப்போதோ இழந்துவிட்ட தன் கணவனை நினைத்து ஒப்பாரி வைத்து ஒரு பாட்டம் அழுது கண்ணீர் சிந்துவதில் தான் ஆத்ம திருப்தி காண்பாள் அவள். அழ ஆரம்பித்து விட்டால் இலகுவில் அந்தப் பழைய நினைவின் பிடியிலிருந்து விடுபடமாட்டாள். அப்படி ஒரு செல்வாக்கான, ரம்மியமான வாழ்க்கை வாழ்ந்தவள் அவள் அப்போது. ஆனால் இப்போதோ...?

"என்னணை அன்னமுத்தாச்சி காலத்தாலை வேளையோட அன்னம் பாறிக் கொண்டிருக்கிறாய்" முட்டை வாங்க வந்த கனகம்மா ஆச்சிக்கு வாகாகக் கதை கொடுத்தாள்.

"எடி பிள்ளை என்ர ஈறலை ஏனடி கேக்கிறாய். நானும் கண்டன் கேட்டன் உவள் பாறுவதியைப் போல ஒரு தோறையைக் காணயில்லை. இந்த இலங்கைச் சிலோனிலை. கேளடி வியளத்தை. என்ர கோழியொண்டு அங்காலை அவள் வீட்டு முற்றத்தைக் கிலிசை கெடுத்திப் போட்டுதாம். கல்லாலை எறிஞ்சு காலை முறிச்சுப் போட்டு வேலியிலை கொண்டு வந்து போட்டிருக்கிறாள். ஏன் எண்டு கேட்டால் "பொத்தடி வாயை" என்கிறாள். எத்தினைக்குப் பின்னாலை இவள் என்னை கேட்பாள் பொத்து வாயெண்டு."
"எணை அயலுக்குள்ளை என்ன சறவையெணை? கொஞ்சம் விட்டுக் கூட்டித்தானே பார்க்க வேணும்."

"எடி, எடி உவளின்ர சீத்துவக்கேடு எனக்குத் தெரியாதே. கோழியை மட்டுமே, உவள் ஆட்களையும் கொல்லுவள். அவன் ஆரோ ஊர் பேர் தெரியாத ஒரு கஞ்சலனோட தொடுப்பு வைச்சுக் கொண்டு புரியன் கந்தையனை வீட்டுக் கோடிக்குள்ளை வெட்டித் தாட்ட வேசை, எடுபட்ட தோறை."

"ஆ! அவன் கந்தையன் என்ன தங்கப் பவுணான மனுஷன். மிதிச்ச இடத்துப் புல்லுச் சாகாது. 'அக்கை' எண்டால் இன்னுமொருக்கால் சொல்ல வேணும் எண்டிருக்கும். அவனை உயிரோடு தாட்டுப்போட்டு அவவின்ர முன் கொய்யகமும் மாறு - கைப்பணமும், செருப்பும் குடையும் எடுப்பும் சாய்ப்பும்..."

"எணை உனக்கு ஏலாத நேரத்திலை உந்த நீளதாளமெல்லாம் ஏனணை? சும்மா ஒரு கால் சிறங்கை அரிசியை கொதிப்பிச்சுக் குடிச்சுட்டு கண்ணும் தெரியேல்ல காதும் கேட்கயில்லை எண்டு உந்தத் திண்ணையிலை கிடவன்"

"எடி பிள்ளை, மூலையிலை நெடுஞ்சாண் கிடையாக கிடக்க முடியுமோ? கைம்பெண்டாடிச்சி! நான் ஆள் ஆணி இல்லாதனான். சீர்செனத்தி இல்லாத பாவி. முதுகு ஏரியெல்லாம் குத்தும் 'உளை'வும் தாங்க முடியேல்ல. குளத்தை போற தெண்டால் கூட 'சீ' எண்ட பாடக்கிடக்கு. கிடந்த பாயும் சீலம்பாயுமாக் கிடந்து அழுந்திறன். அதுக்குள்ளை இந்தப் பாழ்படுவாற்றை ஆய்க்கினை தாங்க முடியேல்ல. கிலிசை கெட்ட சாதி. ஐயோ கண்கெட்ட கடவுள் என்னைக் கொண்டு போகாதாம். நான் கிடந்து கயிறு மாலைப்படுறன்."

"ஏன் அன்னமுத்தாச்சி உன்ர மகன் அஞ்சைப்பத்தை அனுப்பிறயில்லையோ?" அன்னமுத்தாச்சியின் மனநிலையை அறிந்து கொண்டும் கனகம்மா கேட்டு விட்டாள். எரிகிற நெருப்பில் எண்ணையை ஊற்றுகிற முயற்சிதான். அன்னமுத்து ஆச்சி கெம்பி எழும்பி விட்டா.

"எடி உதைக் கேட்டு என்ர வயித்தெரிச்சலைக் கிளப்பாதை கண்டியோ. போக்காளன் விட்டுட்டுப் போக எத்தினை கயிறு மாலைப் பட்டு நீரைத் திண்டு நெருப்பைத் திண்டு, உரலிடிச்சு, அப்பஞ் சட்டு உவனை ஆளாக்கி உத்தியோகமாக்கிவிட்டன். பெத்தவள் ஒருத்தி இருக்கிறாள் எண்டு எண்ணம் இறுதேசம் ஒல்லுப்போலை எண்டாலும் இருக்கே. என்னம்போரு ஊரிலை கண்டறியாத பொம்பிளை ஒருத்தியை கட்டிக்கொண்டு வந்தாரோ.. அந்தச் சிங்கினி நோனா இஞ்சை வந்தாவே, அவவுக்கு தன்ர சிங்கார வாயைத் திறந்து என்னை 'மாமி' எண்டு சொல்லக்கூட சங்கையீனமாம். இஞ்சை, பிஞ்சை, எண்டு ஒரு புது மோடியான கதை கண்டியோ. அவவின்ரை கோப்பு வாப்புக்கு இந்தக் கிழவியின்ர சாங்க பாங்கம் சரிப்பட்டு வருமே பின்னை!"

அவவின்ரை நையாண்டியை அவன்ரை முகத்துக்காகப் பார்த்துக் கொண்டிருந்தன். எனக்குப் பொறுக்கேல்லை. பொல்லாத வெப்பியார மாகக் கிடந்தது. கேட்டன் நல்ல கேள்வி. தோறை நீ ஆரண்டு என்னோட வாய் காட்டுறாய். வெளிக்கிடடி வேசை எண்டு தாறுமாறா ஏசிப் போட்டன். எடி தாலியைக் கட்டுக்கை! அவன் வேலையாலை வர இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி அவனுக்கு மூட்டி வைச்சிட்டாள், சண்டாளி.

என்ர பிள்ளையும் சரியானதே? அவள் சொன்ன மந்திரத்திலை கட்டுப்பட்டுப் போச்சு. இருபத்தைஞ்சு வருசம் பெத்து வளர்த்த நான் சொன்ன சொல்லு மேட்டிமை இல்லாமல் போச்சு. நேற்று வந்த அந்த பிறத்தியாளின்ரை சொல்லுக்கு என்னையும் ஏறுமாறாகக் கேட்டான்டி; கலம்பகம் வலுத்துப் போச்சு.

என்னெண்டாலும் பட்டிழுத்துப் பார். நான் எங்கேயாலும் போறன். உன்னோட அண்டலிக்க ஏலாது எண்டு" சொல்லிப் போட்டு மனுசிக்காரியையும் கூட்டிக் கொண்டு 'பாசா' விட்டார். வேணுமெண்டால் மாசா மாசம் காசு அனுப்பிறன் எண்டார்.

எடே எடே! உன்ர பிச்சைக் காசுக்குத் தூங்கி இருக்க இல்லை. நான் செத்து நாறினாலும் எட்டிப் பாராதே போடா போ எண்டு சொல்லி விட்டுட்டன். அது அவருக்கு ரோசம் பத்திப் போச்சு. என்ர பிள்ளையும் செத்துப் போச்சு எண்டு

கை கழுவி விட்டுட்டன்.
"சீ! அன்னமுத்தாச்சி இதேன்ன கதையெணை? என்ன இருந்தாலும் பெத்த பிள்ளையெல்லே."

"எடி பெத்த மனம்பித்து. பிள்ளை மனம் கல்லு எண்டு பழமொழி சொல்லுவினம். நான் பெத்தவள் வயிறு எரிய விட்டுட்டான். எடி அவன் நல்லா இருக்கட்டும். ஏன் என்ர சீராளன் என்னிலை எவ்வளவு வாரப்பாடா இருந்தவர். நான் கொடும்பாவி. எனக்குக் குடுத்து வைக்கயில்லை. போக்காளன் போக்குக்குப் போறதுக்கெண்டு அண்டைக்கு நான் அவிச்சுக் குடுத்த நெத்தலிப் புட்டைப் புழுகிப் புழுகித் திண்டு போட்டுப்போன மனுசன் துலாக் கொடியாலை.. ஐயோ கண் கெட்ட யமன் வழியிலை நிண்டிட்டான். துலாவிலை இருந்து விழுந்த மனுஷன் மூச்சுப் பேச்சில்லாமல் கிடந்தார். ஐயா எண்ட குரலுக்கு ஒரு வாய் பிறப்புச் சொல்ல இல்லை. போக்காளன் போய்ச் சேர்ந்திட்டார். நான் உடன்கட்டை ஏறியிட்டனோ! எனக்கு அணைதுணை இல்லை. ஆருமற்ற பாவி.

ஆளில்லாத் துக்கம் அழுதாலும் தீருமோ!
சோறில்லாத் துக்கம் சொன்னாலும் தீருமோ!"

"எனை உன்ரை பிலாக்கணத்தை கேட்டுக் கொண்டிருந்து நேரம் பங்கை பனை வட்டுக்கை போட்டுது. பொடியன் பயணத்தாலை வந்திட்டானெணை. எணை முட்டையைக் கொண்டுவா போக."

ஆச்சி பத்திரமாக பானைக்குள்ளிலிருந்து எண்ணிக் கொடுத்த முட்டையை வாங்கிக் கொண்டு கனகம் போய்விட்டாள். ஆச்சி அப்படியே திண்ணையில் முந்தானையை விரித்தவள் நித்திரையாகி விட்டாள்.

அன்னமுத்தாச்சிக்கு அன்று மனம் ஒரு நிலையிலுமில்லை. மனத்தில் ஒரு பாரதி. அலுவல் ஒன்றிலும் மனம் ஒன்றவில்லை. சாப்பாட்டை எடுத்தால் தொண்டைக்குழிக்குள் உணவு செல்ல மறுக்கிறது. சதிரமெங்கும் நடுங்குவது போல இருந்தது. செம்பு நிறைய தண்ணீரை எடுத்து மிடறு முறிய குடித்தவள் பிரைக்கடித்ததனால் குறையில் நிறுத்திவிட்டாள்.

போய்படுத்தாள். நித்திரையும் வர மறுத்தது. முற்றத்துப் பூவரசில் காகமொன்று அசூரியமாகக் கத்தியது. "சீ மூதேசி ஏன் கத்துறாய். ஹாய்... ஹாய்" என்று கல்லை விட்டெறிந்தாள். அது அந்த மரத்திலிருந்து பறந்து வீட்டுக் கோடியில் மாமரத்தில் நின்று கத்துவது கேட்டது. ஆச்சிக்கு ஆத்திரம் பற்றிக்

கொண்டு வந்தது. சுத்திச் சுத்தி சுப்பற்றை கொல்லைக்கே எண்டது போல அதுவும் ஒரு கொண்டோடிக் காகம்" என்று முணுமுணுத்தபடி கோடிக்குப் போய் மீண்டும் ஆச்சிக்கு 'வேப்பு'க் காட்டி விட்டு முற்றத்துப் பூவரசில் வந்து 'வாள் வாள்' என்று 'வாள்'த்தியது.

"இதென்ன இடி மாலை. இந்தக் காகம் என்ன சங்கதியைச் சொல்லுது. நான் கவிழப் போறனாக்கும். அப்பிடியெண்டால் நான் புண்ணியம் செய்தனான் எல்லோ" என்று எண்ணியபடி திண்ணைத் தூணில் சாய்ந்தபடி யோசனையில் ஆழ்ந்து விட்டாள் அன்னமுத்தாச்சி.

"அன்னமுத்தாச்சி என்னெணை நீ இஞ்சை இருக்கிறாய். உன்ரை மோன் அங்கை சாகப் பிழைக்கக் கிடக்கிறானாம்."

"எடி என்னடி நோடாலம் கொத்துறாய்?"

"நான் ஒண்டும் புசத்தயில்லை. மெய்யாத்தான் சொல்லுறன். உன்ர மோனுக்கு வருத்தம் கடுமையாம். ஊரெல்லாம் அள்ளுப் பட்டுப் போய் பாக்கிது. வருத்தம் கொஞ்சம் கடுமை போலை."

"என்னடி சுகயினமாம்?"

"எணை அவனுக்கும் பெஞ்சாதிக்கும் நெடுக இழுபறிதானாம். நாளும் பொழுதும் ஆஸ்பத்திரியும் வீடும்தானாம். இப்ப கன காலமாக சுகமில்லையாம்."

பொறி கலங்கிப்போய் இருந்து விட்டாள் அன்னமுத்தாச்சி. 'பதகளிப்பு' அவளுக்கு. இருப்புக் கொள்ளவில்லை. "உன்ரை முகத்திலும் முழிக்கிறேல்லை. நான் உனக்குத் தாயுமில்லை. நீ எனக்கு மகனுமில்லை" என்று வைராக்கியத்துடன் சொன்னவளா இவள்.

ஆச்சி அறைக்குள் போய் முட்டிக்குள் இருக்கிற சில்லறையை எடுத்து "என்ர அம்மாளாச்சி! என்ர பிள்ளை சுகமாக எழும்பட்டும் உனக்கு மடிப்பிச்சை எடுத்துப் பொங்குறன். அவனுக்கு ஒரு விக்கினமும் வர விட்டிடாதை" என்று கையெடுத்துக் கும்பிட்டவள் சில்லறையை ஒரு சேலைத்துண்டில் முடிந்து வீட்டு வளையில் கட்டிவிட்டாள்.

"புற்றளையில் பிள்ளையாரே! பிள்ளையில்லை எண்டு உன்னை வரம் கேட்டு நீ தானே இந்தப் பிள்ளையை தந்தனி. அவனை வாழுற வளருற வயசிலை அவனை கொண்டு போடாதே!" என்று மனதுக்குள் வேண்டிக் கொண்டாள்.

அவள் பிள்ளையார் கோவிலுக்குச் சென்றபொழுது பூசைக்கு ஆயத்தம் நடந்து கொண்டிருந்தது. உட்பிரகாரத்தை மும்முறை வலம் வந்தவள்; பூசை முடிந்து ஐயர் கொடுத்த அர்ச்சனைத் திருநீறு, சந்தனம், பூ எல்லாவற்றையும் வாங்கி மடிச்சேலையில் முடிச்சாகக் கட்டிக் கொண்டு தெருவில் இறங்கி விறு விறுவென நடந்தாள. அந்தச் சித்திரை வெய்யிலிலும் அவளுக்கு கால் சுட்டதாகவே தெரியவில்லை. ஒருவித வெறியுடனும் வேகத்துடனும் நடந்தவள் இரண்டு மைல்களுக்கு அப்பால் உள்ள அவளுடைய மகன் வீட்டிற்கு நடையைத் தொடர்ந்தாள்.

வீட்டு வாயிலை அடைந்ததும் தன்னுடைய மருமகள் 'உள்ளே வராதை' எனத் தடுத்துவிடுவாளோ என்ற பீதி உள்ளூற இருந்தாலும் "வருவது வரட்டும்" என்ற ஒரு அசாத்தியத் துணிவுடன் தன் மகனின் முகத்தைப் பார்த்தாலே போதும் என்ற ஆவல் மீதுரா படியைத் தாண்டி உள்ளே செல்கிறாள்.

அங்கே!

கட்டிலில் ஆனந்தன் கிழித்துப்போட்ட வாழை நாராகப் படுத்திருக்கிறான். படுக்கையைச் சுற்றி அவனுடைய அலுவலக நண்பர்கள், கமலாவின் இனத்தவர், இன்னும் யார் யாரோ....

சுற்றிவர நிற்கிற சனம் ஏராளம். ஆச்சி கிட்டக் கிட்ட நெருங்கிப் போகிறாள். கமலா ஆடாமல் அசையாமல் பிரமிப்புடன் பார்த்தபடி நிற்கிறாள். கூடி நிற்பவர்கள் அவளை ஒரு புழுவைப் பார்க்கிற மாதிரி ஒருவித நையாண்டியுடன் பார்த்து முகத்தைச் சுழிக்கிறார்கள். விஷயமறிந்த சிலர் ஆளுக்காள் கண்ணடிக்கிறார்கள். சிலர் குசுகுசுக்கிறார்கள்.

இவையொன்றையும் கவனியாமல் ஆச்சி நேரே போய் ஆனந்தனின் நெற்றியில் கை வைத்துப் பார்த்தவள் பதறிப் போனாள். "ஐயோ உடல் கனலாய் எரியுதே. பெத்தவளின்ர மனம் எரிஞ்ச மாதிரி உன்ர உடல் எரியுதே" என்றவள் தான் கொண்டு வந்த விபூதிச் சரையை எடுத்து நெற்றியில் இட்டவள்;

"எட தம்பி கண் முழிச்சுப் பாரடா. ஆர் வந்து இருக்கிறன் பார்! உன்ர கோச்சியடா. கண் முழிச்சுப் பாராடா என்ர துரை.."

"அம்மா!"

ஆ! எல்லோர் முகங்களிலும் பிரமிப்பின் ரேகைகள்! எல்லோரும் அவனை மொய்க்கின்றனர்.

"அம்மா!"

"ஓமடா நான் தான்! கண்ணைத் திற." இலேசாக அவன் கண்களைத் திறக்கிறான். திறந்த கண்களுக்கு அவனது தாயின் உருவம் மங்கலாகத் தெரிகிறது.

"அம்மா!" என முனகியவன் ஏதோ சொல்ல உன்னுகிறான். உதடுகள் துடிக்கின்றன. வார்த்தை வெளிவரவில்லை. விழியோரத்தில் கண்ணீர் முத்துக்கள் மாலை கோர்க்கின்றன.

"என்ர இராசா உனக்கு ஒன்டும் வராதபடி. நீ இப்ப படு." என்று அமர்த்தினாள். எழுந்து நின்றவள்" அவனுக்கு மனக் காய்ச்சல். அவனுக்கு ஒண்டும் வராது" என்று தனக்குள் சொல்லிக்கொண்டே வெளியே செல்ல கதவை நோக்கி நடந்தாள்.

"மாமி உங்களைக் கும்பிட்டன் மாமி. நடந்ததெல்லாம் மறந்திடுங்கோ. அவர் அம்மா அம்மா என்றுதான் அரற்றிக் கொண்டிருந்தார். நான் கொடியவள். உங்கள் இருவரையும் நான் பிரிச்சு வைச்சிட்டன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கோ. நீங்கள் ஒரு இடமும் போகாதேயுங்கோ" அவள் கைகள் அஞ்சலியாயக் குவிந்தன. கமலா தன் கண்ணீர் அர்ச்சனையால் ஆச்சியின் சேலையை நனைத்தாள்.

"எழும்பு பிள்ளை. நான் ஒரு இடமும் போகவேல்லை" என்று சொல்லி நிமிர்ந்தவளுக்கு தலையைச் சுற்றிக் கொண்டு வந்தது. எதிரே எல்லாமே தலைகீழாக் சுழல்வதான பிரமை. எதிரே இருந்த கட்டில் சட்டத்தைப் பிடிக்கப் போனவள் 'தடால்' என நிலத்தில் சாய்ந்தாள்.

"அம்மா!"

"மாமி!!"

"ஆச்சி!!"

யாரின் அழைப்பையும் கேட்க ஆச்சி அங்கு இல்லை. ஆச்சி தன் யாத்திரையைத் தொடங்கி விட்டாளே!

-1979 வீரகேசரி வாரவெளியீடு-

# காருண்ய காண்டம்

ஆவணித் திங்களில் நன்நாளாம் ஒரு ஞாயிற்றுக் கிழமை. ஞாயிற்றுக்கிழமை அதுவும் ஆவணி ஞாயிறு ஆயிற்றே. வேறு சொல்லவும் வேண்டுமா என்ன! 'செல் வந்த' பிரதேசமான வடமாராட்சிப் பிராந்தியமே ஒரு சோபையுடன் துலங்குவதை நிதர்சனமாகக் காணலாம்.

அண்மையில் உள்ள ஊர்களான வல்வெட்டித்துறை, மயிலிட்டி, உடுப்பிட்டி, பொலிகண்டி, வியாபாரிமூலை, அல்வாய், கரவெட்டி, கரணவாய், துன்னாலை, புலோலி, அடங்கலான பிரதேசத்தில் பாதையெங்கும் சாரி சாரியாகப் பக்த கோடிகளின் படையெடுப்பு. இப்பொழுது எல்லாம் ஆண்கள் மட்டும் என்ன பெண்களுமே துவிச்சக்கரவண்டிகளிலும், மோட்டார் சைக்கிள்களிலும் ஆசை அருமையாக "மோட்டார் கார்" களிலும் வல்லிபுரத்தாழ்வாரைத் தரிசிக்கக் கூட்டம் அலைமோதும். இதில் கணினியுகக் கதாநாயகர்கள், வாலிபரை வலைவீசவென்றே வரும் சிலுக்கு வகைத் தேவதைகள்... அப்பப்பா இதைக் காணக் கண்கோடி வேண்டாமோ!

அன்று பெரும்பாலானோர் வயது வித்தியாசமின்றி விரதம் நோற்பார்கள். வல்லிபுரத்தானுக்கு நேர்த்தி வைத்து பொங்கல் இடுவார்கள். நாள் நட்சத்திரம் நன்றாக அமைந்தால் திடீர்த் திருமணங்களும் அரங்கேறுவதுண்டு. ஏன் ஊர்க்கல்யாணத் தரகர்கள் கூட தாங்கள் ஒழுங்கு செய்யும் வரன்களுக்கு பெண் பார்க்கும் படலங்கள் கூட இரகசியமாகவும், சாமர்த்தியமாகவும் நடாத்தி முடித்து விடுவதுமுண்டு. ஆனால், மாதவனின் விருத்தாந்தமே வேறு. அவனது

பெற்றோர் நீண்ட காலம் பிள்ளைச் செல்வம் இல்லாது வல்லிபுரத்தானுக்கு நேர்தி வைத்து தவம் கிடந்து பெற்ற பிள்ளை என்பதால் அவனுக்கு மாதவன் என்று நாமகரணம் சூட்டியது மட்டுமின்றி அவனையும் ஒரு வல்லிபுர மாயவனின் விசுவாசியாகவே வளர்த்து விட்டுப்போய் விட்டனர்.

மாதவன் இப்போது ஓர் திறமைமிக்க கார், துவிச்சக்கர வண்டி மெக்கானிக். எத்தனை வேலையிருந்த போதும் ஞாயிற்றுக்கிழமை என்றால் விடுமுறைதான். காலை எழுந்ததும் குளிக்காமலே கோயிலுக்குப் புறப்பட்டுவிடுவான். கோயிலில் தான் குளிப்பு. இதற்கென்றே மாற்று உடுப்பும் வாளியும் கொண்டு வருபவர் எத்தனை பேர். குருக்காட்டுப் பிள்ளையார் கோயிலின் பின்னால் உள்ள குளத்தின் அந்தச் சீதள நீரில் ஆசை தீரக் குளிப்பதில் தான் என்ன சுகம். அது சொல்லில் வடிக்க முடியாத சுகானுபவம். அதற்கென்றே முண்டியடித்துக் கொண்டு வந்து வாளிக்கு மல்லுக்கட்டிக் கொண்டு நிற்பவரைப் பார்க்க வேண்டுமே.

மாதவன் காலை ஏழு மணிக்கெல்லாம் குளத்தடியில் பிரசன்னமாகி விட்டான். ஆற அமர முண்டி அடிக்கும் இளவட்டங்களுக்கெல்லாம் இடம் கொடுத்து பராதிப்படாது குளித்து அருகில் அருகில் உள்ள விநாயகரை வணங்கி பாதையைக் கடந்து வல்லிபுர ஆலய முன்றிலை அடைந்தான். கோயிலைச் சுற்றி கிழக்கில் இருந்து வந்த அகதிகளின் கூட்டம் அதிகம் தான்.

நல்லவேளை, பூஜை ஆரம்பமாகும் நேரம் வந்து விட்டதில் அவனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி, ஆராதனை எல்லாம் முடித்து பூசகர் அர்ச்சனைத் தட்டுடன் வந்தார். மடியில் இருந்து பத்து ரூபாயெடுத்த மாதவன் ஏனோ ஒரு பொறிதட்ட மனம் மாறி கையது திசை மாறி அங்கு சுவரருகில் ஏழ்மையே உருவாக நின்ற ஒரு வயோதிபனின் கையில் திணித்துவிட்டுப் போய் இலுப்பை மரநிழலில் சிறிதுநேரம் இளைப்பாறினான்.

அகன்ற மணல் வெளி கடந்து அகோரமாய் வீசிவரும் அனல் காற்று சவுக்கு மரத்தோப்பினைத் தழுவி, உயர் பனை மரங்களை உரசி இலுப்பை மரங்களுடன் இரகசியம் பேசி ஜில் லென்று பரவ அதன் இன்பலயிப்பில் மெய்மறந்து........... முன்பெல்லாம் என்னமாய் இந்தக் கோயில் சூழலில் இருந்து விளையாடி, உறங்கிக் களித்த நாட்கள் எத்தனை! எல்லாம் பொய்யாய்,

பழங்கதையாய், கற்பனையாய்..... இப்போதெல்லாம் அப்படி ஆசுவாசமாக இருக்க முடிகிறதா... ஒரு நீண்ட பெருமூச்சை உதிர்த்த மாதவன் 'சடா'ரென எழுந்தான். நேரம் பத்து மணிக்கு மேல்... இனி வீட்டிற்குப் போய் எதாவது உண்டு... ஓ எத்தனை வீட்டு வேலைகள் தலைக்குமேல் கிடக்கின்றன.

கடையில் என்ன கண்டறியாத வருமானமா கொட்டிக்கிடக்கிறது. ஏதோ கண்ணியமாகக் கிடைக்கும் அல்ப வருமானத்தில் தானே அவன் மனைவி தறுதலை என்ற பெயர் பெற்ற ஏக புத்திரன் மாயவன் எல்லோரும் வயிறு கழுவவேண்டும். விரலுக்கு ஏற்ற வீக்கம். கடையில் கிடைக்கும் சராசரி மூவாயிரம் ரூபாவில் தான் இந்த மூன்று ஜீவன்களுக்கும் என்ன பெரிதாக செய்து விட, கரைத்துக் குடிக்கிற கையறு நிலைதான்.

எழுந்து துவிச்சக்கர வண்டியை எடுத்தவன் சக்கரத்திற்கும் நோகாமல், காலுக்கும் நோகாமல் நிலத்திற்கும் நோகாமல்.....

இதென்ன சைக்கிள் ஓட்டம். மெதுமெதுவாக... தெரிந்தவர்களும், நண்பர்களும் 'பச்சைத் தண்ணீர்' என்று பட்டப் பெயர் சூட்டியதும் பொருத்தம்தான் போலும்.

துவிச்சக்கர வண்டி பருத்தித்துறை நோக்கிப் பயணிக்கிறது. மந்திகைக்குத் திரும்பும் 'கொத்தராட்டி' சந்தியையும் தாண்டி அசைந்து அசைந்து... இனி ஆனைவிழுந்தான் மயானம், பல்லப்பைச் சந்தி, வராத்துப்பளை, கற்கோவளம், தும்பளை, பருத்தித்துறை. அதிகமாக இராணுவம் உபயோகிக்கும் வீதி என்பதாலோ என்னவோ பாதை நன்கு திருத்தப்பட்டு சைக்கிள் ஓட்டுவதில் அத்தனை சிரமம் முன்பு போலில்லை.

ஆனைவிழுந்தான் மயானத்தை அண்மித்தவன் எதையோ அவதானித்வனாகத் துவிச்சக்கர வண்டியைச் சடாரென பிறேக் போட்டு நிறுத்தினான். அருகில் இருந்த பனங்கொட்டு ஒன்றில் சைக்கிளைச் சாய்த்து நிறுத்தி விட்டு பற்றைகளினூடாகப் பதனமாக மெல்ல மெல்ல அடி வைத்து நெருங்கிப் பார்த்தால்... ஒரு மாட்டுக்கன்று. இந்த மரணம் மலிந்த பூமியில் ஜனித்த சில மணித்தியாலங்களே ஆகியிருக்கும் போல் தொப்பிள் கொடி அறுந்த நிலையில் ஈன்று போட்டு விட்டு இந்தக் கொடிய தாய்மாடு எங்கே தான் ஏகிவிட்டது. கால் குரைகள் கூட வெட்டப்படாத நிலை...

அவன் மனதுக்குள் மாட்டுக் சொந்தக்காரரை வைதவாறே நல்ல வேளையாக மடியில் திறப்புக் கோர்வையுடன் இருந்த சிறிய கத்தி கொண்டு கால் குறை வெட்டி எடுத்து, எங்கோ தூரத்தில் இருந்த கிணற்றில் நீர் மொண்டு சுத்தி செய்து அருகில் இருந்த காவோலை ஒன்றில் கிடத்தி வாஞ்சையுடன் நீவி விட்டான்.

இதன் தாயைத் தேடிய அதனிடம் இதை ஒப்படைக்க வேண்டும். சுற்றும் முற்றம் பார்வையை ஓடவிட்டான். சற்றுத் தூரத்தே நின்ற ஒரு பசுவைக் கண்டு அதனருகில் செல்ல முயற்சித்தான். அது இவனைக் கண்டதும் தூர இன்னும் தூர... மிகமிகத்தூர அரண்டு ஓடிக்கொண்டிருந்தது. இதனை ஈன்ற மாடு இரு தானோ என்று கூடத் தெரியவில்லை. தாய் மாடு தேடி வரும் என்று சமாதானம் செய்து கொண்டு போகவும் மனது ஒப்பவில்லை. இந்த நிலையில் விட்டுச் சென்றால் வெறிநாய், நரிகளோ, காகம், கழுகுகளோ இதற்கும் ஏதும் ஊறுவிளைவித்து விடுமோ என்ற அவனின் ஏழை மனம் விசனித்தது. கன்றின் அருகில் வந்து பழியாய்க் கிடந்தான். இடைக்கிடை அதன் மிருதுவான உடலை நீவி விட்டபடி.

நேரமோ இப்போது ஒரு மணி, கோயிலிருந்து போவோரும் வருவோரும் 'இதென்ன ஒரு பைத்தியம்' என்பது போல் இவன் மீது ஒரு நக்கல் பார்வையை நழுவ விட்டபடி அகன்று சென்றனர்.

ஆவன் அசைந்தால்தானே, காலை வேளையே வெறும் வயிற்றுடன் தலை தோய்ந்து விரதம் இருக்கும் உடம்பு, பசிக்களை, தலை தட்டாமாலை சுற்றிற்று. ஆனாலும், அந்தப் பசுவின் கன்றை அந்த நிலையில் விட்டுப்போக மனம் இசையவில்லை. ஒரு காவோலையை எடுத்துப் போட்டு அதன் மீது மெலிதாகச் சாய்ந்து படுத்தான்.

"காலம்பற வீட்டை விட்டுக் கிளம்பின மனுக்ஷன் நேரம் நாலு மணியாகிப் போச்சு...? " மனம் அலைமோதிக் கொண்டிருக்கிறாள் மனைவி லட்சுமி. "இந்தத் தறுதலை வாலையும் காணவில்லை. நிண்டால் ஒருக்கால் விட்டுப் பார்ப்பிக்கலாம்" என்று அங்கலாய்த்தவள் படலையடியில் போய் வீதியை நோட்டம் விட்டபடி நின்றாள்.

அவளுக்கு சாப்பிட மனம் இல்லை. அவன் என்றாள் அவளுக்கு உயிர். அவனுக்கும் அப்படித்தான், வாய்த்தது என்னவோ வறுமை வாழ்க்கை தான்...

அன்றாடம் காய்ச்சி சீவியம் தான். எனினும் அன்பு, பாசம், கடமை, கருணை, கண்ணியம் இவைகளுக்குள் சிக்குண்ட சீரிய வாழ்க்கை அது. அவன் மனம் கோணாது. அவளும் அவள் மனம் கோணாது இவனும்......

அவனின் குணம் ஒன்றுதான் அவளுக்கு அத்தனை பிடிபதில்லை. பிற உயிர்கள் என்றால் அதுவும் மிருகங்கள் மேல் அதீத அன்பும் அக்கறையும், கருணையும், கரிசனையும் காட்டும் இவனின் காருண்யம்.

சாப்பிட வழியில்லை என்றாலும் வீட்டில் உள்ள செல்ல நாய் வீரனுக்கும் செல்லப்பூனை "பூசி;க்கும் உணவு கொடுத்து விட்டுத்தான் மறு வேலை. அவனுக்கு ஒரு செல்லப் பிராணி ஆட்டுக்குட்டியும் இருந்தது. ஆதைக்கட்டி வைத்து வளர்க்க மாட்டான். அது துள்ளித்துள்ளி மே....மே..... என்று அனுங்கிக்கொண்டு ஓடி தத்தித் தத்தி விளையாடுவதில் தனி இன்பம் காண்பான் அவன். லட்சுமி ஆசையோடு பார்த்துப் பார்த்து வளர்க்கும் பூ மரங்களையும் நன்னி, நன்னிக் கடித்து நாசமாக்கி விட்டாலும் அதை ஒரு குறும்புச் சிரிப்புடன் ஆமோதித்துக் குட்டியை நீவி விடும் போது அவளுக்குப் பற்றிக் கொண்டு வரும். லட்சுமிக்கு வயிற்றைப் பிசைந்து என்னென்னவோ செய்தது. பசி ஒரு பக்கம். ஆளைக் காணோமே என்ற ஏக்கம் ஒரு புறம். அடையாள அட்டையைத் தவறவிட்டு "ஆமி" பிடிச்சு வைச்சிருக்குதோ என்று உள்ளுக்குள் புகைந்தவாறே அவள்.

அறி துயிலில் அயர்ந்து போய்க் கிடந்த மாதவனுக்குத் திடீரென விழிப்புக் கண்டது. "சீ!" அதுக்கிடையில் ஒரு கண்டறியாத உறக்கம்.." என்று தனக்குத்தானே முனகிக் கொண்டு நேரத்தைப் பார்த்தால் மாலை ஐந்து மணி! "ஐயொ! கன்றின் நிலைமை எப்படியோ?" எனப்பதறியவாறே கன்று கிடந்த திக்கை நோக்கி நோட்டம் விட்டான்.

என்ன ஆச்சரியம்!

தாய்ப்பசு கன்றை நக்கியபடி பால் கொடுத்துக் கொண்டிருந்தது. கன்று நிற்கக் கூடத் திராணியற்று தளர் நடை போட்டபடி தாய்ப்பசுவின் அசைவுகளுக்கு ஈடுகொடுத்து முலைக் காம்பைப் பிடிக்க முடியாமல் தட்டுத்தடுமாறி பால் குடிக்க எத்தனிப்பதைத் தன்னையே மறந்து பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான்.

சில நிமிட நேரம் காத்துக் கொண்டிருந்தான. சில கணங்களின் முன் தடுமாறிய அந்தக் கன்றுக்குட்டி ஒரு தேர்ந்த அனுபவஸ்தன் போல் என்ன லாவகமாகத் தாயின் மடியை இடித்து இடித்து பால் அருந்துவதும் தாய் கன்றை நக்கி மோந்து கொடுப்பதுமாய்.... இப்போது அவனுக்கு தண்ணீர் விடாயும், பசிமயக்கமும். மெல்ல எழுந்தது. துவிச்சக்கர வண்டி நிறுத்திய இடத்துக்குச் சென்றான். வண்டியை உழக்கி வீட்டுக்குப் போய் சேரமுடியாத உடல் நிலையிலும் மனத்திருப்தியும், அமைதியும் வீட்டுக்குக் கொண்டுபோய்சேர்க்கும்.

தினக்குரல்
05 ஆவணி 2001

# இடிபாடுகள்

**வா**னத்தைக் கீறி வையத்தைப் பறித்தெடுக்கத் துடிக்கும் விடுதலை வீரனின் ஆவேசத்துடன் காக்கைக் கூட்டங்கள் பறந்து ஆர்ப்பரிக்கும் விடியல் பொழுது.

காலை ஆறரை மணி இருக்குமோ!

அந்தத் தனியார் கல்வி நிறுவனத்தில் இருந்து வண்ணப்பறவைகளாய் வெளியேறியது மாணவியர் குழாம்.

அந்தச் சிங்காரச் சிட்டுக்கள் ஆளுக்கொரு துவிச்சக்கர வண்டி மீதேறிச் சிறகை விரித்தன. ஏதோ வீதி அவர்களின் பாட்டன் வீட்டுச் சொத்து என்ற தோரணையில் பாதையை மூடிய படி அந்த ஐவரும் சமாந்தரமாகப் பறந்து கொண்டு......

கல்விக் கூடத்தில் கற்பிக்கும் ஆசிரியர்கள், இவர்களுக்கு இந்தப் பாதை விதிமுறைகளையும் கொஞ்சம் போதித்து வைத்தால் என்ன என்று காண்பவர் மனம் ஆதங்கப்படும்.

போகிற போக்கில் ராஜி என்ற வண்ணக்கிளி திருவாய் மலர்ந்தது.

"இண்டைக்குச் சுகந்தியின்ரை அலங்காரம் கலக்கலடி. தேவயானி மாதிரி......."

"இல்லாட்டி அவள் அழகில்லை எண்டோ சொல்ல வருகிறாய்: அமுதா இடக்காக.

"அதுக்கில்லையடி! எப்பவும் அழகு சுந்தரிதான் அவள். இண்டைக்கு அலங்காரம் பிரமாதமாக இருக்கு அதைச் சொல்ல வந்தால்...."

அப்பொழுது....!

எதிர்த் திசையில் இருந்து துவிச்சக்கர வண்டியில் வந்த ஆதவன் சுகந்தியை நோக்கிக் கண்ணைச்சிமிட்டி, நாவைத் தொங்கப் போட்டு ஒரு அழகுக் கோலம் காட்டி விட்டு "விசுக்" என்று நகர்ந்தான்.

"இப்போ கண்டீரோ அலங்காரத் தின்ரை ரகஸ்யம். அண்ணனும் நோக்கினான், அவளும் நோக்கினாள்" அமுதா நக்கலடித்தாள். கடைவாயில் புன்னகையைக் கசியவிட்டபடி.

"போங்கோடி..." சிணுங்கினாள் சுகந்தி. " இவனை யார் பார்த்தது? எனக்குக் காதலும் இல்லை, மண்ணாங்கட்டியும் இல்லை. உன்னை யாரும் காதலிப்பாளவையோ.... குடியன்.... பெருங்குடியன்........ வெறிக்குட்டி"

"ஓ....! பெருங்குடியன் ......" எல்லோரும் 'கொல்' லென்று சிரிக்க சுகந்திக்குப் பற்றிக் கொண்டு வந்தது. எல்லோரையும் எரித்து விடுபவள் போல் பார்த்தாள்.

"அதுக்கேனடி வெறுக்கிறாய்... இது ஒரு தலைராகம் போலை.... விடுங்கடி" என்றாள் அமுதா ஒரு போலிப் பெரு மூச்சை உதிர்த்தபடி.

அப்பொழுது சங்கர் எதிரில் வந்தவன் வெகு பவ்வியமாக நல்ல பிள்ளைத்தனமாக இவர்களை விலத்திக் கொண்டு சென்றான்.

"பாரடி, ஆளைத் தெரியுதோ?"

"ஆரடி அது?"

"இவர்தான் சங்கர் நளினியின்ரை காய்"

"சரி தான் போடி. இவன் எங்கேயிருந்து வருகிறானடி. அது "ஓல்ட் நியூஸ்" இவர் இப்போ மாலதிக்கெல்லோ 'லைன்' அடிச்சுத் திரியிறார்"

"பாருங்கடி இவனை. இவன் நளினிக்கெல்லோ 'லவ்' அடிச்சுத்திரிஞ்சவன். அவளைவிட்டு இப்போ மாலதி யோடை... என்ன ஆண்களோ....காதலும் கத்தரிக்காயும்..." சலிப்புக் காட்டினாள் ராஜி.

இனி இவர்கள் வீடு போய்ச்சேரும் வரை கேலியும் கிண்டலும் இவர்கள் பேச்சாக இருக்கும். சிரிப்பும் கும்மாளமும் மூச்சாக, கலகலப்பும் வளவளப்பும் 'சைக்கிள்' பாய்ச்சலாக.... அவர்கள் உலகமே தனிதான் போங்கள்.

அவர்கள் ஓராங்கட்டைச் சந்தியைத்தாண்டி பிரியா தியேட்டருக்கு அண்மையில் அந்த வளைவில் திரும்பும் போது சடக்கென்று எதிரில் துவிச்சக்கரவண்டியில் வந்த வயோதிபர் இவர்களின் வண்டிகளோடு மோதப் போக, இவர்கள் ஒவ்வொரு வராய் வண்டியை வெட்டி ஒடித்து மடக்கித் திருப்பி ஒருவாறு சமாளித்து நிமிர்ந்து நோக்கினால் கிழவன் இவர்களை நோக்கி ஒரு முறைப்பு முறைத்து, கீழ் உதட்டை மேல்வாய்ப்பற்களால் கவ்வி அழகு காட்டி அகன்றது.

"பார் சனியனை, இந்த நைன்ரிக்கு இப்பவும் ஏதோ வேணும் போல. வீதியிலே சைக்கிள் ஓடத் தெரியேல்ல."

"பாவமடி ! பரிந்து பேசினாள் கவிதா. "வயதுபோன மனுஷன்..." வீதியை மூடிய படி ஓடிவந்தது எங்களிலும் குற்றம்தானே"

"போடி ! இவ அவருக்குப் பரிந்து பேசவந்திட்டா. வயது போனா அதுக்கேற்ற மாதிரி ஒதுங்க வேண்டியது தானே! இந்த ஆள் இப்படித்தான் ஒரு மாதிரி...."

"ஓமடி, இவர் கொஞ்சநாளா இப்படித்தான்.... தொடருவதும் இடிப்பதும்.... நொடிப்பதும் " ஒத்தூதியது அமுதா.

"இதுக்கு ஒரு 'ஐடியா' நான் சொல்லட்டுமா" ராஜியின் திடீர் அறிவிப்பு.

"என்னடி ஐடியா" வண்ணப்பறவைகள் கூட்டமாகக் கீதமிசைத்தன.

ராஜி சிறிது சரிந்து அருகில் ஓடிக்கொண்டிருந்த வதனியின் காதில் கிசுகிசுக்க......

....வதனி சுகந்திக்கும், சுகந்தி அமுதாவுக்கும், அமுதா கவிதாவுக்கமாக.... செய்தி அஞ்சல் முறையில் கிசுகிசுக்கப்பட்டது.

"மணியான ஐடியா, ராஜிக்கு ஒரு மாலை போடலாம்: இந்த பிரதானமான 'ஐடியாவுக்கு" இது சுகந்தி.

"வேண்டாமடி... பாவமடி கிழவன்" கவிதா கெஞ்ச,

"போடி இவங்களுக்கெல்லாம் நல்ல பாடம் படிப்பிக்க வேணும்" என்றாள் ராஜி கண்டிப்புடன்.

பறவைகள் ஒரு புது உற்சாகத்துடன் தத்தம் வீடு நோக்கிப் பறந்தன.

அடுத்த நாள்

படிப்பறையில் யாருக்குமே இருப்புக் கொள்ளவில்லை. ஆசிரியர் கற்பிக்கும் பாடத்தில் அவர்களின் மனம் ஒன்றினால்தானே. தாங்கள் அரங்கேற்றப் போகும் வீதி நாடகக்தைப் பற்றிக் கற்பனையின் சுகத்தில் திளைத்திருந்தனர்.

"அம்மாடியோவ் இந்த மாஸ்டர் என்னடி அறுக்கிறார்" என்று புளுங்கியபடி இருந்தவர்களுக்கு, "இன்றைய பாடம் இத்தோடு முடிந்தது....இனி.." என்று தமிழோசை புகழ் ஆனந்தியின் பாணியில் ஆசிரியர் அறிவித்ததும்தான் தாமதம் அவர்கள் பரக்கப் பரக்க வெளியேறி சைக்கிளில் தாவி .....

அப்போது சொல்லி வைத்தாற் போல் எதிரே கிழவன் தூரத்தே வருவதைக் கண்ட ராஜி சுகந்திக்கும் வதனிக்கும் கண்ஜாடை காட்டினாள்.

சுகந்தியும் வதனியும் படக்கென ஒரு ஒழுங்கையில் திரும்பி குறுக்கு வழியே ஓடிச்சுற்றி மீண்டும் பிரதான வீதியில் ஏறி இப்போது கிழவனுக்கும் பின்னால் அருகே... மிக அருகே....

இப்போது ஏறக்குறைய எல்லோருமே கிழவனைச் சுற்றி வளைத்து

கிழவன் ராஜியை மோதுகிறாற் போல்' வேப்புக்காட்டிவிட்டுத் துவிச்சக்கரவண்டியை வெட்டி அப்பால் செல்ல எத்தனிக்க சுகந்தியும் வதனியும் கிழவனை இப்பாலோ அப்பாலோ நகரவிடாமல் அவரவர் துவிச்சக்கர வண்டியை முறித்து மடக்கி

"ஐயோ ! என்ர தெய்வமே..."

கிழவன் கால் இடறி சைக்கிளோடு
தடம் புரண்டு வீதியில் விழ...

அங்கே அவர்கள் யாரையும் காணோம். எல்லோரும் ஒழுங்கை ஊடாக திரும்பி மாயமாகிவிட்டனர்.

வீதியில் விழுந்த கிழவன் தடுமாறி நிமிர்ந்து தன்னைச் சுதாகரித்து எழுமுன்பு வேகமாக வந்த ஜீப் ஒன்று கிழவன் உடலைப் பதம் பார்த்துக்கொண்டு, சைக்கிளை நொருக்கிக் கொண்டு பயங்கர 'கிறீச்" சலுடன் சிறிது தூரம் அப்பால் சென்று குலுங்கி நின்றது.

கிழவன் இரத்த வெள்ளத்தில் !

அடுத்தநாள் அவர்கள் எல்லோரும் சந்தித்தபோது அவர்கள் செய்த 'மடைத்தனத்தை' நினைத்து மனம் மறுகிக் கொண்டனர். ஒரு அவசர ஆலோசனை நடத்தி ஒரு முடிவுக்கு வந்தனர். அதன் படி மாலை வேளையில் எல்லோரும் ஒன்றுகூடி கிழவனது வீட்டைத் தேடிச் சென்றடைந்தனர்.

புதுமை நாகரிகம் புரைக்கேறிவிட்ட இக்கால கட்டத்திலும் பழமையின் சுவடுகள் இன்னும் முற்றாக அற்றுவிடவில்லை என்பதை நிரூபிப்பதை போல் ஒன்றரை ஆள் உயர சுற்றுமதிலும்.

வீட்டு 'படலை' திறந்தே கிடக்கிறது. முற்றம் முழுவதும் குப்பையும் கூழாமுமாய்... செல் வீச்சினாலும் 'பொம்பரின்' அட்டகாசத்தினாலும்

வீட்டினுள் பெரும்பகுதி கொலுக் குலைந்து சீரழிந்து கிடந்தது. சிதைவுகளும் சிதறலுமாய் கிடந்த இடிபாடுகளுக்கிடையிலும் தப்பிப்பிழைத்துக் கிடக்கும் ஒரு பக்க அறையில்தான் அவர்களின் வாசம். வீட்டுச் சொந்தக்காரன் கனடாவில் என்பதால் இவர்கள் இதில் தஞ்சமடைய வாய்ப்பாகப் போய் விட்டது.

'ஆரது?" தீனமாய் வினாவிக் கொண்டு வெளிப்பட்டது ஒரு மெலிந்த உருவம். காலத்தின் சுவடுகள் அவள் ஒட்டிய கன்னங்களில் குரூரமாகத் தம் ரேகைகளைப் பதித்திருந்தன. துயரத்தில் தோய்ந்து போன விழிகள். அந்த அபலையின் முகத்தில் கவலையின் திவலைகள்.

"என்ன பிள்ளை வேணும் ?"

"ஒன்றுமில்லை அம்மா ! அந்த
விபத்து நடந்த அப்பு வீடு இதுதானோ?"

"ஓம் பிள்ளை ! என்ன விசயம்? "

"இல்லை அம்மா, அண்டைக்கு
வீதியிலை சைக்கிளிலை வந்த நேரம் தான் அவர் சைக்கிளை
மோதப்போக... நாங்கள் விலத்த முயற்சிக்க அந்த விபத்து நடந்தது.

"அப்படியோ சங்கதி... அவருக்கு சிக்காரான அடிபிள்ளை. தெருவிலை நிண்ட ஒரு லொரிக்காரன் தான் அவரை ஆஸ்பத்திரியிலே சேர்த்து..."

"அதை ஏன் பிள்ளை கேட்பான். இந்த மனுஷனுக்கு மூளை கொஞ்சம் மாறாட்டம்.."

தோழிகளின் விழிகள் ஒன்று சேர ஆச்சரியத்தில் அகல விரிந்தன.

கிழவி சுவரில் தொங்கிய சட்ட மிட்ட புகைப்படம் ஒன்றைச் சுட்டிக் காட்டினாள்.

"அந்தா, அந்த போட்டோவில இருக்கிறாளே அவள்தான் கமலி. எங்கள் ஒரே மகள்."

மீண்டும் ஒரு ஆச்சரியக் குறி தோழிகளின் வதனத்தை ஆட்கொண்டது. அவர்கள் வெகு உன்னிப்பாக கிழவி சொல்லும் விருத்தாந்தத்தைச் செவி மடுத்தனர்.

ஒருநாள் ரியூஷன் எண்டுசொல்லி காலை ஆறுமணிக்கு போனவள் பத்துமணியாகியும் திரும்பி விரவில்லை. விசாரித்துப்பார்த்தால், சந்தியில் 'ரவுண்ட் அப்' பில் தலை ஆட்டிமுன்னே நிறுத்தி வைத்திருந்ததாகக் கேள்விப்பட்டுப் போய் இராணுவ முகாமில் கேட்டுப் பார்த்தால் அப்படி ஒரு ஆள் பிடிபடவில்லை என்று கையை விரிச்சினம்.

பிறகு அடுத்த முகாம் அண்டிய முகாம் எண்டு பலாலி ஈறாகப் பார்த்துக் களைத்தது தான் மிச்சம். அன்று தொட்டு ஆலோசிச்சு, ஆலோசிச்சு ஆள் மூளையை விட்டுவிட்டார். ஒழுங்கான சாப்பாடு இல்லை... தொழில் துறையில்லை.... பைத்தியமாகித் திரிகிறார்.... நான் தான் இடியப்பம் பிட்டு அவித்துச் சாப்பாட்டுக் கடைக்குக் குடுத்து அரை வயிறும் கால் வயிறுமாகக் காலம் கழியுது.

"இப்படி ஒரு நாளில் தான்...."

கிழவி சுகந்தியைச் சுட்டிக்காட்டினாள்.

சரியாகப் பத்தெழுத்தும் பாவனையும் இந்தப் பிள்ளை கமலியின்ரை சாயல். இந்தப் பிள்ளையைக் கண்டால் போதும் கமலி என்று சொல்லிக் கொண்டு பின்னால் போவார். இவளைக் கண்டால் ஒரு சந்தோஷம். இப்படித்தான் அண்டைக்கும் இந்தப் பிள்ளையைத் தொடர்ந்திருக்கிறார் போலை. எங்களின்ரை விதி அப்படி.... விபத்து நேர்ந்து போச்சு. இனி அவர் தப்பிப்பிழைக்கிறது எண்டால்....

வார்த்தைகளில் அவநம்பிக்கை இழையோடியது. அவள் விம்மி விம்மி அழத் தொடங்கினாள்.

"நாங்கள் செய்த பாவம் பிள்ளையை வாழுகிற வளர்கிற வயசில பறி கொடுத்திட்டு நிற்கிறம். அது சீவனோடு தான் இருக்குதோ, இல்லை பலாலியிலோ களுத்துறையிலோ... அனுராதபுரத்திலோ இல்லை செம்மணியிலோ யார் அறிவார்.

நாங்கள் போகாத இடமுமில்லை. தேடாத தளமுமில்லை. முறையிடாத பேருமில்லை. எல்லா கட்சிகளின்ரை கவனத்துக்கும்

கொண்டு போனதுதான், மனித உரிமைக் குழுவிலுந்தான்...

அங்கே போனபோது தானே கண்டது. எத்தனை பாவிகள் வீட்டில் வைத்து தொலைந்து போனவரின் பெற்றோர் பாதையிலை, பாடசாலையலை போனவழியிலை தவறிய பிள்ளைகளின் பெற்றோர், உறவினர். கணவனைத் தொலைத்த இளம் பெண்கள். பிள்ளைகளைத் தொலைத்த பெற்றோர்.

அப்போதுதான் எண்ணினன். இது எனக்கு மட்டும் ஏற்பட்ட இடிபாடு இல்லை. இது நாடளாவிய சோகம். எங்கள் சமூகத்துக்கு ஏற்பட்ட சாபக் கேடு எண்டு மனத்தைத் தேற்றிக் கொண்டேன். ஆனால் இந்த மனுஷன்ரை மூளை பிசகிக் கிடக்குது.

இனி நானும் மூளையை விட்டால் இந்த மனுஷன்ர கதி... இனி இங்கே முழிக்கிற இந்தப் பாலகன்ர கதி... அது அந்தரிச்சுப் போகும்.

நானும் மனதைக் கல்லாக்கி.... என்ர பிள்ளையின்ரை செய்தி வரும்.... எங்களுக்கும் விடிவு வரும்... ஒரு காலத்தை நெட்டித்தள்ளிக் கொண்டிருக்கின்றன. இப்போ இந்த மனுசன்.... இப்படி ஐயோ ! இனி எங்களுக்கு ஆர் துணை" மார்பில் அடிக்காத குறையாக விம்மி விதிர்விதிர்த்து....

"அம்மா ! அழாதையுங்கோ! தழிழன்ரை விதி இதுவாகப் போச்சு ! இனி நடக்கிறதை காணவேண்டியதுதான்"

காணாமல் போனவைக்கு நஷ்டஈடு குடுக்கிறதாகச் செய்தி வந்தது. பிறகு சில பேரின்ரை இருப்பிடமே தெரியவில்லை எண்டு செய்தி வந்தது. மொத்தத்தில செம்மணி விவகாரம் புகைஞ்சு போச்சு.

இழந்த உயிருக்கு என்ன தொகை குடுத்தாலும் ஈடாகுமே ஆனால் அப்படி தத்துவம் பேசிப்போட்டு இருக்க மனம் கேட்குது. இல்லையே ! பெற்ற வயிறு பற்றி எரியுதடி. நான் தனிச்சுப்போனனடி...

"நீங்கள் தனியில்லை அம்மா நாங்கள் உங்கள் பிள்ளைகளைப்

போல உறுதுணையாக இருப்போம் யோசியாதையுங்கோ...."

அடுத்த நாள் காலையில் அவர்கள் எல்லோரும் வைத்திய சாலைக்குச் சென்று கிழவனைப் பார்ப்பதாக உறுதியளித்துவிட்டு தோழிகள் பிரிந்தனர்.

ஏற்கனவே தீர்மானித்ததுபோல் தோழிகள் எல்லோரும் குறிப்பிட்ட இடத்தில் சந்தித்துக்கொண்டனர். சுகந்தி மட்டும் வந்து சேரவில்லை. எல்லோர் முகத்திலும் ஒரு வித சோகத்தின் சாயல். அவர்களுக்கு இயல்பாகவேயுள்ள குதூகலமும் உற்சாகமும் எங்கே முடங்கிவிட்டதோ! கை மணிக்கூட்டையும் பாதையையும் அடிக்கடி மாறிமாறிப் பார்த்த வண்ணம் ஒருவித பரபரப்பில் யாவரும்.

"அதோ சுகந்தி" கூவினாள் வனிதா.

சுகந்தியைக் கண்டதும் எல்லோரும் வியப்பின் விளிம்பில்...
"இது சுகந்தி தானா? முதல் நாள் அந்தக் கிழவன் வீட்டில் கண்ட கமலியின் போட்டோவில் கண்டமாதிரி.

நடு வகிடுவிட்டு தலை மேவிச்சீவி, இரண்டு பின்னலும் இரு தோளின்மேல் முன்பக்கம் மார்பில் தொங்க... பின்னல் நுனியில் வட்ட ரிபன். நெற்றியில் கரும்புள்ளியாக ஒட்டிய திலகம்... நீளமாய்க் குருவிக்கூடு போல் தொங்கும் காதணி. கையில் 'றில்' வைத்துத் தைத்த சட்டை அப்படியே உரித்து வைத்தாற்போல் கமலி... கமலியேதான்.

உலகில் எங்கையாவது ஒத்தசாயலில் ஏழுபேர் உண்டு என்பார்களே... இங்கேயே.... இருவரா....

அமுதா சொன்னாள்.

நீ 'பேய்காய்' தானடி சுகந்தி. உன் அலங்காரம் 'அந்த மாதிரி' இருக்கடி. நீ அசல் கமலி மாதிரியே இருக்கிறாய். உன்னைக் கண்டால் கிழவன்...."

"சரி சரி, ஆஸ்பத்திரிக்குப் போவமடி... நேரம் தாமதமாகுது" அவசரப்படுத்தினாள் ராஜி.

வைத்தியசாலையில் மணியடித்துப் பத்து நிமிடங்கள் கடந்து விட்டன. துரிதமாக நடந்து 'வார்ட்டில்' போய்த் தேடினர். அங்கே தாயும் மகனும் சோகமாக நிற்பதைக் கண்டு அருகில் சென்று பார்த்தால்...

"இரத்தம் ஊறிய கால்கட்டு. வயிற்றில் கட்டுடன் சோர்ந்து போய் கிழித்துப் போட்ட வாழைநாராக நொய்ந்துபோய் படுத்திருந்த கிழவனைக் கண்டதும் பரிதாபமாக இருந்தது. சுகந்தியைக் கண்டதும் அவர் விழிகளில் ஒரு விகசிப்பு. எழுந்திருக்கவோ பேசவோ எத்தனித்தும் இயலாத நிலையில் உதடுகள் மட்டும் 'கமலி' என்று அரற்றுவது துல்லியமாகத் தெரிந்தது. கிழவன் சுகந்தியைத் தன் மகள் கமலி என்று எண்ணிவிட்டது எல்லோருக்கும் புரிந்து விடுகிறது. எல்ரோரும் சுகந்தியை உற்று நோக்குகின்றனர். சுகந்தி அவர் அருகில் சென்றாள்.

'அப்பா !" என்ற வார்த்தை அவர் காதில் அமுத தாரையாக விழ அவர் முகத்தில் மலர்ச்சியின் கீற்று. எழுவதற்கு எத்தனிக்கும் அவரை அமர்த்திப் படுக்க வைக்கிறாள் சுகந்தி. அவர்கள் கொண்டுவந்த வெந்நீர்ப் போத்தலில் இருந்து ஊற்றி அவள் பருக்கிய பாலை மிடறு முறிய மென்று விழுங்குகிறார் கிழவன். அவர் முகத்தில் என்றுமில்லாத ஒருஅபரிமிதமான ஒளிவீச்சு. அவர் விழிகள் மலர கன்னம் விகசிக்க உதடுகள் விரிய 'கமலி..க...ம...லி...'

பட்டென அவர் தலை சாய்கிறது. அவர் மீளா நித்திரையில் ஆழ்ந்துவிட்டார்..

ஞானம் - 2001

# தூவானம்

எழுதுவினைஞர் ஏகாம்பரம் மெல்ல மெல்ல பூனை போல் அலுவலகத்துள் நுளைகிறார். கையில் அன்றைய சுடர் ஒளிப் பத்திரிகையும் கடந்த மாத ஞானம் சஞ்சிகையும் சுருளாக.

வணக்கம் ஐயா! என்ற அலுவலக வேலையாள் ஆனந்தனின் வரவேற்பை கௌரவத்துடன் ஏற்றுக்கொள்ளும் தோரணையில் தலையைச் சாய்த்துவிட்டுப் போய் இருக்கையில் அமர்ந்தார். தாழ்ந்த தரத்தில் உள்ள அலுவலக வேலையாள் என்றாலும் அவனுடைய தயவும் சிலநேரம் தேவைப்படுமே! அவனையும் 'பிளீஸ்' செய்ய வேண்டிய கட்டாயம் அவருக்கு. 'ஸ்....ஸ..' என்றபடி இருக்கையில் அமர்ந்தவரை 'என்ன காணும்' எங்கே போய் வருகிறீர் இத்தனை நேரமா? என்று அருகில் இருந்த இராமலிங்கத்தாரின் கிணுகிணுப்பு உசுப்பியது.

"அது" இராமலிங்கண்ணை மரக்கறி சாமான் வாங்கி வீட்டிலை கொண்டுபோய்க் குடுத்திட்டு வாறன். இண்டைக்கு வெள்ளிக்கிழமை எண்டபடியால் மீன் வாங்கச் சந்தைக்குப் போகவில்லை அல்லது இன்னும் தாமதமாகிப் போயிருக்கும்"

"அதுக்கேன் இவ்வளவு நேரம்?"

"அதையேன் அண்ணை கேட்கிறியள்? வீட்டுக்குப் போனால் மனுஷிக்காரி சும்மா விட்டாளே! கை தூக்க இயலாது. தேங்காய் துருவித் தந்துவிட்டுப் போங்கோ எண்டு ஒரே ஆய்க்கனை"

"ஐயோ! ஏகாம்பரம்! உம்மை ஏ.ஓ எல்லா விசாரித்தவா"

"நல்ல வேலை செய்தியளே! ஏன் இவ்வளவு நேரம் சொல்லவில்லை?. ஏகாம்பரம் பரபரத்தார்.

தன்னைச் சுதாரித்துக்கொண்டு நிர்வாக உத்தியோகத்தரின் அறைக்குள் ஏகாம்பரம் நுழைந்தார்.

"குட் மோணிங்"என்றார்."சேர்" என்றெல்லாம் தலைப்பாகை கட்டுவதில் ஏகாம்பரத்திற்கெல்லாம் உடன்பாடில்லை.

'குட் மொணிங் மிஸ்டர் ஏகாம்பரம். என்ன சீற்றிலை ஆளையே காணவில்லை!

"......வ......வந்து வயிற்றிலே ஒரே குளறுபடி. இஞ்சி போட்டுப் பிளேன் ரீ குடிக்க வேணும் போல இருந்தது.

"அதுதான் வீட்டுக்குப் போய் வருகிறீயளோ?"

"ஐயோ! இல்லை, நான் 'சுவைச்சோலை'யிலே போய் ஒரு நல்ல......." "அது சரி மிஸ்ரர் ஏகாம்பரம்.அடிக்கடி வயிற்றுக் கோளாறு வருகிறதுதான் மோசம். ஊரோடு உத்தியோகம் பார்த்தால் இந்தத் தொற்றுநோய் இருக்கத்தான் செய்யும். எதற்கும் ஒரு எல்லை உண்டில்லையோ?.

இன்று வெள்ளிக்கிழமை. 'பப்ளிக்' வருகிற நாள். பொது சனங்களை நாங்கள் அசௌகரியத்துக்கு உள்ளாக்கக் கூடாது. அதோட நாங்களும் எங்களின்ர கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேணும். நீங்களெல்லாம் எங்களில் பார்க்க அனுபவம் நிரம்பப் பெற்ற ஆட்கள்.

நாங்கள் இதெல்லாம் உங்களுக்குச் சொல்லித் தரவேணு மென்றில்லை...

ஒருமாதிரியாகச் சிரித்துக் கொண்டே கீழ்க்கண்ணால் நோக்கியபடி ஏதோ எழுதுவதில் சுறுசுறுப்புக் காட்டியபடி கூறினார். நிர்வாக உத்தியோகத்தர் சற்குணம் நிர்வாக உத்தியோகத்தர் வேலையில் மூழ்கி விட்டார்.அறையை விட்டு வெளியேறிய ஏகாம்பரத்துக்கு எரிச்சல் இப்போது குறைந்திருந்தது. நிர்வாக உத்தியோகத்தர் அத்தோடு விட்டாரே என்ற நிம்மதிப் பெருமூச்சு இதயத்தைக் குளிர்வித்தது.

"அநியாயமாக இந்த ஆளைப்பற்றி அவதூறு எண்ணிவிட்டேனே. அவனல்லவோ மனிதன்." என்று மானசீகமாகப் பாராட்டு வழங்கியபடி இருக்கையில் போய்த் தொப்பெனச் சாய்ந்தார் ஏகாம்பரம்

"ஆ! நல்ல கதை. இவர் என்ன என்னிலை பிழை பிடிக்கிறது. நாங்கள் ஒரு நேரம் விளையாடினாலும் ஒரு நேரம் இருந்து வேலையை முடித்துக் கொடுக்கிறம் தானே! இவர் என்ன 'ஓவர் ரைம்' தருகிறாரோ

'லியூலீவ்' தருகிறாரோ? நல்ல கதை........ஆங்.........."

"எப்படி எனறாலும் உன் வாயச்சவடால் மட்டும் குறையாது. உந்த வாயும் உனக்கு இல்லையெணடால் பெட்டைநாய் கொற கொற எண்டு இழுத்துக் கொண்டு போய்விடும்.....ம். இராமலிங்கம் அலுத்துக் கொண்டார்

"சும்மா போங்கோ அண்ணை!" என்று வெகுளியாகச் சிரித்த ஏகாம்பரம் குரலைச் சற்றே தாழ்த்திக்கொண்டு,

"அண்ணை விஜயம் தெரியுமோ? ஏ.ஓ வின்ர தங்கைக்குக் கல்யாணம். 'காட' அடிச்சு கல்யாணம் கொஞ்சம் 'டீங்'காகச் செய்யப்போவதாகக் கேள்வி.

"அதுக்கென்ன! நாங்களும் போய் மணமக்களை ஆசீர்வதிச்சிட்டு வருவம்

ஏகாம்பரத்துக்கு எரிச்சலாக வந்தது.

என்னணண்ணை கதை விளங்காமல் ஏ.ஓ..ஆள் கொஞ்சம் சாதி இளக்கமெல்லோ ...நாங்கள் போய் சபை சந்தியில அளவளாவி செம்பெடுத்து வாய் நனைச்சு ம்...ம்... எனக்கெண்டா நல்லாகப்படயில்லை. அதுதான் ...
ஏகாம்பரத்துக்கு ஆத்திரம் உச்சிவரை ஏறியது. எரிச்சலுடன் ..
என்ன காணும் நீர்! நாங்கள் இப்போ எங்கே இருக்கிறோம்?

'கலியுகத்திலை....'

"இல்லை ஹெலி யுகத்திலை ..கணினி யுகத்திலை..புத்தாயிரம் ஆண்டில்..லோகம் சுருங்கிக்கோண்டு வருகிறது. ஆனால் நம் மனப்பாங்கு விரிவடையக் காணோமே! இந்தக் காலகட்டத்திலும் உந்த சாதி சம்பிரதாயங்கள் பார்த்துக்கொண்டு.....வெட்கக்கேடு ...சீ...."

'நீங்கள் போற்றுகிற சாதிக்காரங்கள் எல்லாம் செய்கிற அட்டூழியங்களை இந்தக்கந்தோருக்குள்ளை நாங்கள் பார்க்கிறோம் தானே!

"அது சரி ஏகாம்பரம். இப்ப ஒரு கதைக்குச் சொல்லுறன். உன்ர மகள் ஒரு இளக்க சாதிக்காரனைக் காதலிச்சிட்டாள் எண்டு வைப்பம். நீ என்ன செய்வாய்? காதலை....."

ஏகாம்பரம் இடை மறித்தான்.

"அதுதானே நான் சொல்லி வைத்திருக்கிறன். காதலிச்சாலும் புளியங் கொம்பாய்ப் பார்க்கச் சொல்லி ...."

"அட விடுபேயா! காதல் சொல்லிக் கொண்டே வரும். சாதி சமயம் பார்த்துக்கொண்டே வருகிறது? சரி.. சரி... நீயும் உன்ட சட்டதிட்டங் களும்.....ஆனால் ஒன்று மட்டும் சொல்லுறன். நாங்கள் காலஓட்டத்தோடசேர்ந்து போக வேணும் இல்லை என்றால் நாங்கள் தான் வாழ்க்கையிலை பின்தங்கி விடுவம்.

"அண்ணை! எனக் கொரு 'ஐடியா' வருது.

"எனக்குத் தெரியும், உன்னுடைய மோட்டு மூளைக்கு இப்படிக் கோணல் ஐடியாக்கள் சட்டுப் புட்டென்று முளைக்குமென்று."

"கதையைக் கெளுங்கோ! கல்யாண வீட்டு நேரம் அவையின்ர ஆட்களோடு கசமுசாவெண்டு பிளாங்க எங்களுக்கு சரிப்பட்டு வராது.பார்க்கிறவை கேட்கிறவைக்கு மறுமொழி சொல்லித் தப்பேலாது.

"அப்பிடி என்றால்?

"கல்யாண வீடு அன்று போக வேண்டாம். அமளி அடங்கின பிறகு அடுத்த நாள் மாலை நாங்கள் இரண்டு பேரும் 'சிமிக்கிடாமல் போய் வருவோம் "சரி அப்பா! உன் இஷ்டம் எப்படியோ அப்படியே ஆகட்டும்.அடுத்த நாள் நாங்கள் போய் வரலாம். அவர் தப்பாக எடுத்துக் கொள்ள மாட்டார் அத்தனை பரந்த மனம் அவருக்குண்டு" என்றார்.

அவர்கள் தீர்மானித்தபடி திருமணநாளுக்கு அடுத்த நாள் இருவரும் மாலை ஐந்தரை மணியளவில் நிர்வாக உத்தியோகத்தர் சற்குணத்தின் வீடு தேடிப் புறப்பட்டனர்.

திருமணவீட்டு வாயிலுக்கு வந்துவிட்டார்கள். கல்யாணவீட்ட அமளி அடங்கி ஒரு அமைதி நிலவியது. கட்டிய குலை வாழையும் பந்தலும் அப்படியே இருந்தன. வாயில் நிறைகுடம் அகற்றப்பட்டு தரை 'பளிச்'சென்று சுத்தமாய் இருந்தது.

நிர்வாக உத்தியோகத்தர் சற்குணம் வாயிலில் நின்று இருவரையும் கை கூப்பி வரவேற்றார்.

"வாருங்கோ! வந்து உட்காருங்கோ. கல்யாண தம்பதிதான் இல்லை. இவை மாப்பிள்ளை வீட்டுக்கு 'கால் மாறிப் போய் விட்டினம்" சற்குணம் சொல்ல,

"அதனாலென்ன, அவை எங்கிருந்தாலும் எங்கள் ஆசீர்வாதம் உரித்தாகட்டும். வாழ்த்துக்களைக் 'கொன்வே' பண்ணிவிடுங்கோ" எனக் கூறியபடியே கொண்டுவந்த பரிசுப் பொருள் அடங்கிய 'பார்சலை' சற்குணத்திடம் கையளித்து விட்டு அமர்ந்தனர்

நன்றி நவிலலுடன் பரிசை ஏற்றுக்கொண்ட சற்குணம், ஏதோ சம்பிரதாயத்துக்கு என்றில்லாமல் மனப்பூர்வமாகவே சொன்னார்.

"இதெல்லாம் என்ன வேலை பாருங்கோ. ஆளுக்கு ஆள் தான் முக்கியம். பரிசு, அன்பளிப்பு எல்லாம் இரண்டாம் பட்சம்தான்"

இவர்களுக்கென்னவோ சற்குணம் 'பொடி' வைத்துப் பேசுவது போலிருந்தது. குற்றமுள்ள நெஞ்சு.

அதன் பின் நாட்டுநடப்பு, அரசியல் அலசல், அலுவலக நடவடிக்கைகள் என்று பேச்சு காரசாரமாகவும் சிலசமயம் சுவாரஸ்யமாகவும் சில சமயம் நகைச்சுவையாகவும் நடந்தது

பேசிக்கொண்டே இருந்த சற்குணம் உள்ளே சென்றவர், இரு தட்டுகளில் பலகாரம் கொண்டுவந்து வைத்தார்.

அப்போதுதான் சுட்டெடுத்த அரைத்த உழுந்துவடை பருத்தித்துறைக்கே உரித்தான அந்தத் தட்டைவடை, அரியதரம், சீடை சிற்றுண்டி வகைகள், அத்துடன் 'கேக்" துண்டுகளும் பிஸ்கட் வகைகளும், பழங்களும் கண்ணைப்பறித்தன.

ஏகாம்பரமும் இராமலிங்கமும் ஒருவரை ஒருவர் அர்த்தபுஷ்டியுடன் நோக்குவதை சற்குணம் கவனிக்கவில்லை.

சில கணநேரம் ஒருவித சலனம், எல்லோர் மனதிலும். 'பட்'டென இராமலிங்கம் தனக்கு வழங்கப்பட்ட தட்டிலிருந்து உழுந்து வடையை எடுத்து நோகாமல் கடித்தார்.

ஏகாம்பரத்துக்கோ இக்கட்டான நிலைமை. வேறு வழியின்றி தனக்குரிய தட்டில் கை வைத்தார். அவர் கை தானாகவே சென்று 'பிஸ்கற்'றை எடுத்தது மெல்ல மெல்ல மென்று கொண்டிருந்தார். கூடவே ஒரு பழமும். அதற்கிடையில் இராமலிங்கம் தடடிலுள்ள பலகாரங்களில் பாதிக்கு மேல் காலி செய்துவிட்டார்
இராமலிங்கம் பட்சணங்களை எடுத்து உண்ணும் அதே வேளை,

வீட்டுத்தயாரிப்பான பலகாரங்களை ஒதுக்கிவிட்டு கடைத்தயாரிப்பான 'பிஸ்கற்றையும் பழத்யையும் மட்டும் சாப்பிட்டுத் தன் ஆசாரத்தன்மையை சாமர்த்தியமாக அமுல்படுத்திய ஏகாம்பரத்தின் சமயோசித்தை மனதிற்குள் வியநதவாறே பருக என்ன கொண்டுவரட்டும் என்ற பாவனையில் "குடிக்க..." என்று இழுத்தார்

"எனக்கு ஒன்றும் வேண்டாம்.வயிறு ஏதோ கோளாறு பண்ணுது" என்று தயங்கினார் ஏகாம்பரம். இராமலிங்கத்துக்கு மட்டும் குளிர்பானப் பெட்டியிலிருந்து எடுத்துவந்த 'பெப்சி' போத்தலை உடைத்துக் கொடுத்தவர் எதேச்சையாகத் திரும்பி வெளியே பார்வைறை ஓடவிட்டார்.

இத்தனை வேகமாகக் கடுகடுத்த மழை இப்போது ஓய்ந்திருந்தது. மழை விட்டும் என்ன! தூவானம் விடவில்லையே!.

சுடரொளி
பங்குனி 26 - சித்திரை 1, 2002

# என்னுயிர் நீ தானே !

தேமதுரத் தமிழோசை உலகெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்.

அடுத்த வீட்டு வானொலியில் ஐ.பி.சி தமிழ் ஒலிபரப்பு ஆரம்பமாகிவிட்டது. சரியாக பழைய நேரம் ஐந்தரை மணி. அருமைநாயகமும் அன்னம்மாவும் பரக்கப் பரக்கத் தயாராகி சந்தியிலுள்ள தொலைத்தொடர்பு நிலையத்திற்குப் புறப்பட்டார்கள்

அருமைநாயகத்துக்கோ நீரிழிவு நோய். உணவுக் கட்டுப்பாடோ எக்கச்சக்கம். உடலில் தஞ்சக் குறைவு. எதைத்தான் உண்டென்ன.... உடலோடு ஒட்டினால்தானே.... அன்னம்மாவுக்கு ஆஸ்துமாவின் தாக்கம். நெஞ்சுமுட்டும் களைப்பும் இழுப்பும்......

தெருவில் இறங்கும்போது ஆறுமணி. மின்விளக்குகள் பட்டென அணைந்துவிட வீதியை இருள் மூடிக்கொண்டது. வைகறை இருள் முற்றாக அகலவில்லை.

அன்னம்மா வீழ்ந்துவிடுவாளோ என்ற கரிசினையில் அருமைநாயகமும், அவர் உறுதியாக நடக்கமாட்டாரே என்ற கவலையில் அன்னம்மாவும் ஒருவருக்கு ஒருவர் ஆதாரம் நல்கியவாறு தட்டுத்தடுமாறி நடக்கின்றனர். நெய்க்குத் தொன்னை ஆதாரமா, தொன்னைக்கு நெய் ஆதாரமா?

ஒருவாறு அதிக சிரமமின்றி தொலைத்தொடர்பு நிலையத்தைச் சென்றடைந்து விட்டனர்.

நல்லவேளையாக ஆட்கூட்டம் இன்னும் சேரவில்லை.

முதன்முதலில் கனடாவில் உள்ள மூத்தமகன் இளங்கோவுடன் தொடர்பு கொள்வதற்கு தொலைபேசி இலக்கத்தைப் பதிவு செய்து கொண்டனர். அதிக தாமதமின்றி அவனிடமிருந்து அழைப்பு வந்தது. ஆசை தீர மகனுடனும் மருமகள் மாலதியுடனும், பொச்சம் தீர பேரப்பிள்ளைகளுடனும் ஆள் மாறி ஆள் மாறி உரையாடினர்.கடைசியில் இளங்கோ, தங்கை பவானிக்கு அறிவிப்பாகவும் சுவிஸ்ஸிலிருந்து அவளுடைய அழைப்பு வரும் வரை காத்திருப்பதாகவும் கூறி தொலைபேசியை வைத்தான்

இப்போது மணி எட்டாகி விட்டது. பவானியின் அழைப்பு வந்த பாடில்லை. ஒருவாறு கற்பனை பாதி காணும் காட்சியை இரசிப்பது பாதியாய் நேரத்தை நெருடித் தள்ளிக்கொண்டிருந்தனர். அங்கே வேறொருவர் ஜேர்மனியில் இருக்கும் தன் உறவினருடன் உரையாடிக் கொண்டிருந்தார். சரியாக எட்டே முக்காலுக்குத்தான் தொலைபேசியைக் கீழே வைத்தான் மனுசன்.

தொலைத்தொடர்பு நடத்துனர் இடைவிடாமல் யாருடைய இலக்கத்தையாவது குத்திக் கொண்டிருந்தார். அப்படியெனில் புற அழைப்புகள் எப்படி வரும்? கிழவனுக்கும் கிழவிக்கும் சலிப்புக் கண்டுவிட்டது. எப்படியோ பவானியின் அழைப்பு வந்துவிட்டது. பவானி நிரம்பவும்தான் அழுதாள். அப்பாவையும் அம்மாவையும் கண்ணில் வைக்க வழியில்லையே என் தொலைபேசியில் உருகினாள், விம்மினாள், வெதும்பினாள். பெற்றோரும் ஒரு பாட்டம் கண்ணீர்மழை பொழிந்து தீர்த்தனர். இப்படிப் பெற்றவர் ஒரு மூலையிலும் பிள்ளைகள் ஒரு முடுக்கிலும் ஆகிவிட்ட தமிழரின் தலைவிதியை நொந்து கொண்டனர். ஈற்றில் தம்மில் ஆறுதல் வார்த்தைகளால் பூசி மெழுகிக் கொண்டனர். ஏறக்குறைய முக்கால் மணி நேரம் கண்ணீரில் கரைந்து போனது.

பவானி தன் தங்கை மாலினிக்கு அறிவித்ததாகவும் அவள் டென்மார்க்கிலிருந்து அழைப்பாள் என்று சொல்லித் தொலைபேசியை வைத்துவிட்டாள். இவர்கள் தொலைபேசியை கீழே வைத்ததுதான் தாமதம் இயக்குனர் வேறொருவரின் அழைப்புக்கு வேண்டி இன்னொருவரின் இலக்கத்தைக் குத்தத் தொடங்கிவிட்டார்.

இவர்களுக்குத் தெரியும். இனி மாலினியின் அழைப்பு வரக் குறைந்தது ஒலு மணித்தியாலமாவது ஆகும்.

அருமைநாயகத்துக்கு ஒரே இருப்பாக இருக்க முடியவில்லை. காலை மடக்கியும் முடக்கியும் எதிரில் உள்ள வாங்கு ஒன்றில் காலை நீட்டியும் குறுக்கியும் அவஸ்தைப்பட்டார்.

அன்னம்மாவுக்கு அடிக்கடி இருமல் வந்து தொந்தரவு கொடுத்தது. மூச்சுமுட்டி சுவாசிப்பது கூட சிரமமாக இருந்தது. தாகம் மேலிட அடுத்தவீட்டுக் காரியிடம் ஒரு செம்பு நீர் வாங்கிப் பருகி ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்.

இப்போது நேரம் பத்து மணி. அருமைநாயகமும் அன்னம்மாவும் தமக்குள் குசுகுசுத்தனர். 'இனி இளையவள் காந்தனுக்கு அறிவிப்பாள். காந்தன் சின்னவனுக்கும் சின்னவன் குட்டியனுக்கும் இப்படியே போகப்போகுது."

"அதுக்கென்ன? இண்டைக்கு வந்துவிட்டம்... எல்லோரிடமும் கதைத்துவிட்டுப் போவம்" மாலினியயுடன் பேசி முடித்தபொழுது நேரம் ஒரு மணி. கடைசியில் தம்பதிகள் மகன்மார் இருவருடனும் மகள்மார் மூவருடனும் பேசி முடித்துவிட்டனர்.

இனி கடைக்குட்டியன்தான் கதைக்க வேண்டும்.குட்டியனுக்கு அறிவிப்பதாகவும் அவனுடைய அழைப்புக்குக் காத்திருப்பதாகவும் மாலினி சொல்லியிருந்தாள்.

ஆன்னம்மாவுக்கு ஆயாசமாக இருந்தது.நேரமோ இரண்டுமணி கடந்து விட்டது. காலையில் ஒரு பால்கோப்பியுடன் புறப்பட்டது. களைப்பாக இருந்தது.

அருமைநாயகத்துக்கு மட்டும் என்னவாம். இனி ஒரு கணம் கூடத் தரித்திருக்கு முடியாது என்ற நிலைமை. இருவரும் தாம் இனிப்போவதாகவும் அழைப்பு வந்தால் தாங்கள் போய்விட்டதாகக் குடடியன் என்ற குமரனுக்குச் சொல்லும்படியும் வேண்டிக்கொண்டு தெருவில் இறங்கினார்கள்.

அன்னம்மாவுக்கு அடி எடுத்து வைப்பதே பகீரதப்பிரயத்தனமாக இருந்தது. அருமைநாயகத்துக்கும் அதே நிலைமைதான், முடியவில்லை.

ஒருவரை ஒருவர் கையினால் கட்டியணைத்தவாறு நத்தையாக ஊர்ந்தனர். "இண்டைக்குத்தான் என்ட மனசு குளிர்ந்தது. ஐஞ்சு பிள்ளைகளோடும் கதைச்சுப்போட்டம்."

"சும்மா சொல்லக்கூடாது. அவர்கள் எங்களை மறக்கவில்லை. எல்லாரும் எங்களை தங்களோடு வந்து இருக்கச் சொல்லி நச்சரிக்கினம். அவைக்கு விசர். நாங்களாவது தேசாந்திரம் வெளிக்கிடுவதாவது..."

ஆறு பிள்ளைகளைப் பெத்தம். கண்ணுக்கை பொத்தி வைச்சு வளர்த்தம். ஆளாக்கி விட்டம் ...

கண்டதென்ன? எல்லாரையும் பரதேசம் திரியவிட்டு தனிமையிலை வருத்தப்படுறோம். கடைசி காலத்திலை கொள்ளி வைக்கக்கூட ஆளில்லாமல்... அருமைநாயகம் நீண்ட பெருமூச்சு எறிந்தார்.

அன்னம்மா இடைமறித்தாள் "இஞ்சாருங்கோ சும்மா பிள்ளைகளைக் கரிச்சுக் கொட்டாதையுங்கோ. நாங்கள் தானே முழு விருப்பத்தோட முயற்சி எடுத்து பிள்ளைகள் நல்லா இருக்க வேணும் எண்டு எல்லாரையும் பிற தேசத்துக்கு அனுப்பி வைச்சது. அதுகள் எங்கேயெண்டாலும் நல்லாய் இருக்கட்டும"

"அதுசரி அன்னம்மா நாங்கள் செத்த பிறகு எங்களின்ரை தாய்மண்ணிலை எங்களின்ரை அடையாளமே அற்றுப் போய்விடுமோ எண்டு நினைக்கத்தான்...... எங்கள் பிள்ளைகளுக்கெண்டு எவ்வளவு சொத்தைப்பத்தைக் கட்டிக்காத்து வைச்சம். ஏல்லாம் அவத்திலை....."

ஏன் அப்பிடி நினைக்கிறியள். பிள்ளைகள் காததூரம் இருந்தாலும் பிறந்தைமண்ணை மறக்காதுகள் எப்ப சமாதானம் வரும், எப்ப இந்த மண்ண்லை வந்து குதிக்கலாம் எண்டுதான் ஏங்கிக்கொண்டிருக்கினம். ஏன் நீங்கள் பேரப்பிள்ளைகளோட கதைச்சியள்தானே என்னமாதிரித் தமிழ் கதைக்குதுகள் கேட்டியளே......!

"ஓ டொச்சிலும், ஆங்கிலத்திலும் சிந்திச்சு தமிழ் கதைக்கினம் தான் இதுக்கு காலம் தான் பதில் சொல்லவேணும். ஒரு காலத்தில் எண்டாலும்

பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள் வந்து இந்த மண்ணிலை காலூன்ற வேணும் எண்டுதானே சொத்துப்பத்தெல்லாம் காப்பாத்தி வைச்சிருக்கிறம்....." "எங்களின்ர சீவன் இல்லாவிட்டாலும் அது ஒரு காலத்திலை நடக்கும். சமாதானம் வரும் எங்களுக்கென்ன எங்கள் இனத்துக்கே ஒரு விடிவுகாலம் கிட்டும். அது இனி அதிக தூரத்தில இல்லை.." ஒரு தீர்க்கதரிசியின் உறுதியோடு மொழிந்தாள் அன்னம்மா. ஒரு பெருமூச்சு விட்டவள் தொடர்ந்தாள். " ஆனால் அந்த நாளைப் பார்க்க நான் உயிரோடு இருப்பேனோ தெரியவில்லை. உடல் நல்லாத் தளர்ந்து கொண்டுபோகுது".

"என்ன அன்னம்மா நீ உளறுகிறாய். என்னை இப்படி விட்டுட்டு நீ பூவும் பொட்டுமாய் சுமங்கலியாய் இந்த உலகத்தைவிட்டு போகலாம் எண்டு எண்ணம் போல......." அருமைநாயகத்தின் முகம் பார்க்கப் பரிதாபகரமாய் இருந்தது.

அன்னம்மா பரபரத்தாள். " ஐயோ எனக்கு அந்த எண்ணமெல்லாம் கிடையாது. நான் சுகமாய் செத்துவிட ஆசைதான். ஆனால் போய்விட்டால் உங்களை ஆர் கவனிக்கிறது...... ஒரு தேத்தண்ணி போட்டு குடிக்கத்தெரியாத மனிதன் நீங்கள். பக்கத்திலை இருக்கிற பொல்லை எடுத்துத்தர நான் வேணும். பக்கத்திலை நான் இல்லாமல் ஒருகணம் அண்டலிக்க மாட்டியளே.."

அப்ப என்னை சாக்காட்டிப்போட்டு நீ சாகிற எண்ணம்போல.." என்றார் அருமைநாயகம் இடக்காக. "என்ன கதை இது அபசகுனம் மாதிரி. உங்களை தனிய விட்டு போகிறதென்டால் என்ர உயிர் கூட்டை விட்டுப் பிரியாமல் கிடந்தியங்கும்."

அன்னம்மாவின் நாக்கு தளதளத்தது. குரல் கரகரத்து கம்மிற்று. கண்ணீர் ஆறாகபெருகி...... "உன்னை விட்டுவிட்டு நான் சாக எனக்கும் மனமில்லை. நீ தனிய இருந்து காலம் கழிக்கமாட்டாய்....." "நாங்கள் கைப்பிடிச்சு நாற்பத்தஞ்சு வருசம். உங்களோட ஏதோ வழியா குப்பபை கொட்டிப் போடடேன். என்னமாதிரி நாங்கள் பிரியப்போறமோ......"

"ஆ.. இதென்ன அழுதுகொண்டு. என்ர உயிர் நீதானே அன்னம்மா. உன்ர கண்ணில வழியாது கண்ணீர் இரத்தப்பெருக்காக நெஞ்ச அரிக்குதடி. உன்உயிர் பிரிஞ்சால் என்னுயிர் இந்த யாக்கையிலை நிலைக்கும் எண்டு நினைக்கிறியோ எல்லாம் விதிப்படி நடக்கும் அதுக்கென்ன இப்படிக் கலக்கம்.."

சாய்மனைக் கதிரையில் இருக்கும் அருமைநாயகத்தின் முழங்காலோடு அண்மிய தொடைப்பகுதியில் தன்கன்னத்தைச் சாய்த்தவாறே அன்னம்மா பாகாக உருகினாள். அருமைநாயகத்தின் இடப்பகத்தில் அன்னமம்மாவின் தலையை நீவிவிட்டவாறே வலக்கரம் கொண்டு தன் விழியோரத்தில் கருக்கட்டும் நீர்துளியைச் சுண்டிவிட்டார்.

"நாங்கள் இப்பவே, இக்கணமே செத்துப்போனாலும் பிரச்சயில்லைத்தான் ஆனால் அவன் குட்டியன் குமரன் அவன்தான் உன்ர செல்லமகன். அவனோடைதான கதைக்க முடியாமல் போட்டுது" சிறிது வெறுப்பும் ஆத்திரமும் இழையோடிய உருக்காட்டமான தொனியில் அவர் சொல்ல..

"ஆர்.. ஆர்!! என்ரை மகனோ!!! உங்களுக்கென்ன மகனில்லையோ.. உதென்ன விசர்கதை. உந்த விண்ணாணக் கதையை மட்டும் விட்டு விடுங்கோ....."

"என்ரை மகன் எண்டால் இப்படிக் குதியன் கொள்ளுவானோ, இல்லை கேட்கிறன் யாரோ ஒரு குஜராத்திப் பெண்பிள்ளையோடை தொடுப்பு வைத்துக்கொண்டு அவளைத்தான் கட்டுவேன் எண்டு ஒற்றைக்காலில் நிற்கிறாரம்.. மூத்தவன் சொன்னான்."

" ஏன் இப்ப அவனைக் கரிச்சுக் கொட்டுறியள். வாலையிலை நீங்கள் மட்டும் சும்மாவே இருந்த நீங்கள் என்னைச் சுத்திச்சுத்தி வந்து சொக்குப்பொடிபோட்டு செய்த திருகுதாளங்கள் கொஞ்சம் நஞ்சமோ. எல்லாம் மறந்து போச்சாக்கும்..ம்......"

மலரும் நினைவுகளில் ஆழ்ந்துபோன அன்னம்மா கடந்த காலத்துக்கு பயணமாகிவிட்டாள். இளமைக்கால நினைவுகளில் அகமும் முகமும் மலர.... "ஒரு நாள் வீட்டிலை ஆச்சி அடுக்களையில் இருக்கிறா நீங்கள் வளவு மூலையில் முருங்கை மரத்தடியில் வேலிக்கருகில் வந்து வெளியில் நின்று இருமிக்கொண்டு இருக்கிறியள். எனக்கு கிட்டவர ஆசைதான். அப்பு ஆச்சி கண்டுவிடுவினமே என்ற பயம். நான் மெல்ல மெல்ல பூனைபோல பதுங்கிப்பதுங்கி முருக்கை மரத்தடிக்கு வருகிறன்"

"அப்பு படலையில் நிண்டு ஆச்சியைக் கூப்பிட்டு முருங்கை மரத்தடியிலை கள்ள ஆடு ஒன்று மேயப்பாக்குது விளக்கைக் கொண்டுவா

வெளியிலை.." அப்பு கத்துகிறார். "நீங்கள் மீயா..மீயா எண்டு ஆட்டைத் தேடுகிறபாவனையில் மெல்ல மெல்ல இடம் விட்டுப் போனீயளே.."

அருமைநாயகத்திற்கு இந்த வயசிலும் ஒரு வெட்கப்பூரிப்பு.. அனுங்கினார். "இதென்ன அன்னம்மா இந்த பழைய வாகடங்கள் எல்லாம் இப்ப படிச்சுக்கொண்டு.."

"அத்தோடை விட்டியளே? அடுத்த நாள் ஆடு விலைக்கு வாங்க துன்னாலையில் இருந்து வருவதாகச் சொல்லிக்கொண்டு இரண்டு பேர் வருகினம். நீங்கள் தலைப்பாகையையும் கட்டிக்கொண்டு சால்வையாலை முகத்தை பாதிமறைத்துக் கொண்டு நொண்டி நொண்டி வளவுக்குள் வந்து ஆரும் காணாமல் எனக்குக் கடிதத்துண்டு ஒண்டு கையில் திணித்துவிட்டுப்போனியளே.. நினைச்சால் இப்பவும் சிரிப்புச் சிரிப்பாக வருது.. ஹ..ஹ.."

"சிரிக்காதே.. அன்னம்மா அதிகம் சிரிக்காதே. முட்டு இழுப்புக்காரி நீ.."

"ஏன் பின்னே சிரிப்ப வராதே! வரக்குள்ள இடக்கால் நொண்டிக் கொண்டு வந்த நீங்கள் போகய்குள்ளே வலக்கால் நொண்டி நொண்டி.." " ஹ..ஹ.." அன்னம்மாவிக் சிரிப்பு அடங்கின பாடில்லை.

சிரிக்கிறாள் எக்காளமிட்டு, பெரிதாக தொடர்ந்து தொடர்ந்து தொடர்ந்து.. சங்கிலிப்பின்னலாக.. இதென்ன சிரிப்பு.. சிரித்துக்கொண்டே சொல்கிறாள். சொல்லிக் கொண்டே சிரிக்கிறாள்.

பின்னே.. பின்னே.. சிரிப்பு வராதே! உங்களின்ற கோபமும் குறிகளும் பத்தெழுதும் பாவனையும் உங்களின்ரை சாங்க பாங்க எல்லாம் அவன் குட்டியனிட்டைத்தானே கிடக்கு.. '..'.. கெக்கட்டச் சிரிப்பு, எக்காளத் தொனி.

சிலகணநேரம் ஒருவித நிசப்தம். தீடிரெனச் சிரிப்பு நிற்கிறது. அன்னம்மாவை இருமல் பீடித்துக் கொண்டது. இருமியிருமிச் சிரிக்கிறாள். சிரித்துக்கொண்டே இருமுகிறாள். இருமிக்கொண்டே சிரிக்கிறாள்.

ஓயாத அலை ஓய்ந்தது போல் "பட்" டென்று சிரிப்பும் நின்று இருமலும் நின்று மூச்சு மிட்டு ஒரு முக்கல் முனகல் முறுகல். விழிகள் மேல்நோக்கிச் செருக நிலை தடுமாறிச் சாய்கிறாள்.

அருமைநாயகம் பதறினார். "இதுதான் சொன்னனான். சிரிக்காதே அதிகம் சிரிக்காதே எண்டு கேட்டால் தானே!"

அன்னம்மாவின் உடலில் ஒரு அசுமாத்மும் இல்லை. அருமைநாயகத்திற்கு ஒரே பராதியாக இருந்தது. தடுமாறித் தடுமாறி நடந்து போய் அடுத்த வீட்டுச் சேகரைக் கூப்பிட்டு ஒரு கார் கொண்டுவரும்படி வேண்டிக்கொண்டார்.

கார் வந்துவிட்டது. அன்னம்மாவையும் அருமைநாயகத்தையும் சேகரையும் சுமந்து கொண்டு கார் வைத்தியசாலையை நோக்கி பறந்தது.

அன்னம்மாவின் தலையை தன் மடியில் தாங்கியவாறு கார் இருக்கையில் சாய்ந்து கொண்டு இருக்கும் அருமைநாயகத்திற்கு கற்பனை தறிகெட்டோடியது. அன்னம்மா "இனி பிழைப்பாளோ" அவருக்குச் சந்தேகம் வலுத்தது. "ஐயோ! அன்னம்மா! என்னைவிட்டுப் போய்விடேதேயடி."

"உன்னைவிட்டு ஒருகணமும் காலங்கழிக்க மாட்டேன்." "எடி நீ போகிறது என்றால் என்னையும் கூட அழைச்சுக்கொண்டு போடி....."

அருமைநாயகத்தின் நெஞ்சின் ஓலம் அன்னம்மாவிற்கு கேட்குமா? அருமைநாயகம் ஆலோசிக்க ஆலோசிக்க அவரின் நினைவு மங்கிக்கொண்டு வந்தது. மடியில் கிடக்கும் அன்னம்மா, கார்க்கண்ணாடி, கார் எல்லாமே சுழலுவதான பிரமை...

கார் கண்ணாடிக்குள் பின்னிருக்கையை அவதானித்த சேகருக்கு "திக்" கென்றிருந்தது. அருமைநாயகம் மயங்கிச் சாய்கிறார்?

திரும்பி நோக்கினான் அருமைநாயகம் உயிரற்றுக்கிடந்தார். காரை நிறுத்தும்படி ஓட்டுனரைப் பணித்தான் அருமைநாயகம் தாம்பத்திய ஓட்டப்பந்தயத்தில் மனைவியை முந்திவிட வேண்டும் என்ற அவாவில் உயிரை விட்டுவிட்டான்.

சேகர்பாடு தர்மசங்கடமாகி விட்டது. அரை உயிரில் அனுங்கும் அன்னம்மாவை எப்படியாவது வைத்தியசாலை சேர்க்வேண்டுமே. இந்த மனுசனின் சடலத்தை எப்படி வைத்தியசாலைக்குக் கொண்டு போவது. காரில் அப்படியே விட்டு விட்டு அறிவு மயங்கிக்கிடந்த அன்னம்மாவை கைத்தாங்கலாக காவிக்கொண்டு வைத்தியசாலைக்குள் நுழைந்தான்.

நுழைவாயிலில் அன்னம்மாவை பரிசோதித்த தாதி சேகரை ஒருவித ஏளனம் பொங்கப்பார்த்தாள். உதட்டைப் பிதுக்கினாள். "என்ன உங்களோடை நடப்பு? உயிர் பிரிந்த பிறகு உடலை ஏன் இங்கே கொண்டு வருகிறீர்கள்." என்பது போல் அவள் பார்வை இருந்தது.

"செத்தபிறகு ஆஸ்பத்திரியிலை ஏற்பிச்சு சடலத்தை மீளப்பெற அலைஞ்சு திரியப்போறியள். பேசாமல் கொள்ளாமல் சடலத்தோடை காரைத் திருப்புங்கோ." தாதி கிசு கிசுத்தாள்.

அன்னம்மாவும் அருமைநாயகமும் ஆசைபோலவே ஒன்றாய்க் கடைசி யாத்திரையை தொடங்கி விட்டார்கள்.

சங்கமம் 2004
(நோர்வே தமிழ் சங்க வெள்ளிவிழா சிறுகதைப்
போட்டியில் முதல் பரிசாக தங்கப்பதக்கமும்
பணப்பரிசிலும் வழங்கப்பட்டது.)

# பக்குவம்

**யா**ர் எதைச் சொல்லி என்ன. சாரதாவின் மனம் சாந்தியடைந்தாற்றானே காலம் கனிந்து வரும். கனவு பலிக்கும் என வேதாந்தம் பேசி மனதைத் தேற்றிக் கொள்ள அந்தத் தாயுள்ளம் இணைந்து வந்தாற்றானே.

இருபது வயதைத் தாண்டிய பின்னும் மகள் பூங்கோதை பூப்படையவில்லையே என்ற கவலை அவளை நாளும் பொழுதும் வாட்டி வதைத்துக் கொண்டேயிருந்தது. இதற்காக எத்தனை 'இறாவிலிப்' பட்டாள் அவள். தெரிந்த தெய்வங்களையெல்லாம் வேண்டி நேர்த்தி வைத்தாள். கோயில் குளம் என்று அலைந்து திரிந்து செய்யாத அர்ச்சனையா. பூஜை புனஸ்காரமா! சீக்கிரம் ஒருநாள் காரியம் நிறைவேறிவிட வேண்டுமே எனத் தவிப்புக் கடலில் தத்தளித்தாள்.

பூங்கோதையின் 'சாதக' ஓலையைக் கொண்டு போய் ஒன்றுக்கு மூன்று புரோகிதர்களிடம் காண்பித்து பலன் கேட்டாள். நிகழ்வது கெட்ட காலம் என்றும் காரியம் எப்படியும் கை கூடும் என்றும் கிட்டிய நம்பிக்கையூட்டிய பதிலில் மனதை சாந்தப்படுத்த முயன்றாள்.

நாளொன்றும் பொழுதென்றும் நகர நகர அவள் நெஞ்சின் அடித்தளத்தில் ஏக்கம் சிறுகச் சிறுக குடி கொள்ளத் தொடங்கிற்று. என்றைக்குமே இவள் கன்னிப்பருவம் எய்தாது இருந்து விட்டால் 'இருளி' என்ற 'பட்டப் பெயருடன். பூஜைக்கு உதவாத பூவாய். 'மூளி'யாக மூலைக்குள் முடங்கி விட வேண்டியது தானா. சீ..... இந்த உலகில் இது என்ன வாழ்வு......!

இப்பொழுதெல்லாம் பூங்கோதை மௌனியாகி விட்டாள். என்ன மாதிரி இளங்கன்றின் உற்சாகத துடிப்புடன் துள்ளாட்டம் போட்டுத்திரிந்தவள் பேசா மடந்தையாய்..... அமைதியே உருவாய்..... வாயில்லாப் பூச்சியாய்......

ஒரு நாள் சாரதா பூங்கோதையை அழைத்துக் கொண்டு போய் ஒரு பிரசித்தி பெற்ற ஆங்கில வைத்தியரிடம் ஆலோசனை கேட்டாள்.
பூங்கோதையை நுட்பமாகப் பரிசோதித்த வைத்தியர், ஒன்றுக்கும் அஞ்சத் தேவையில்லை எனவும் அவளுடைய பூப்பு இயற்கையாகவே நடைபெற சாத்தியக்கூறுகள் வலுவாகவே இருப்பதாகவும் முக்கியமாக சில "ஹோர்மோன்கள்" குறைபாடுகள் உண்டென்றும் மருந்து ஒழுங்காக உள்கொள்ளும்படி சில மாத்திரைகளும் கொடுத்தார். பூங்கோதையின் உடம்பில் ஊட்டச்சத்து குறைவு என்றும் சத்துணவு சாப்பிடும்படியும் அறிவுரை நல்கி அனுப்பி வைத்தார்.

சாரதாவின் அதீத கவனிப்பில் பூங்கோதையின் உடலில் ஆரோக்கியமான மாற்றங்கள் சிறுகச் சிறுகத் தென்படுவததை சாரதா உளப்பூரிப்புடன் அவதானித்துக் கொண்டு வந்தாள்.

எனினும், "கல்வித் தராதர" உயர்தர வகுப்பில் கற்கும் ஒரு இருபது வயதுக்காரி இன்னும் பூப்படையாது இருக்கிறாளே என்ற ஒரு பெற்ற தாய்க்கே உரித்தான அந்த இயல்பான ஏக்கம் அவள் நெஞ்சை நெருஞ்சி முள்ளாய் நெருடிக் கொண்டே இருந்தது.

வகுப்பில் உள்ள சகமாணவிகள் பூங்கோதையை ஒரு மாதிரியான கண்ணோட்டத்துடன் நோக்குவதும் அவளின் முதுகுக்குப் பின்னால் நாக்கு வளைத்து நையாண்டி செய்யும் போதெல்லாம் அந்த இள நெஞ்சுக்கு இயற்கையின் வஞ்சனையை எண்ணி 'படைத்தவனை' வேண்டிக் கொள்வதைத் தவிர் வேறு என்ன தான் செய்யத் தோன்றும் பாவம்!

நல்ல நாளும் அதுவுமாக ஒருநாள் குட்டொன்று வெளித்தது கூட்டில் குயிலொன்று கூவியது. தோட்டத்துப் பூஞ்செடியில் மொட்டொன்று வெடித்தது. கூட்டில் குயிலொன்று கூவியது. முற்றத்து தென்னையில் முற்றிய நல் பாளையொன்று 'பட்'டென்று வெடித்தது. பவளம் நிகர் மேனிச் சிட்டொன்று சிறகு விரித்தது. யார் செய்த புண்ணியமோ இன்று விடியுமுன்னே அவர்களுக்கு

'விடிவு' ஏற்பட்டுவிட்டது. "என்னப்பா! நான் 'கத்து'றன் இடிச்ச புளிமாதிரி இருந்து கொண்டு கண்டறியாத ஒரு றேடியோ கேட்பு."

கழுத்தை நொடித்த வாறே கணவர் நாகலிங்கத்தாரைச் சீண்டினாள் சாரதா.

பி.பி.சி ஒலிபரப்பை உன்னிப்பாக செவிமடுத்துக் கொண்டிருந்த நாகலிங்கம் "கேட்குது சாரதா! அதுக்கேன் இப்படி சுடுகுது மடியைப் பிடி" எண்ட கணக்கிலை பிடுங்கி அடுக்குறீர்.

அங்கே கிழக்கு மாகாணப் பகுதியிலை சனங்கள் படுகிற பாட்டைக் கேட்டால் தலையைச் சுற்றுது கேட்டியோ."

"ஏன் வடமராட்சி ஒப்பிறேக்ஷன் நேரம் நாங்கள் பட்டுத் திரிஞ்ச அவதியும் ஆறணியும் மறந்து போச்சே. கையில் கிடைச்சதை எடுத்துக்கொண்டு வரணிக்கு ஓடி நாங்கள் பட்ட சீரழிவு! அது, அவரவர் விதி. ஆனைக்கொரு காலம்" புனைக்கொரு காலம்.

"அவரவர் விதி இல்லை, தமிழனது தலைவிதி. அதையேன் பிரித்து பிரதேச வாதம் பேசுகிறாய். மனிதர் என்றால் எல்லாம் மனிதர் தானே"

இப்பொழுது சாரதாவுக்கு அது ஒன்றும் பிரச்சனை இல்லை. அவை பெரிதாகவும் தோன்றவில்லை. பூங்கோதை 'பக்குவம்' எய்துவிட்ட மகிழ்ச்சியில் தலை கால் புரியாமல் திணறிக் கொண்டிருந்தாள்.

"நீங்கள் போய், மாமி, மச்சாள், அண்ணன் வீட்டார் எல்லோருக்கும் 'வியளம்' சொல்லிப்போட்டு வாருங்கோ. பின்னே..... வருகிற வழியிலை சந்தைக்கும் போய் தேவையான சாமான்களை வாங்கி வாருங்கோ."

"நான் அவளுக்கு வேப்பிலைச் சாறு குடுத்திட்டு.... ஓ.... எனக்கு ஊருப்பட்ட வேலை கிடக்கு..... ருது சோபன விழாவை நாங்கள் வெகு ஜாங்காக நடத்த வேணும், கேட்டியளோ!"

என்ன சாரதா? நாடு நடக்கிற நடப்பிலை இந்த சூழ்நிலையிலே இதெல்லாம்.....!"

"என்ன விசர்க்கதை கதைக்கிறியள். எத்தனை நாட்களாகத் தவமிருந்து பெற்ற வரம் இது. பலித்த கனவு இது! எங்களுக்கு இருக்கிறதெல்லாம் இந்தச்

சடங்கை நல்ல சிறப்பாகச் செய்து கண்குளிரப் பார்க்க வேணும் என்டொரு அங்கலாய்ப்பு. எங்கட சீவியம் என்ன நிரந்தரமே! எப்ப என்ன இடியேறு வந்து விழுமோ? ஆர் கண்டது?;"

இதெல்லாம் ஊர் உலகத்திலை நடக்காத சங்கதியில்லை சாரதா. ஒரு பருவப் பெண்ணுக்கு இயற்கையாகவே நிகழும் மாற்றம் தானே! இதுக்குப் போய் ஏன் பெரிய எடுப்பெல்லாம்.."

"நல்ல விண்ணாணக் கதையல்லோ நீங்கள் பேசுறது. இது வராமல் வந்த வரம். இப்படி நடந்திராவிட்டால் என்ர பிள்ளையின்ர கதி..! வாழ்க்கை முழுக்க இருண்ட சீவியம் தானே! கடவுள் இப்பவெண்டாலும் கண் திறந்திட்டார்."

"எல்லாவற்றுக்கும் மேலே ஒரு அபூர்வ சக்தி எங்களை ஆட்டிப் படைக்குது. அந்த சக்திக்கு நாங்கள் தலை வணங்குவோம். ஆனால், இந்த பெரும் எடுப்பெல்லாம் தேவையற்றது. அதுவும் இன்றைய சூழ்நிலையிலே"

"தேவைதான்"

சாரதா அசைவதாக்காணோம். அவளைப் பூவும் பொட்டுமா.. சர்வாலங்கார பூஜிதையாக அலங்கரிச்சுப் பார்க்க வேணும், புகைப்படம் எடுக்க வேணும், ஏன்? வீடியோ படமும் எடுக்க வேணும்"

"ஏன்! அவள் அம்பிகாவின்ரை மகள் நந்தினி, பூங்கோதையில் பார்க்க நாலு வயது இளமை. அவளின்ர 'சாமத்திய வீடு' எவ்வளவு சிறப்பாக நடந்தது. மணவறை மாதிரி மேடையில அவளின்ர 'மேக்கப்' என்ன, மினுக்கல் என்ன, தலைக்குப் பால், அறுகம்புல் வைச்சு முழுக வார்த்த பொழுது கண்டியளே சினிமா நடிகையைவிட எவ்வளவு சிக்காரான சோடினை கண்ணுக்கு மை தீட்டி, இரட்டை வடச் சங்கிலி, நெக்லஸ், சரிகைச் சட்டை, பாவாடை.... அந்தக் கோலத்திலை நான் அவளுக்கு அதுவும் குளிப்பறையிலோ, கிணத்தடியிலோ இல்லை வீடியோ எடுக்க வசதியாக மணவறை மேடையிலே வைத்துத்தான் தலைக்குப் பால் அறுகு வைச்சு ஒவ்வொரு சொந்தக்காரரையும் பால் அறுகு வைக்கிற நேரம் படம் எடுத்து என்ன கண்டியளோ......"

"ஓம்.. ஓம்.. சரியாக ஒரு மணிநேரமாக எல்லாரும் பால் வைச்சு, பெட்டையைக் குளிப்பாட்டி.... அடுத்தநாளே அவளுக்கு ஜலதோஷம் பிடிச்சு காய்ச்சலாக நாலு நாள் படுக்கையிலை கிடந்து....."

"ஆ! பின்னே! உங்களுக்கு எதுக்கெடுத்தாலும் ஒரு கேலியும் இடக்குப் பேச்சும். ஒருவரைப் படம் எடுத்து ஒருவரைப் படம் எடுக்காவிட்டால் அனைவருக்கும் கோபம் வராதிருக்குமே! இப்படி ஒரு நல்ல காரியம். நடக்கையிலை இனம் சனத்தின்ர வெறுப்பை வாங்கிக் கட்டிக்கொள்ள முடியுமே! அனுசரிச்சுப் போகத்தான் வேணும்....."

"பிறகு ஸ்நானம் முடித்து பிள்ளைக்கு ஊரில் உள்ள அத்தனை ரக நகைகளையும் அணிவித்து அலங்கரிச்சு பட்டாடை சலசலக்க பிள்ளையை மேடைக்கு அழைத்துக் கொண்டு வருகிற நேரம் அபசகுனம் மாதிரி அந்த கமராக்காரனும் வீடியோகாரதனும் 'நில், நில்' என்று சைகை காட்டி 'நிறுத்தி நிறுத்தி' மெல்ல மெல்ல நகர விட்டு படமெடுத்து செய்து விட்ட ஆர்ப்பாட்டமும் அட்டகாசமும்.."

"சடங்கு சம்பிரதாயங்கள் கடைப்பிடிக்க வேண்டியதுதான். அதன் பேரிலை நாகரிக மோகத்தினாலும் பணச் செருக்காலும் அவைகளைக் கொச்சைப்படுத்தக்கூடாது."

"உங்களுக்கெல்லாம் ஒரு விநோதமான வியாக்கினமும் பகிடியும் தானே. ஓ.. அந்த மாதிரி நாங்களும் சிறப்பாகச் செய்து காட்ட வேணும். அவள் பிள்ளைக்கு என்ன ஆசை இருக்காதே! வாய் திறந்து சொல்ல மாட்டாள். தகப்பன், தாய் என்றிருக்கின்ற நாங்கள்தான் ஆலோசிச்சு இந்த அடுக்குகளை செய்ய வேணும். பிறகு பள்ளிக்கூடத்திலை, 'சிநேகிதிகள் எல்லாம் எங்கேயடி சாமத்திய வீட்டு அல்பம்' எண்டு கேட்டு நச்சரித்தால் அவளுக்குத்தானே வெட்கம்."

"மணவறை, றேடியோ செற், ரீ.வி. மூன்று வேணும் கேட்டியளே! ரி.வி ஒன்று பந்தல் மேடைக்கு அருகே, ஒன்று நடுக்கூடத்திலை ஆட்கள் 'சபை' நடக்கிற நேரம் பார்க்க ஒண்டு குசினிக்கு பின்னே. ஒரு நாதஸ்வர 'செற்'றுக்கும் சொல்லுங்கோ."

"ருது சோபன விழா அழைப்பிதழ் ஒரு இருநூறு 'காட்' ஓடர் பண்ணுங்கோ.... வேற.. வேற.." அவ அம்பிகா என்ன மாதிரி நெஞ்சை நிமிர்த்தித் திரிஞ்சவ தான் கண்டறியாதொரு சாமத்திய வீடு செய்து போட்டா எண்டு. நாங்கள் செய்து காட்ட வேணும். அதிலும் பார்க்க டீங்கா......ஓ.!
"அது சரி சாரதா. இதுக்கெல்லாம் என்ன செலவாகும் தெரியுமோ?"

"தெரியும்! அதுக்கென்ன! அதுதானே கனடாவில் இருந்து அவளின்ர தமயன் தங்கச்சின்ர செலவுக்கெண்டு இரண்டு இலட்சம் அனுப்பி இரண்டு மாசம் கூட ஆகையில்லை. அது வங்கியிலை கிடந்து வட்டி வளருது. ஏன்! இன்னும் காசு வேணும் என்றாலும் 'போனிலை' ஒரு சொல்லு சொன்னால் போதும். உடனே அனுப்பி வைப்பான் தெரியுமே..!

"அது சரி! நாங்கள் இவளுக்கு நல்ல தரத்திலை ஒரு பட்டுச் சேலை எடுக்க வேணும். அதுபோல பின்னேரம் 'கேக்' வெட்டுற நேரம் போட ஒரு நல்ல 'சல்வார் கமீஸ்' பின்னே நல்ல 'புது டிசைனிலை' ஒரு கவுண்..."

"ஆய்! இந்தா வருகிறாள் கோதை. அவளுக்கு வயது நூறு தான் இப்போதைக்கு சாவில்லை. அவளைப் பற்றிக் கதைக்கவும் ஆள் கண் முன்னாலை" சாரதாவின் வாயெல்லாம் பல்.

ஆச்சரியம் மீற விழிகளை அகல விரத்த சாரதா அடுத்த கணமே குரலைக் கடுமையாக்கிக் கொண்டு "என்னடி கோதை! எங்கேயடி உலாத்திப் போட்டு வருகிறாய். பக்குவப்பட்டு இரண்டு கிழமை கூட ஆகவில்லை. அதுக்குள்ளே......"

"என்னம்மா! எனக்கு ஒரு குழப்பமும் கோளாறும் இல்லை. அடுத்த மாதம் எனக்குப் பரீட்சை நெருங்குது. பாடம் படிக்கத்தானே போனது. அதுக்குள்ளே துள்ளி மிதக்கிறாய்?"

"ஓமடி! ஓமடி! நீங்களும் உங்களின்ர படிப்பும். படிச்சுத்தான் என்ன கிழிச்சியள்? போய்க் குளிச்சிட்டு சர சர எண்டு புறப்படு. கடைக்குப் போக.."

"ஏன்?"

"ஏனோ? இவ இன்னும் சின்னப்பாப்பா" எண்ட நினைப்பு. எடி நீ இப்ப பெரிய மனுக்ஷியடி. வயதுக்கு வந்திட்டாய்.."

"அது சரி.. ஏன் கடைக்கு.....?"

"உனக்கு ஒரு காஞ்சிபுரம் சாறி எடுக்க வேணும். கவுண், சல்வார் கமிஸ் எல்லாம் சேர்த்து...."

"ஏன்? எனக்குப் போதிய உடுப்புகள் இருக்குத்தானே. இப்ப உடுப்பு எடுக்க என்ன அவசியம், என்ன அவசரம்?"

"என்னடி! நோடாலக் கதை கதைச்சுக் கொண்டு இருக்கிறாய். 'சாமத்திய வீடு வருகிற சனிக்கிழமைக்குத் திகதி குறிச்சாச்சு.

ஊருப்பட்ட அடுக்குகள் கிடக்கு. இவ வித்தாரம் படிச்சுக் கொண்டு இருக்கிறா.."

"ஆரைக் கேட்டம்மா இந்த அடுக்கெல்லாம்"

"ஆரைக் கேட்கிறது? நாங்கள் சொல்கிறபடி கேட்டு நட. அவவுக்கு இப்ப வாய் வர வர நீளுது.."

"எனக்கு இந்தச் சடங்க சம்பிரதாயம் எல்லாம் வேண்டாம் அம்மா. எனக்கு விருப்பமும் இல்லை."

இப்பொழுது சாரதாவின் குரல் உச்சஸ்தாயியில் ஏறியது.

"பாருங்கோவன் அவவின்ரை கதையை! இத்தனை காலமா ஏங்கிக் கொண்டிருந்த காரியம் இப்ப நிறை வேறிக்கிடக்கு என்ன மாதிரி கனவு கண்டு கொண்டு இருந்த நான் தெரியுமே?"

"அம்மா! ஒரு பருவப் பெண்ணுக்கு நடக்க வேண்டியது தானே நடந்திருக்கு. இது நடக்காமல் இருந்தால் தான் அதசியம். இங்கே கொஞ்சம் தாமதமாகிவிட்டது. அவ்வளவு தான் வித்தியாசம். அதற்கேன் இவ்வளவு சலசலப்பு."

"அது மட்டுமல்ல இப்ப நாடு கிடக்கிற கிடையிலே, இன்றைய சூழ்நிலையில் இந்த டாம்பீகம் பாட்டு, படாடோபம் எல்லாம் தேவைதானோ? இதைவிட இன்றைய தேவைகள் நிறைய இருக்கே.."

"அங்கே வன்னியிலே, தென்மராட்சியிலே, வடமராட்சி கிழக்கிலே, வலிகாமப் பக்கம், கிழக்கு மாகாணத்திலே கூட என்ன மாதிரி சனங்கள் அலவலாதிப் பட்டுக்கொண்டு திரிகிறார்கள். போர் அழிவு போதாதென்று சுனாமியும் தாக்கி எங்கள் சகோதரர்கள் ஆற அமர இருக்க இடமில்லாமல் உடுக்க உடையில்லாமல், ஒரு நேரம் கூட உண்ண உணவில்லாமல் சொந்த மண்ணிலேயும் அகதிகளாக.. உங்களின்ர சொந்த சகோதரம் அல்லது ஒரு பிள்ளை இப்படி அவலப்படப் பார்த்துக்கொண்டு இருப்பியளே?"

"ஏன் செய்தி செய்தி என்று விழுந்தடிச்சு செய்தி கேட்கிறீர்கள் தானே. நம் இனம் எத்தனை இன்னல்படுகிறார்கள்.... இந்த நேரத்திலை நாங்கள் இங்கே மணப்பந்தலும் சப்பரமும் சோடனையும் - எனக்கு ஒன்றும் வேண்டாம் அம்மா எனக்கு இதெல்லாம் பிடிக்கவில்லை."

"இவ என்ன விண்ணாணக் கதை படிக்கிறா முளைச்சு மூண்டு இலை விடலை. அவவின்ர கதை கதையாம் காரணமாம்...."

பெற்ற மகள் அதுவும் பருவ மங்கை என்றும் பாராது இளக்காரமாகப் பழித்துக் கொட்டினாள். கரித்துக் கொட்டினாள் சாரதா.

"இப்போ கொஞ்சம் முன்னம் தானே அம்மா நான் பெரிய மனுக்ஷியாகிவிட்டதாகச் சொன்னீங்கள். இப்ப முளைச்சு மூண்டு இலையும் விடாத சின்னப்பாப்பா என்கிறீர்கள் எனக்கு ஒரே குழப்பமாயிருக்கு."

"ஓமடி! எனக்கும் ஒரே குழப்பமாயிருக்கு இந்த அடுக்குகள் எல்லாம் எடுத்து ஆயத்தம் செய்ய இவளின்ர கதையைக் கேளுங்கோவன்"

"அம்மா! அண்ணா அனுப்புகின்ற காசு இருக்கு என்றுதானே இந்தக் கூத்தெல்லாம் ஆடுறியள். காசு மிஞ்சினால் எனக்காக இந்த நிகழ்ச்சிக்குச் செலவு செய்ய வைத்திருக்கிற காசு இரண்டு இலட்சத்தையும் ஏதோ ஒரு நலன்புரிச் சங்கம் மூலமாக இந்த அகதிகளுக்கு நன்கொடையாக காசோடு காசாக அனுப்பி வையுங்கோ புண்ணியமாகப் போகும். அண்ணா அந்தக் கண்காணாத தேசத்திலை சூட்டில் காய்ந்து குளிரில் நனைந்து நித்திரை விழித்துக் கக்ஷ்டப்பட்டு உழைத்து அனுப்புகிற காசு ஒரு நல்ல காரியத்துக்கு உபயோகப்படுதே என்ற திருப்தியாவது இருக்கும்"

ஒரு குட்டிப் பிரசங்கமே நிகழத்திவிட்டு "எனக்குச் சோதனை நெருங்குது. படிக்க ஒரு பாடு இருக்கு" என்று சூள் கொட்டியபடி அவ்விடம் விட்டகன்றாள் பூங்கோதை.

"என்ன நீங்கள் கேட்டுக்கொண்டு இருக்கிறியள், ஊமையோ" என்றபடி கணவனை வெறித்து நோக்கினாள் சாரதா் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

சும்மா பேச்சுக்கு மட்டுமல்ல – உடல் ரீதியாக மட்டும் அல்ல உள ரீதியாகவும் மகள் பூங்கோதை பக்குவப் பட்டு விட்டாள் என்ற மனநிறைவோடு ஒரு நிம்மதிப் பெருமூச்சை உதிர்த்தார் அப்பா நாகலிங்கம்.

யாழ் மாவட்ட கலாசாரப் பேரவை நடாத்திய சிறுகதைப் பேடட்டியில் மூன்றாம் பரிசு பெற்ற சீறுகதை.

தினக்குரல் 10 ஆனி 2007

# இருப்பும் செப்பும்

**வ**டபுலத்தின் வடமராட்சி மண்ணின் வடக்கு மூலையில் ஒரு நடுத்தரக் குடும்பம். அந்நாளில் அறுகுபோல் வேரூன்றி ஆல்போல் செழித்து அரசோச்சிய குடும்பம். இன்று உருக்குலைந்த கூடாய் சிதறிச் சின்னாபின்னமாகி...

வம்ச விருத்திக்கு மூன்று புதல்வரையும் மூன்று புதல்விகளையும் பெற்றுச் செல்வாக்காகச் செருக்கோடு வாழ்ந்த பார்வதி இன்று பாயோடு பாயாய்...

மகள்மார் மூவரும் அவளுடன் கூட வாழ்ந்து குதூகலித்திருக்கக் கொடுத்து வைக்கவில்லை. மூத்தவள் கமலா குடும்பத்துடன் கனடாவிலும் இளையவள் சுந்தரி கொழும்பிலும் கடைக்குட்டி சந்திரா வன்னியிலுமாய் இடம்பெயர்ந்துவிட மூத்தமகன் முத்துக்குமரனின் அரவணைப்பில் பார்வதிப் பாட்டி... இளையமகன் இந்திரனும் மூன்றாமவன் முருகவேலும் அண்ணன் முத்துக்குமரனுக்கு உறுதுணையாக....

இத்தனைக்கும் பார்வதிப்பாட்டிக்கு அகவை "எப்பன் சிப்பன்" அல்ல. தொண்ணூற்றி ஒன்பது தானாக்கும்.

அதனாலென்ன இந்த வயதிலும் அவளுடைய உள உறுதியென்ன உடல் வாகென்ன வேறு யாருக்கு வரும். அன்றைய நாட்களில் ஒடியல்பிட்டும் ஊர் அரசிச்சோறும், உடன் மீனும், தினைமாவின் புட்டும், வரகரிசிக் கஞ்சியும் உண்டு. கட்டிக்காத்த உடம்பாக்கும். இந்த நாட்களைப்போல் கண்டகண்ட மாத்திரையும் விழுங்கி எடுத்ததெற்கெல்லாம் ஊசியும்போடும் பூசி மெழுகிய

உடம்பா என்ன. தலையிடி என்றால் கொத்தமல்லிக் கசாயம், ஊறவைத்த வெந்தயம் அவித்த நீர்- தேனீருக்குப் பதில் நீர் மோர். மாதவிடாய்க் கோளாறெனில் விடத்தல் இலையும் பச்சைஅ ரிசியும் சேர்த்து இடித்தமாவின் களி. குறிஞ்சா இலைச்சாற்றில் உழுத்தம்மாவும் நல்லெண்ணையும் முட்டையும் சேர்த்துக் கிண்டிய களிதான் தீன். இப்படி எத்தனையோ கைவைத்தியமும் இயற்கை வைத்தியமும் செய்து பேணிவளர்த்த தேகம். பனாட்டுப் பாணியும் உண்டு. இறுகிய சரீரம். அத்தனை உறுதி, அத்தனை ஆரோக்கியம். அதுதானே பாட்டியை இதோ தொண்ணூற்றி ஒன்பது வரை உறுதியாக வைத்துக் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது.

ஒரு நோய் நொடி என்று பாயில் படுத்தறியாள். எங்கேயும் ஒரு அலுவலாகட்டும் வலியப்போய் இழுத்துப்போட்டுச் செய்து முடித்து "காரியக்காரி" என்று அறிந்தவர் அயலவர் எல்லாரிடமும் பெயர் பெற்ற கைகாரி அவள்.

சும்மா சொல்லக்கூடாது. வெளிநாட்டில் மூத்த மகளின் செல்வாக்கைக் காண கனடாட்விலும் சில நாட்கள் இருந்தவள்தான். அங்குபோய் ஒரு வாரம் கூட ஆகவில்லை. "என்ன சொன்னாலும் ஊரைப்போல் வருமே? இது என்ன வீடோ? மாட்டுத்தொழுவம் போல ஒரு அறைக்குள்ளே கண்டறியாத ஒரு ரீ.வி.பின்னே ஒரு றேடியோ அதுக்கிடையிலெ ஒரு கொம்பியூற்றர் அது இது எண்டு ஒரு ஓடைபோலெ ஒரு கூடத்திலே என்னை முடங்கிக் கிடக்கவிட்டிட்டு அவையின்ர ஆட்டமும் பாட்டமும் கூத்தும் கும்மாளமும். எனக்கு வெப்பியாரமாகக் கிடக்கு. மூச்சுமுட்டுது. இனி இஞ்ச ஒரு கணம் தரிக்கமாட்டன்" எனப் பிலாக்கணம் பாடி ஒற்றைக்காலில் ஒரேபிடியாக நின்று ஊர் திரும்பி வீட்டிற்கு வந்து சேர்ந்து விட்டாள்.

வரும் வழியில் கொழும்பில் சுந்தரியுடன் தங்கியிருந்த பொழுது அவளுக்குத் தீர்மானமாகச் சொல்லி விட்டாள். "இனிமட்டும் நான் பிறதேசம் வெளிக்கிட மாட்டன். கனடாவாம் கனடா. அங்கே காலையிலே ஒரு கோழி கூறுற சத்தம் ஒரு திருவந்தாதி மணியொலி ஒரு அறுப்பும் கிடையாது. சீ அதுவும் ஒரு ஊரே. தின்னத் தந்த பச்சைத் தண்ணி மாம்பழத்தையும் கொக்காவின்ர மூஞ்சியில விட்டெறிஞ்சிட்டு வந்துவிட்டன் கண்டியோ! இனி நான் பிறந்த மண்ணிலை பிறந்த வீட்டிலை தான் என்ரை சீவன் போகும். ஆர் எண்டாலும் என்னைக் கண்ணிலை வைக்க விருப்பமெண்டால் ஊருக்கு வாருங்கோ-

உன்ர உடன் பிறப்புக்களுக்கும் இதைச் சொல்லிவிடு" எனச் சொல்லிவிட்டு ஊர்போய்ச் சேரந்தவள்தான்.

ஆனால் கடைக்குட்டி சந்திராவைக் காண அவளால் வன்னிக்குப் போக முடியலை. அந்த இடங்களுக்குப் போய் நின்று பிடிக்கமாட்டாயம்மா" எனச் சொல்லி எல்லோரும் அவளைத் தடுத்துவிட்டார்கள். கடைக்குட்டி சந்திராவை நீண்டகாலமாய் காணவிலலைையே என்று தாபம் அவள் மனதில் பெரும் ஏக்கமாய்க் குடிகொண்டு விட்டது.

இப்பொழுது ஆறுமாதங்களாக அவள் படுத்த படுக்கையில் பெற்ற பெண்மக்கள் அருகில் இருந்து பணிவிடை செய்யவில்லையே என்ற கவலையே தவிர சும்மா சொல்லிவிடக்கூடாது. மகன்மார் மூவரும் எள் என முன்பு எண்ணெய்யாக நின்றனர்.

பாட்டிக்குப் பொறி தட்டிவிட்டது போலும். தனது அந்திமகாலம் நெருங்கி விட்டதென்று. "இனி நான் நீண்டகாலம் இரக்கமாட்டன். கொக்கா கமலா இளையவள் சுந்தரி சந்திரா எல்லாருக்கும் வியளம் அனுப்புங்கோ. இந்தக்கட்டை இனி அதிக நாள் தங்காதெண்டு" என அனுங்கியதில் மகன்மார் மூவரையும் பதற்றம் பற்றிக்கொண்டது.

"ஏன்னெணை அம்மா விசர்கதை பேசுகிறாய் நீ இப்ப சாகமாட்டாய் நீ இன்னும் ஒருவருஷமெண்டாலும் எங்களோட இரக்கோணும்" இது மூத்தவன் விம்மி விம்மி சொன்னது.

"ஏனம்மா உங்களுக்கு என்னம்மா குறை வச்சனாங்கள் இப்படியெல்லாம் பிதற்றுகிறாய்" இது இளயவன் இயம்பியது.

"எப்படியம்மா எங்களை விட்டிட்டு போக மனம் வந்தது. மக்கள் மருமக்கள் பேரன் பேத்தி பூட்டன் பூட்டி கொள்ளுப்பேரன் கொள்ளுப்பூட்டி எல்லாருடைய சீரும் சிறப்பும் பார்த்து....." இது மூன்றாமவன்.

"எடெ எடெ மக்களே" இன்னும் அம்மா உங்க்ளோட இருக்கோணும் எண்டொரு ஆசையோ? எல்லாம் போதுமெடா. ஆனால் கண்மூடுமுன்னே அவள் சந்திராவை ஒரு முறை கண்டனெண்டால்....." கிழவிக்கு நாக்குளறிற்று. கோடியில் வேப்ப மரத்திலே ஒரு காகம் அசூரியமாய்க் கத்துது. அதுவுமில்லாமெ

கொப்பர் இராத்திரி கனவிலெ வந்து என்னோட வா போவம் எண்டு கையைப்பிடிச்சு இழுக்கிறார். நான் போகப்போறன். என்னை விடுங்கோ" பாட்டி கட்டிலிலிருந்து எழ எத்தனிக்கிறாள். எழ முயற்சித்தவள் கண்மூடித் திறப்பதற்குள் மூர்ச்சையாகி கட்டிலில் சாய்கிறாள்.

மறுகணம் செய்தி கனடா கொழும்பு என்று பறந்தது. வன்னிக்கு செல்வதில் சிறிது தாமதமாயிற்று. எனினும் அறிவித்துவிட்டுத்தான் ஓய்ந்தார்கள்.

மூன்று தினங்களுக்குள் மூத்தவள் கமலா பிள்ளைகளுடன் கனடாவிலிருந்து வந்து இறங்கி விட்டாள். கொழும்பிலிருந்து சுந்தரியும் உடனே புறப்பட்டு காலையில் வந்து சேர்ந்துவிடுகின்றாள். மகள்மாரைக் கண்டதும் பாட்டியின் நோய் சிறிது சிறிதாகக் குறைந்து தெம்புண்டாயிற்று. பேரப்பிள்ளைகளுடனும் பூட்டப்பிள்ளைகளுடனும் சிரித்துப் பேசிக் கலகலப்பாக இருந்தது அரிய காட்சியாக இருந்தது.

எங்கே பாட்டியின் காரியம் முடிந்துவிட்டால் தேடிய தேட்டத்தைப் பூட்டி வைத்திருக்கும் பெட்டகத்தைத் திறந்து எடுத்து விடுவதை விட்டு பாகப்பிரிவினை செய்து கணக்கு முடித்து வண்டியேறிவிடலாம் எனக் கருதிய மகள்மாரின் வாயில் மண்.

பாட்டி மயக்கம் தெளிந்ததும் முதல் செய்த காரியம் என்ன, தட்டுத்தடுமாறி கையினால் தடவி தனது தலையணையின் கீழ்வைத்த பெட்டகத்தின் திறப்பைத்தான். ம்...பத்திரமாய் இருந்தது அது. அந்தளவில் பாட்டிக்குப் பரமதிருப்தி.

இதெல்லாம் ஒரு நாட்பொழுதுதான். மீண்டும் பாட்டிக்கு மயக்கம் கண்டது. அம்மா என்ற விளிப்புக்கு விழியை மலர்த்துவதும் அனுங்குவதும் மீண்டும் மயக்கத்தில் ஆழ்ந்து போவதுமாய் கண்ணாமூச்சி காட்டிக்கொண்டிருந்தாள்.

இது வல்ல சீவன். இது சீவன் இப்போதைக்குப் போகாது போலை. என எண்ணிய மகள்மார் "எட தம்பி இவர் மயில்வாகனப் பரியாரியாரைக் கூப்பிட்டுப் காட்டிப் பார்ப்பம். எந்தளவில் இழுக்கும் எண்டு" எனச் சொன்ன ஆலோசனை எல்லாருக்கும் சரியாகப்பட்டது.

"இது இத்தோட போறதுதான். ஆனால் இனி அட்டமியோட தான். ஒரு கிழமையெண்டாலும் இழுக்கும்" என்ற பரியாரியாரின் வார்த்தை எல்லாருக்கும் கசப்பு மாத்திரை விழுங்கியது போல ஆயிற்று.

"நானும் பிள்ளைகளும் இஞ்ச இருக்க அவர் கொழும்பிலை கடைச்சாப்பாடு ஒத்துவராது. அவரும் சலரோக வியாதிக்காரன். கண்டதையும் சாப்பிட்டு பத்தியத்தையும் முறிச்சுப் போடுவார். பின்னே மூத்தவள் வித்தியாவுக்கும் "ஏ.எல்" சோதனை கிட்டுது. "ரியூசன் எல்லாம் தப்புது" சுந்தரி வெகுவாக அலுத்துக்கொண்டாள்.

"என்ர பாடென்ன அங்கை வெளி நாடெண்ட பேர்தான் சிறைச்சாலைச் சீவியம். நாங்கள் இல்லாமல் ஒரு கணம் அண்டலிக்கமாட்டார். என்ன சறவைப்படுறாரோ தெரியாது. பொடியன்ர லீவும் முடிஞ்சிது. விசா நீடிக்க முடியாது. எனக்கு இதுகளை நினைக்க நித்திரையும் வருகுதில்லை. "கமலா அலவலாதிப்பட்டாள்.

"அக்காமாரே அம்மாவை நீங்கள் எல்லாரும் கடைசி நேரத்திலை கண்ணிலை வைச்சிட்டியள் தானே. இனி நீங்கள்ள புறப்படுங்கோ. நாங்கள் அம்மாவின்ர கடமைகளைச் செய்து சங்கையோட ஆளை அனுப்பி வைக்கிறம்" என்று தம்பிமார் மூவரும் அக்காக்காரிகள் இருவருக்கும் ஆறுதல் கூறினர்.

பின்னே வன்னியில் இருந்து சந்திரா வரவில்லையே என்ற கவலையும் தீர்ந்தது. அன்று காலை சந்திராவும் வந்து இறங்கி விட்டாள்.

எப்பொழுதோ வன்னிக்குப் போன பயணம். சந்திரா அம்மாவைக் காணாது பத்து வருடங்கள் உருண்டோடிவிட்டன.

கொழும்பில் இருந்தும் கனடாவிலிருந்தும் சகோதரிகள் வந்தும் கூட உந்தா உதிலை இருக்கிற வன்னியில் இருந்து இத்தனை காலம் அவளால் வரமுடியாமல் போனதுதான் சோகம்.

அம்மாவைக் கண்டது - அதுவும் இந்த நிலையில் கண்டது சந்திராவுக்கு விம்மல் பொருமலாய் வெடித்தது. இத்தனை காலம் பொத்தி வைத்த சோகம் பொட்டென்று மடைதிறந்து.... வாய் குளறிற்று.

"அம்மா"

அம்மாவிடமிருந்து ஒரு அசுமாத்தமும் இல்லை.

"அ...ம்...மா...

பாட்டி மெல்ல விழி மடலை மலர்த்தி "ஆர் சந்திராவே....

சந்திரா வால் சோகத்தை அடக்க முடியவில்லை. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு "ஓம் அம்மா சந்திரா நான்தான் உன்ர சந்....." வார்த்தையை முடிக்க அவளால் முடியவில்லை.

பாட்டியின் முகம் கருங்கியது. "எடி சந்திரா" இது உன்ர குரலில்லையடி. இது சந்திராவின் குரல்தானோ... இவளுக்கு என்னவோ நடந்திட்டுது. இவளின்ர குரல் ஏன் இந்த மாதிரி பிசுறு தட்டுது. உன்ர துடிப்பும் எடுப்பும் துடுக்கும் பேச்சும் எங்கேயடி? உனக்கு என்னடி நடந்தது சொல்லு ராசாத்தி."

பிள்ளையின் சுபாவம் பெற்றவர்களுக்குத் தெரியாதா. சந்திராவின் குரலும் பேசும் தொனியும் அவளின் உள்ளக்குமுறலை "பளிச்" சென்று காட்டிக் கொடுத்துவிட்டது. அவளுக்கு இந்தப் பத்து வருடகால எல்லைக்குள் நடந்துவிட்ட சோகம். தமிழ் ஈழமே யுத்தத்தின் கோரப்பிடியில் சிக்கிச் சீரழிந்து கிடக்கும் போது அவள் கணவன் மாரடைப்பால் மரணமடைந்ததும் அவரின் அந்திமக் கிரிகைகளைக் கூட சரிவர நிறைவேற்ற முடியாமல் தத்தளித்ததும், அவளின் மூத்த மகனும் மருமகளும் மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்குண்டு தீப்பற்றி எரிவதைக் கண்முன்னே பார்த்திருந்ததும், அவர்கள் விட்டுச்சென்ற மழலை கேட்கும் கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாமல் பரிதவித்த சோகம்... இளையவன் தமிழ் மண்ணுக்காகப் போராடி மாவீரரான காவியம் இத்தனை நடந்தும் கூட மீந்திருக்கும் கடைக்குட்டி கண்ணனுக்காக ஊசலாடும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருக்கும் சோகம். எல்லாம் இழந்தும் இழப்பதற்கு ஒன்றும் இல்லை என்ற ஏதிலியாய்....

இதை எல்லாம் இன்றோ நாளையோ மறையப்போகும் அன்னைக்குக் கூறி அவளையும் கவலையில் ஆழ்த்தி அவலமாகச் சாகவிடவேண்டாமே....

"ஒன்றுமில்லையம்மா, பயணம் செய்த அலுப்பு வேறொன்றுமில்லை"

"இல்லையடி சந்திரா உனக்கென்ன நடந்தது. சொல்லடி என்ற செல்லம்" பாட்டியின்கை சந்திராவின் கன்னத்தை ஆதுரமாகத் தடவுகிறது. மறுகணம்.. கை சோர்ந்து வீழ்கிறது.

"அம்மா" என்ற ஓலம் பேரிரச்சலாய் அறையை நிரப்புகிறது.

என்னவோ எல்லோரும் பிரசன்னமாய் இருக்கையில் பாட்டியின் ஆவி பிரிந்தது. அன்று வெள்ளிக்கிழமை.

"ஆ" இண்டைக்கும் சவம் எடுக்கோணும். சட்டுப்புட்டென்று காரியத்தைப் பாருங்கோ" இது அங்கிருந்த ஒரு முதியவர்.

"இது நல்ல கதை. கொழும்பிலையிலிருந்து அவர் விடிய வந்திடுவார். நாளைக்கு எடுக்கலாம்" இது இளையவள் சுந்தரி.

"அதெப்படி நாளைக்கெடுக்கிறது? நாளைக்குச் சனிக்கிழமை. சனிப்பிணம் தனிப்போகாது பிறகு வில்லங்கம்."

"இனி என்ன ஞாயிறுதான். ஒரு விதத்திலை நல்லதாய்ப் போயிட்டுது. காடாத்து எட்டு எல்லாம் அன்றைக்கே முடிச்சிடலாம். எல்லாருக்கும் வசதியாக."

ஞாயிறும் விடிந்தது. ஈமக்கடன் காடாத்து முடிந்து இரவு எட்டு மணிக்குத்தான் எட்டு முடிந்தது. எட்டுப் படையலில் 'அம்மாவுக்கு இது பிடிக்கும் அது பிடிக்கும்' என்று சொல்லிச் சொல்லி பாட்டிக்குப் பிரியமான நெத்தலி மீன் போட்ட ஒடியல் பிட்டு மரவள்ளிக்கிழங்குத் துவையல் இப்படி எத்தனையோ பண்டங்கள் ஒவ்வொன்றாகப் பார்த்துப் பார்த்து வைத்துப்படைத்தனர். எல்லாம் நிறைவேற இரவு எட்டு மணிக்கு மேலாயிற்று. சாப்பாடு முடிந்து வந்தவர் எல்லாம் கலைந்த பின் எல்லோரும் திண்ணையில் இளைப்பாறியபடி.

மூத்தவள் சொன்னாள் "தம்பி அம்மா இத்தனை காலம் பொத்தி வைச்ச இந்தப் பெட்டகத்தைத் திறந்து பார்"

எல்லா மக்களின் விழிகளிலும் ஆவல் பொங்கி ததும்பிற்று. "பெட்டகத்துக்குள் என்ன இருக்கும்?" எல்லோர் மூளையிலும் வினாக்கொக்கி.

"அம்மாவை மூத்த அண்ணன் தானே பராமரிச்சவர். மூத்தண்ணனுக் குத்தான் அந்தச் சொத்து சேரோணும்" இது சந்திரா.

"ஏன்? அம்மாவின்ர சொத்து எல்லாருக்கும் பங்குதானே" இது இளையவள். இளையவன் இந்திரனுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

"எடி பெண்பிள்ளைகளுக்கு ஒரு சொத்தும் இல்லை. எல்லாருக்கும் சீதனம் தந்து கை கழுவி விட்டாச்சு. பிறகென்ன?"

"இது நல்ல விண்ணாணக்கதை. நாங்கள் என்ன புறத்தியே? நாங்களும் பிள்ளையள் தானே. சொத்து எல்லாருக்கும்தான். அதையும் பார்ப்பம்."

சின்னவன் முருகவேல் இடைமறித்தான். "அப்பு செத்துப் போக அம்மா என்னவெல்லாம் பாடுபட்டு எங்களை ஆளாக்கிக் கரை சேர்த்தவ மூத்தக்கா, இளையக்கா, இளையண்ணா, நான் எல்லாரும் ஆண்டவன் புண்ணியத்தில் நல்லாக இருக்கிறம் தானே. மூத்த அண்ணாதான் வேலைவெட்டி எல்லாம் விட்டு அல்லும் பகலும் அடுகிடை கிடந்து அம்மாவை பார்த்தவர். பின்னே சின்னக்காவும் நொடிச்சு நொந்திருக்கிறா. பெட்டியைத் திறவுங்கோ. உள்ளதைப் பிரித்து இரண்டு பேரும் எடுக்கட்டும்"

"அதெப்படி? அம்மாவின்ர தோட்டம் ஆறுபேருக்கும் தான்"

அறுவரும் நீயோ நானோ என்று குடுமி பிடிக்காத குறையாக பிய்த்துப்பிடுங்கத் தொடங்கி விட்டனர்.

நாய் கடி பூனை கடி!

"சரி சரி கொஞ்சம் பொறுங்கோ, பெட்டியைத் திறந்து பார்ப்பம்" இளையவன் டெப்டியைத் திறந்தான். அப்பு செத்துப்போக பிழைப்பிற்காக அப்பம் சுட்டு விற்ற நினைவாக பழைய அப்பச்சட்டி , தட்டகப்பை, வெற்றிலை, பாக்கு வைத்திருந்த வண்ண ஓலைக்கீற்றால் இழைத்த கொட்டைப்பெட்டி, கிளித்தலையுடன் ஒருபாக்குவெட்டி, சித்திர வேலைப்பாடமைந்த சுண்ணாம்பு கறண்டகம், பின்னே வெற்றிலை பாக்கு இடிக்கிற சின்ன உரல் உலக்கை, தைலாப்பெட்டி, பித்தளையில் செய்த் ஐந்து அலகுச் சித்திரக்குத்துவிளக்கு, தூண்டாமணிவிளக்கு.

"இதுதான் அம்மாவின் தேட்டம்"

"இந்த பொக்கிசத்தைதத்தான் அம்மா பொத்திவைச்சு அடை காத்தவளோ?"

"அம்மாவின்ர் இருப்பும் செருப்பும் இந்த செம்பாலும் செப்பாலும் செய்த பண்டங்களே".

"எல்லாம் மூத்தண்ணர் எடுக்கட்டும். அவருக்கும் வேண்டாம் எண்டால் நூதனசாலைக்கு அனுப்பி விடுங்கோ"

அடுத்த இருநாட்களுக்குள் எல்லோரும் தங்கள் வழிச்செல்ல வீடு "ஓ" வென்று வெறிச்சோடிக்கிடந்தது. பெட்டகத்தில் கிடந்த பண்டம் யாரும் சீண்டுவாரற்றுக் கிடந்தது.

ஞானம் 2006
புலோலியூர் க.சதாசிவம் நினைவுச்
சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசு பெற்றது.

# மொட்டு

"நித்தியா, எடி நித்தியா! எங்கேயடி போய்விடாய்?" என அழைத்த படியே வாசல் பக்கம் வந்த கமலா கிழக்குப்புற வேலியருகில் மல்லிகைப்பந்தலின் கீழ் நித்தியாவைக் கண்ணுற்றாள். இரட்டைப் பின்னல், கழுத்து வழியாக மாலையாக முன் தொங்க நித்தியா குனிந்த நிலையில் மல்லிகை மலர்களைப் பொறுக்கிக் கொண்டிருந்தாள். அவள் குனியும் வேகத்தில் அவள் கட்டியிருந்த அரைப்பாவாடை குடைபரப்பி மேலெழ, உள்ளாடை எட்டிப்பார்க்கிறது. பெருந்தொடைகள் இரண்டும் வாழைத்தண்டாய் மின்னுகின்றன. அவள் இன்னும் மலர்களைப் பொறுக்கிக் கொண்டிருந்தாள்.

"இஞ்சை வாடி!" ஆத்திரத்துடன் கூச்சலிட்டாள் கமலா. "உதென்ன கோலம்- உதென்ன உடுப்பு, நீ இன்னும் சின்னப் பிள்ளையோ? உனக்கு இன்னும் தான் புத்தியில்லையோ?" என்று கடிந்து கொண்டாள்.

நித்தியாவுக்கு ஆச்சரியாமாக இருந்தது. அம்மா என்ன சொல்லுகிறாள்!

இப்பொழுதெல்லாம் நித்தியாவைக் கண்காணிப்பதிலும், கட்டிக் காப்பதிலும் மிகவும் கண்டிப்பாக இருந்தாள் கமலா. கல்லூரிக்குப் போவது போகட்டும். மற்றப்படி நித்தியாவைக் கண்டபடி வெளியில் அனுப்புவதைக் குறைத்துக் கொண்டாள்.

ரியூஷன் என்று சொல்லிக் கொண்டு அதிகாலை வேளைகளிலும், மாலை வேளைகளிலும் பாதையின் குறுக்கே பயங்காட்டி நிற்கும் இராணுவ

சென்றிகளினூடே வளர்ந்த பெண்களை அனுப்புவதில் ஏற்படக் கூடிய விபரீத விளைவுகளைக் கண்டும், கேட்டும் அனுபவித்தவள் தானே.

இதன் பிரதி பலிப்பாகவே கணவன் காசிப்பிள்ளையிடம் சொல்லி, வீட்டிலேயே வந்து பாடம் சொல்லிக் கொடுக்கும் பொருட்டு ஒரு 'ரியூஷன் மாஸ்டரையும் அமர்த்தியாகிவிட்டது. தினமும் இரண்டு மணி நேரம் மூன்று பாடங்கள் படிப்பு, மாதம் முன்னூறு ரூபா சம்பளம், பரவாய் இல்லையே!

முதல் நாள், நரைத்த தலையும், கரைந்த உடம்புமாய் ஒரு நடுத்தர வயதுக்காரரை ஆசிரியராய் எதிர்பார்த்தவளுக்கு 'ஹாப்பி தலைமுடியும், கிருதா மீசையும், இறுகப் பற்றிய 'டெனிம்' ஜீன்சுமாய் மோட்டார் சைக்கிளில் வந்து இறங்கிய ஆனந்தனைக் கண்ட கமலாவின் முகம் பேயறைந்தது போலாயிற்று.

"என்ன தோற்றமே சரியில்லையே!" என்று அங்கலாய்த்தாள் கமலா.

"வெளித்தோற்றத்திலே என்னடி இருக்கு? புள்ள குணமானவன். நல்ல கெட்டிக்காரனாம். முப்பது வயதுக்குள்ளேயே இந்த இளமானி, முதுமானி எல்லாம் படித்து முடித்துப் பெயரும் எடுத்திருக்கிறானாம். இவர் தான் நல்ல மாஸ்டராம்" என்று காசிப்பிள்ளை கண்டிப்பாகச் சொன்னதும் மாற்றம் உரைக்கவில்லை அவள்.

ஆனந்தன் பார்வைக்கு அழகாகத் தான் இருந்தான். முக வசீகரமும், விடையாட்டுப் பேச்சுமாய் யாரையும் எளிதில் கவரக்கூடியவன் தான். விரைவிலேயே நல்ல பிள்ளை என்ற பெயரைக் கமலாவிடமிருந்து தட்டடிக் கொண்டான்.

நித்தியா இப்பொழுதெல்லாம் எங்கும் போவதில்லை. கல்லூரி விட்டு வீடு வந்ததும் வீட்டிலேயே தங்கி இருந்தாள். அவளை அறியாமலேயே அவளில் ஒரு குதூகலம். அன்று மாஸ்டருக்கு ஒப்பிக்க வேண்டிய பாடங்களை மனனம் செய்வதும், தனக்கு ஏற்படும் சந்தேகங்களை மாஸ்டரிடம் விளக்கம் கேட்பதற்காக, ஏற்படும் சந்தேகங்களை குறிப்பெடுப்பதுமாய்..... தொலைக்காட்சி பார்ப்பதிலோ, றேடியோ கேட்பதில் கூட அக்கறை காட்டுவதில்லை.

இன்னும் ரியூஷன் மாஸ்டர் வர எவ்வளவோ நேரம் இருக்கிறது. நித்தியா அழகுப் பதுமையாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டுவந்து முற்றத்தில் மல்லிகைப் பந்தலின் கீழ் நிற்கிறாள்.

மாலை நேரத்தில் மந்த மாருதமும், முற்றத்த மல்லிகையின் நறுமணமும் அவளுக்கு ஒரு கிளுகிளுப்பை உண்டாக்குகின்றன. மாமரக்கிளையில் கதை பேசும் ஜோடிப்புறாக்களை பிரமை பிடித்தவள் போலப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். புளிய மரத்தின் கிளை வழியே ஓடி, மாமரத்தில் தாவி ஒன்றை ஒன்று துரத்திக் கொண்டோடிப் பின்னி விழும் அணிற் பிள்ளைகளின் விளையாட்டில் ஏதோ ஒரு அர்த்தம் காணமுயன்றாள் அவள். ஏதோ புரிகின்ற மாதிரியும், அதே வேளையில் ஒன்றுமே புரியாத மாதிரியும் ஒரே மயக்கமாய்........ஒரே தயக்கமாய்........

"நித்தியா"

கம்பீரமான அந்தக் குரல் வந்த திக்கை நோக்கித் திரும்பியவள் திகைப்பூண்டில் மிதந்தவளானாள். அவள் வதனம் அந்தி வானத்தின் செம்மை குழைக்கிறது.

"மாஸ்டர்"

மெல்ல உதட்டோடு முனகியவள் துள்ளி ஓடிப் போய் படிப்பறையின் கதவைத் திறந்து விட்டாள். மின்சார விளக்கின் 'சுவிட்சை' அமுக்கினாள். நான் 'றெடி; என்பது போல் மாஸ்டரை உற்றுப் பார்த்தபடி ஒய்யாரமாய் நின்றாள்.

மாஸ்டர் வைத்த கண் வாங்காது அவளை விழுங்கி விடுகறாற் போல் பார்த்துக் கொண்டிருந்தார். ஜீவகளை ததும்பம் இளம் பருவகால கவிதையைப் போல் அவள் நின்று கொண்டிருந்தாள். ஒளி வீசும் விழிகளின் வசீகரமும் மதர்ந்து நிற்கும் மேனியின் மதமதப்பும் அவனை எங்கெங்கோ கொண்டு சென்றன. அவளின் கூந்தலில் சூடியிருந்த மல்லிகையின் நறுமணமும், முகத்தில் பூசியிருந்த 'வூடோ' பவுடரின் சுகந்தமும் அவனது நாசியைத் துளைத்து கிளுகிளுப்பை உண்டாக்குகிறது.

"நித்தியா! உன்னைப் பார்க்கிற போது முத்தொளாயிரத்தில் ஒரு கவிதை தான் நினைவுக்கு வருகிறது."

"மாஸ்டர்! இதெல்லாம் எங்களின்ர பாடத்திட்டத்திற்குள் வருகுதோ" அப்பாவி போல் வினவினாள் நித்தியா.

மாஸ்டருக்கு 'சப்'பென்றாகியது. அலுத்துக்கொண்டே தோள்களை மெலிதாய்க் குலுக்கியவர், தமிழ் மொழி சட்டதிட்டத்திற்கு அமையாதது, எங்களின்

மொழி நயம் நித்தியா! எங்கும் நிறைந்த இனிய தமிழ் மொழி. தேவன் தந்த தெய்வ மொழி. தேடத் தேடத் தெவிட்டாத தேறல்..;

'போதும். போதும் உங்கள் புகழாராம்'. அது சரி அது என்ன கவிதை?

ஆள்காட்டி விரலை நாடியில் வைத்து தலையைச் சற்றே சரித்த வண்ணம் நிற்கும் பாங்கு!

மாஸ்டர் அடக்கமான இராகத்துடன் பாடத்தொடங்கினார்.

புன்னாகச் சோலை புனற்றெங்கு சூழ் மாந்தை
நன்னாக நின்றவரு நன்னாடன்-என்னாகல்
கங்குலொரு நாட் கனவினுட்டை வந்தான்.
என் கொல் இவரறிந்த வாறு.

"மாஸ்டர் இதை விளங்கப்படுத்துங்கோ! நல்ல பாட்டாக இருக்கு பிளீஸ்.." நித்தியா பரபரத்தாள்.

மாஸ்டருக்கு நல்ல வாய்ப்பாகப் போய் விட்டது. "கங்குலொருநாட் கனவினுட்டை வந்தான், அதாவது ஒரு நாள் இரவில் கனவில் வந்து என்னுடைய உடம்பைக் கையால் தடவினான்...." என்ற தலைவி எண்ணி ஏங்கினாற் போல் நீ நின்றிருந்த காட்சி.
மாஸ்டர் திரும்பவும் விளக்கிக் கொண்டே போகிறார் விளக்கிக் கொண்டே....

விளக்கிக் கொண்டே போகையில் மாஸ்டரின் கை விரல்கள் அவளின் கையை மெதுவாக வருடி....வருடி வெகுலாவகமாக கை வழி சென்று, மெய் வழி முன்னேறிக் கொண்டிருந்தது. அவனுடைய கைவிரல்கள் ஸ்பரிசத்தில் அவள் கிறங்கிப் போனாள். அவனுடைய தழுவலில் அவள். மின்சாரம் பாய்வதைப் போல் ஒரு இனமறியாத புல்லரிப்பு உடலெங்கும் வியாபிக்கிறது.

இப்பொழுது அவள் தன் கைகளை அவனுடைய கழுத்தில் மாலையாக போட்டிருக்கிறாள். அவளின் செங்காந்தள் விரல்கள் அவனுடைய தோலள்பட்டையை நெருடுகின்றன. அந்த இதமான அணைப்பில் ஒரு கோடி தாமரை அவள் இடையை வளைத்துச் சிறைப்படுத்தினாற் போல் ஓர் இன்ப வேதனை. எப்பொழுதும் இப்படியே இருந்தால் எவ்வளவு சுகமாக இருக்கும், மனம் அசை போடுகிறது.

அப்போது!

குசினி அறைப்பக்கம் கதவு திறக்கப்படும் ஓசை. 'அம்மா வருகிறாளா?; 'சடக்'கென இருவரும் விலகிக் கொண்டனர். நித்தியா ஏதோ எழுதுவது போல பாவனை செய்து கொண்டாள். நல்ல வேளை! கமலா அந்தப் பக்கம் வரவேயில்லை. இருவரின் இதயத்திலும் படபடப்பு. ஒருவர் முகத்தை ஒருவர் நோக்க ஒருவருக்கும் திராணியில்லை.

"நித்தியா! இன்றைக்குப் பாடம் போதும். மீண்டும் நாளை பார்க்கலாம்" என்ற மாஸ்டரின் குரலில் ஏன் அந்தக் கரகரப்பு? எங்கோ பார்த்த படி கூறிய மாஸ்டர் அவசர அவசரமாக வெளியேறிவிட்டார்.

அதன் பின் இரு தினங்களாக மாஸ்டர் வருகிறார். ஏனோ தானோவென்று ஏதோ பாடம் நடக்கிறது. போகிறார்.. முன்பிருந்த கலகலப்பு நித்தியாவிடம் இல்லை. அவள் வதனத்தில் ஏதோ ஒரு ஏக்கத்தின் தாக்கம், ஆவலின் தூவல், உணர்ச்சிகளின் கிளர்ச்சி.....

இப்பொழுதெல்லாம் நித்தியா இரவில் திடீரென விழிக்கிறாள். அந்த மாஸ்டருடன் நிகழ்ந்த சம்பவத்தை நெஞ்சம் இரை மீட்ட படி. அன்றும் அப்படித்தான், நித்தியா எவ்வளவு முயற்சித்தும் நித்திரை வர மறுக்கிறது. உடலெங்கும் ஒரு இன்ப லாகிரி ஊடறுத்துப் பிழிகிறது. யாரோ தொட்டது போன்ற பிரமையிற் திரும்பிப் பார்க்கிறாள். யாருமேயில்லை. மாஸ்டரின் அந்தக் குறும்புப் பார்வையுடன் கூடிய முகம் கண்ணுக்குள் நிற்கிறது. கூடவே சேகரின் கவர்ச்சியான அரும்பு மீசையுடன் கூடிய அந்த இனிய முகமும் கண்ணா மூச்சி காட்டுகிறது.

சேகர்! அவனது மாமன் மகன். சிறு வயது முதல் ஒன்றாக விளையாடிக் களித்த பால்ய தோழன். வளர்ந்த பின்னும் விகல்பமில்லாது பழகிக் கொண்டிருந்த நாளில் ஒரு நாள்.

'டேய் சேகர்! அந்த அல்ஜிப்ரா புத்தகத்தை கொண்டு வந்து தாடா; என்று சொல்லி அனுப்பிய போது, 'டீ நித்தியா' அவன் இன்னும் சின்னப் பிள்ளையில்லையடி. அவனை அடா, பிடா, என்று மரியாதையில்லாமல் கூப்பிடாதே. எதற்கெடுத்தாலும் கன்னாபின்னா என்று சிரித்துக் தொலைக்காதே.

பெண் பிள்ளை ஒரு அடக்கம் வேண்டாம். அவனோட கண்டபடி கதைக்கப் போகாதே; என்று தாய் கமலா கண்டித்தது நினைவுக்கு வருகிறது.

சேகர் சின்னப்பிள்ளை இல்லைத்தான். அவன் முன்பிலும் பார்க்க நன்றாக வளர்ந்திருந்தான். முகத்தில் மீசை கூட அரும்பு கட்டியிருக்கிறது. குரலில் கூட ஒரு மாற்றம். பார்வையில் ஒரு விஷமம். ஆமாம் அவன் சின்னப் பிள்ளை இல்லைத்தான். அப்போ நான்....

அவள் கண்ணாடியை எடுத்து தன் உருவத்தை நோட்டம் விட்டாள். ஆ...அவள் கூட....

கண் புருவங்களில் இன்னும் கருமை படர்ந்திருக்கிறது. மார்பிலும் குரும்பைப் பரிமாணத்தில் இரு மிதப்புக்கள். கன்னங்கள் முன்பிலும் பார்க்க சிவப்பேறி இருக்கின்றன. மூக்கின் நுனியில் ஒரு சில பருக்கைகள். உடலும் சற்று ஒரு சுற்று பருத்து விட்டாற் போல. ஒரு மாதத்திற்கு முன்புதான் பார்த்துப் பார்த்து தைத்துப் போட்ட சட்டையையும் பிதுக்கிய படி உடல் மதாளித்து.. தன் தோற்ற வனப்பைப் பார்க்க அவளுக்கு நாணம் குவிகிறாற் போல்....

மேல் சட்டைக்கும் அரைப் பாவாடைக்கும் இடை தெரியும் இடைவெளியை மறைக்கும் பொருட்டு மேல் சட்டையைக் கீழ் இழுத்து விடுகிறாள்.

மன உளைச்சலும், உடல் உளைச்சலும் உலுக்கி எடுக்க கட்டிலில் எத்தனை நேரம் படுத்திருந்தாளோ.. நிமிர்ந்து படுத்திருந்தவள் எப்பொழுது புரண்டாளோ.. அவளுக்கே தெரியாது. இப்பொழுது அவள் குப்புறப் படுத்திருக்கிறாள். அவளின் கைகளுக்கிடையில் தலையணை சிறைப்பட்டுச் சிதைகிறது. முழங்காலுக்குக் கீழே கால்கள் இரண்டும் மேலெழுந்து ஒன்று மாற்றி ஒன்று மெத்தையில் தாளம் போடுகின்றது. இவளுக்கு என்ன தான் வந்து விட்டது?

சுவர் மணிக்கூடு ஒரு தடவை அடித்து ஓய்கிறது. பன்னிரண்டரை மணியோ, ஒரு மணியோ, ஒன்றரையாகக் கூட இருக்கலாம். அவளுக்கு நித்திரை வரவேயில்லை. வயிற்றில் ஏதோ பிடுங்கித் தின்னுகிறாற் போல் குத்து.

இடுப்பிரண்டிலும் ஏதோ கொக்கி போட்டு இழுக்கிறாற் போல் வலியெடுக்கிறது. அடித்துப் போட்டாற் போல் அசதி.

மாஸ்டர்....சேகர்...சேகர்....மாஸ்டர்.... மாறி மாறி இருவரின் முகங்களும் கண்ணமூச்சி காட்டுகின்றன. உடலெங்கும் ஓர் இன்பப் பிரவாகம் எடுத்து ஓடுவதாய் ஒரு உணர்ச்சிக் கொந்தளிப்பு. கூடவே உட்பாவாடை ஈரமாகி ஒரு 'அரியண்ட' உணர்வில் தாயை எழுப்புகிறாள்.

தாயின் முகத்தைக் கூட பார்க்க கூச்சப்பட்டவளாய் முகத்தை மூடியவாறு விம்புகிறாள்.

'எடி இதுக்கேன் அழுகிறாய்? நீ பக்குவப்பட்டு விட்டாய். நீ இனிச் சின்னப்பாப்பா இல்லை. பெரிய பிள்ளை நீ போய் கட்டிலில் இரு வாறன்.; என்ற படி நல்ல காரியத்தைக் கணவனுக்குக் கூற வெளியில் ஓடுகிறாள்.

நித்தியா நாணி தலை கோணியவாறு தலை முழுகி, பட்டுடுத்தி, பூச்சூடி, புது மணப் பெண் போல் சர்வலங்கார பூஜிதையாக கையில் தாம்பூலத்துடன் பெரியோரிடம் ஆசி பெறும் காட்சியை மனதில் நினைத்துப் பார்க்கிறாள்.

முற்றத்து மல்லிகை மொட்டெல்லாம் மலர்ந்து 'கம்' மென்று மூக்கைத் துளைக்கிறது.

ஞானம் – 2007

# ஏக்காயம்

எனக்கு சதுரமெல்லாம் நடுங்குது. ஏதோ வந்து தொண்டைக் குளிக்குள்ள அடைக்குமாய் போல கிடக்குது. போகிற போக்கில் என்ன விபரீதமெல்லாம் நடக்குமெண்டு அனுமானிக்க முடியேல்லை. எதிர்காலம் வெட்ட வெளிச் சூனியமாக என்னைப் பயமுறுத்துது. திடுமென ஏதாவது இடியேறு வந்து என்ர சீவனை முடிக்காதோ எண்டு ஏக்கமாயிருக்கு.

ஆ! நான் பாவி! கொடும்பாவி யாருக்கு என்ன நடந்தாலும் பரவாய் இல்லை. நான் உயிரைக் கொண்டோடித் தப்பிவிட்டால் என்ன எண்ட சுயநலம்தானே இப்பவும் எட்டிப்பார்க்குது.

அங்கே அந்த மனுசன் என்ன பாடு படுகுதோ. நான் இல்லா விட்டால் கையும் ஓடாது! காலும் ஓடாது. எல்லாவற்றிற்கும் நான் வேணும். நான் பக்கத்திலே இல்லாமல் என்ன பதகளிப்படுதோ!

எனக்கு மனம் பதறுது. படுத்தால் நித்திரை அண்ட மறுக்குது. கண்ட கண்ட பயங்கரக் கனவெல்லாம் வந்து மனதை உலைக்குது. சாப்பிட ஏதாவது எடுத்தால் உட்செல்ல மறுக்குது. தண்ணீர் குடித்த பின்னும் விக்கல் எடுக்குது. என்ன விக்கினமெல்லாம் வரப் போகுதோ!

ஆறு மாதத்திற்கு முன்னம் வைத்தியத்திற்கு கொழும்புக்கு வந்து எனக்குத் திரும்பிப் போகக் கிடைக்கவில்லை. நாளுக்கு நாள் சண்டை வலுத்துக்கொண்டு வந்திட்டுது. ஓமந்தை சோதனைச் சாவடியை மூடினாங்கள்.

கொழும்பில் இருந்து ரயில் மதவாச்சி வரையும் எண்டு கதை வந்தது. கடைசியிலை.... நான் கொழும்பிலை ஒரு விடுதியிலே மூலையிலே ஒடுங்கிக்கிடக்கிறன். அங்கே என்ன பிரளயம் நடக்குதோ!

அங்கே வன்னியிலே குண்டு வீச்சாலும் செல்வீச்சாலும் சனங்கள் என்ன அலாவலாதிப் படுகினமோ? பதுங்கு குளிக்குள்ளே பிதுங்கிக் கொண்டு எத்தனை நாளைக்கு எப்படிச் சீவிக்கிறது. ஒளித்தாலும் பதுங்கு குளியையும் பூறிக் கொண்டு நிலத்தைத் துளைக்கிற குண்டெல்லோ விழுகுது. ஓடவும் முடியாமல் ஓடி ஒளியவும் முடியாமல் எத்தனை சீவன்கள் அந்தரிக்குதுகள் அன்று ஆரோ சொல்லிப் போனைவையாம் இனித் தமிழனை ஆண்டவன்தான் காப்பாற்ற வேணும் எண்டு. ஆண்டவன் வந்தால் அவன்ர தலையிலுமெல்லோ குண்டு விழுந்து சிதறிப்போவான் அல்லது ஷெல் விழுந்து செயலிழந்து போவான். அத்தனைக்கு அட்டூழியமெல்லோ நடக்குது. குஞ்சு குருமன் எல்லாம் குண்டடி பட்டு ஷெல்லடி பட்டு சீரழிஞ்சு கிடக்குதுகள். எத்தனை பிணங்கள் அநாதையாகக் கிடக்குதுகள். வைத்தியசாலையிலும் குண்டுவிழுகுது. குடியிருப்புக்களிலும் குண்டு விழுகுது. சனம் எல்லாம் அல்லோல கல்லோலப் படுகினம். சனம் சொந்தங்களைத் தவறவிட்டு தேடமுடியாமல் முழித்துக் கொண்டு..... மனிதாபிமானம் காற்றிலே பறக்குது. தமிழினம் பூண்டோடு அழியுது.

பயங்கரவாதம் எண்டு ஒரு பக்கம் பேச்சு. உரிமைப் போராட்டம் எண்டு மறுபுறம் பேச்சு. இடையிலை நிண்டு இடிபடுகிறதும் வதைபடுகிறதும் சனங்கள் தானே. இது ஆர் கண்ணுக்கும் தெரியேல்ல. தெரியவில்லையோ தெரிஞ்சு கொண்டு பொழிப்புப் பார்க்கினமோ! இப்படிச் சனம் எல்லாம் அழியுமட்டும் பார்த்துக்கொண்டிருக்கினம். எல்லாம் முடிஞ்ச பிறகு புனருத்தாரணம் எண்டும் மனதாபிமான உதவியும் செய்ய வர எல்லாரும் ஆயத்தமாம். நாடெல்லாம் காடான பிறகு ஆரைக்கொண்டு போய் குடியிருத்தப் போகினம்.

எனக்கு காலை வேளையிலை அன்றாடப் பத்திரிகையை விரிச்சுப் பார்க்கிறது தான் வேலை. பரீட்சை தேர்வு முடிவு வந்தால், அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவு வந்தால், பெயர் வந்திருக்குதோ எண்டு பார்க்கிறது தானே வழக்கம். ஆனால் வன்னியிலை இருந்து காயப்பட்ட இறந்த சனங்களின்ர பட்டியல் பத்திரிகையிலை வரும் போதெல்லாம் எங்களின்ர சொந்தக் காரரின்ர பேர் இருக்கக் கூடாது என்று தான் நேர்ந்து கொண்டு பார்ப்பன். பேர் இல்லை

என்றால் ஓர் அற்ப சந்தோஷம். அதே நேரம் அவர்களுக்கு வேறு ஏதாவது நேர்ந்திருக்குமோ அல்லது போர்க்களத்திலை சிக்குப்பட்டு அவதிப்படுகினமோ எண்டு மனம் அந்தரிக்கும். தப்பி வருகிற சனங்களை முகாம் வழிய அடைச்சு வைத்திருக்கிறதாக அறிய கிடக்கு ஐயோ! வெளியில் இருந்து ஆரும் காணவோ கதைக்கவோ முடியாதாம். அந்த இயலாத மனுசனும் சின்னஞ்சிறு பாலகரும் அந்த சிறைக்குள்ளே இருந்து என்ன பாடுபடுகிறதுகளோ!

ஒரு நேரம் பால் புகட்டப் பிந்தினாலும். நித்திரை குழம்பினாலும் 'ஓ' வென்று ஓலம் போடுகிற குழந்தைகளெல்லாம் என்னவெல்லாம் இம்சைப்படுகுதுகளோ ஐயோ! இதுகளை நான் எப்ப காணப்போகிறனோ! அல்ல காணத்தான் வாய்புக் கிட்டுமோ என்று ஏக்கமாக் கிடக்குது!

அவள் நடுவிலாள் சாந்தி என்ன பங்கப்படுகிறாளோ தெரியாது. அப்பிராணி சீவன் என்ன மாதிரி துடுக்கான பிள்ளையாய் இருந்தவள். துடிப்பாகப் பள்ளிக்கூடம் போய்வந்த பாவி. நல்ல கெட்டிக்காரி. ஆறு வருசத்திற்கு முன்னம் பள்ளிக்கூட வளவிற்குள்ள கிபீர் போட்ட குண்டு விழ. அருகில் நின்ற பொடியன் ஒருவன் சிதறி விழுந்து துடிக்கக் துடிக்கச் செத்துப்போனான். இதைக்கண்ட இவள் மூர்ச்சையாகி விழுந்து எழுந்தவள் தான் அதன் பிறகு நடைப்பிணமாக ஆகிப் போனாள். பள்ளிக்கூடம் போக மறுத்தவள் தான். எந்த நேரமும் முழியைப் புரட்டிக்கொண்டு யோசித்தபடி திரிவாள். ஆரோடும் கதைகாரியம் இல்லை. இப்பவும் இரத்தம் கண்டால் மூர்ச்சையாகிவிடுவாள். ஏதும் கொடுத்தால் ஏனோ தானோ எண்டு ஒரு சாப்பாடு. உண்டேன் உறங்கினேன் எண்ட கணக்கிலை திரியும். வானத்திலே ஒரு 'சீ' பிளேன் போனாலும் முழி பிதுங்கும். கிபீர் வரப்போகுது எண்டு கத்திக்கொண்டு முதல் ஆளாக பதுங்கு குழிக்குள்ளே போய் குப்புறப் படுத்திடுவாள். இப்ப இந்தப் போராட்டத்துக்குள்ளே குண்டு வீச்சுக்கும் எறிகணை வீச்சுக்கும் இடையிலை என்ன பதகளிப்படுறாளோ! என்ன கோதாரி நடக்குதோ. இவளைக்கட்டி மேய்க்கவே ஒரு ஆள் வேறாக வேணும். அந்த இயலாத மனுஷன் என்ன பாடு படுகுதோ . நினைக்கவே ஈரல் பற்றி எரியுதே! அம்மா! வயது எண்பதுக்கு மேலாகியும் என்ன திடகாத்திரமாக இருத்தவ. கண் பார்வை தான் குறைவு. கிபிர் வருகிற சத்தங் கேட்டால் போதும் பதுங்கு குழிக்குள்ள ஓடிப்போய் இருந்திடுவா. என்ன அம்மா இன்னும் சாகப் பயமோ? என்டு நாங்கள் சூழ்நிலையையும் மறந்து பைம்பல் அடிப்பம். எடி எடி இவ்வளவு காலம் வாழ்ந்தது இப்படி அவலச்சாவு சாகவோ என்று சொல்லுவா. எத்தனை

உயிர் அவமாய் சாகுது. இப்ப பதுங்கு குழியும் இருக்குமோ! உருத்திரபுரத்தில இருந்து கிளிநொச்சிக்கு மாறி கிளிநொச்சியில் இருந்து தர்மபுரம் ஓடி, தர்மபுரத்தில் இருந்து புதுக்குடியிருப்புக்கும் போய்..... நடக்க முடியாமல் தளம்புறல இந்த எறிகணை வீச்சுக்கும் குண்டு வீச்சுக்கும் எங்கே எப்படி நிண்டு பிடிக்கிறாவோ? இப்ப மூண்டு நாலு மாசமா அங்கே நடக்கிறது ஒண்டும் அறிய முடியேல்ல. ஒரு செய்தியும் வர வழியுமில்லை. கூழ் பானைக்குள்ள விழுந்த பல்லி மாதிரி இங்க நான் தத்தளிச்சு கொண்டு நிற்கிறன்.

முப்பது வருசத்துக்கு மேலாக நாங்கள் உழைப்பை உரமாக்கி கண்ணீர் விட்டு வளர்த்து உண்டாக்கிய தோட்டம் வரவு, காணி வீடு வளவு, மாடு கண்டு எல்லாம் விட்டுட்டு..... தைப்பொங்கல் எண்டு சொல்லி சனங்கள் எல்லாம் ஒரே கூத்தும் கொண்டாட்டமுமாகத் திரியுதுகள். அந்த யுத்த பூமியிலே எங்களின்ர இரத்த உறவுகள் என்ன இம்சைப்படுகுதுகள் எண்ட எண்ணம் கஞ்சித்தும் இருக்கிறதா தெரியலை. அதற்கும் எங்களுக்கும் தொடர்பில்லை எண்ட தோரணையிலே பட்டாசு வெடியும் வேடிக்கையும் கேளிக்கையும் தான். ஏன் கொஞ்சம் அடக்கி வாசித்தால் என்ன! சுதந்திர தினமாம் ஆகாயம் எல்லாம் கிபிரும் ஹெலியுமாய் ஒரே ஆர்ப்பாட்டம். பயிற்சி நடக்குதாம். எனக்கு இந்த சத்தத்தைக் கேட்டாலே குடல் நடுங்குது.

என்னை எல்லோரும் சந்தேகம் கொண்டுதான் பார்க்கினம். எனது அடையாள அட்டையிலே வன்னி என்றிருக்குதாம். வன்னி எண்டா நான் இலங்கை பிரசை தானே! நான் ஆர்? தமிழ்ப் பொம்பிளை அதுவும் வன்னியூர். வயது அறுபத்தாறாய்ப் போச்சு. அப்படியும் எத்தனை கேள்விகள்? நான் பயங்கரவாதியோ இராசத்துரோகியோ புரட்சிக்காரியோ.. ஆருக்கும் எதிரியோ! என்னை ஏன் இப்படி ஒரு மாதிரிப் பார்க்கினம். பயமாகக் கிடக்கு. நான் சாகாமல் சாகிறன். தணலாக வேகிறன். ஏன் கொழும்புக்கு வந்தால் எங்கே தங்கியிருக்கிறாய். ஏன் வந்தாய், எப்போ திரும்பிப் போகிறாய் என்று எத்தனை ஆயிரம் கேள்விகள். நான் எங்கே திரும்பிப் போக, திரும்பிப் போக அங்கே ஊர் எல்லாம் மயானக் காடாய் போச்சு. நான் இந்த விடுதிக்குள்ள ஒரு மூலையிலை முடங்கிக் கிடக்கிறன். வைத்தியத்திற்கு வந்தது எண்ட படியால் விடுதிக்காரர் இடம் தந்தவங்கள். ஏன் கொழும்பிலை சொந்தக்காரர் இல்லையே, இருக்கினம் ஆனால் அண்ட தயங்குகினம் இல்லை மறுக்கினம். கடைசியாக ஒரு மாதிரி இந்த விடுதியிலை இடம் கிடைச்சது

அங்கே மேலே ஆகாய விமானம் போனாலும் எனக்கு வயிற்றைக் கலக்குது. கிபீர் தான் போகுதோ, வன்னிக்குத்தான் போகுதோ, அங்கே என்ன அழிவு நடக்கப் போகுதோ எண்டு மனம் பதறும். அன்றொரு நாள் பேப்பரையும் பார்த்து ஏங்கிப்போனன். வன்னியிலே காயப்பட்டு வைத்திய சாலையில் கிடக்கிற ஆட்களின்ர படம் கையிலை காயப்பட்ட ஒரு இரண்டரரை வயதுக் குழந்தையோட அவன்ர தலையிலும் கட்டு, காலிலும் கட்டு. நான் ஏங்கிப் போனன். அது ரவி தானோ பிள்ளையை காவிக்கொண்டு போறது! முகச் சாயல் அவன் போலவும் கிடக்குது. திரும்பத் திரும்பப் பார்க்கிறன். தலை கிறு கிறு எண்டு சுழலுது. சரியாக ஆராஞ்சு பார்த்தன். படத்தில இருக்கிற பொடியனுக்கு மீசை இருக்கு, பக்க வெட்டும் வித்தியாசமாக இருக்குது. தலை இழுப்பும் வித்தியாசம். நல்லாக ஊன்றி ஆராஞ்ச பிறகுதான் அவனாக இருக்காது என்று முடிவு செய்தன். இப்படி நெஞ்சிலை நெருப்பை வைச்சுக்கொண்டு எத்தனை நாளைக்கு இந்த சீவியம்.

நாங்கள் கும்பிட்ட தெய்வமெல்லாம் குறுக்காலை போயிட்டினமோ மடுமாதாவும் மலையேறிப் போய்விட்டாவோ! முறிகண்டிப் பிள்ளையாருக்கு வந்த மோசமென்ன? வற்றாப்பளை அம்மனும் வழிதவறிப் போய்விட்டாவோ? நாகதம்பிரானும் வேகமாக வெளியேறி விட்டினமோ? தெய்வங்கள் கூட இடம் பெயர்ந்து பரதேசம் போய்விட்டினமோ? எங்கள் தேசத்தை இரட்சிக்க ஆளில்லையோ?

என்ன ஒரு பரபரப்பாகக் கிடக்கு வெளியிலே ஆ! காலை வேளையோட பொலிஸ் திடீர் சோதனைக்கு வந்திட்டாங்கள் போலை. இனி எத்தனை கேள்வி கேட்டு உருட்டிப் புரட்டுவினம். மறுமொழி சொல்லி மாளாது. ஐயோ! ஏன் இந்த சோதனை அடையாள அட்டையையும் மருந்து அட்டையையும் எடுத்து வைப்பம். எங்கே வைச்சனோ தெரியாது. அந்தரத்துக்கு ஒண்டும் கண்ணுக்கு தட்டுப்படாது. ஆத்துக்கை வைச்சிட்டு குளத்துக்குள்ள தேடுறன். ஐயோ! எனக்குத் தலை கிறுகிறுக்குது. ஒண்டும் தெரியேல்லை. மயக்கம் வருமாப் போலகிடக்கு. ஆரும் ஒரு மிடறு தேத்தண்ணி தாருங்கோ! எல்லோருக்கும் அவை அவையின்ர அத்தடி. ஐயோ! நான் விழப்போறன் போல கிடக்கு என்னைக் கொஞ்சம் பிடியுங்கோ.....! ஆ...... ஆ.....!

2009 – பங்குனி

# இப்படியும் சிலபேர்

"தம்பி நான் இனி அதிக காலம் நின்று பிடிப்பன் என்ற நம்பிக்கை துளிகூட இல்லை. எனக்கு அந்திம காலம் நெருங்கிவிட்டது."

"அப்பா ஏன் இப்ப தேவையில்லாம அலட்டிக் கொண்டிருக் கிறிங்கள். பேசாம படுத்துத் தூங்குங்கோ"

"இல்ல மோன! நான் சாவுக்கு அஞ்சயில்ல. ஆனால் நான் உங்களையெல்லாம் அந்தரத்திலே விட்டு விட்டுப் போகிறேனோ என்றுதான் ....."

"நீங்கள் அதிகம் கதைக்க இருமும். இளைக்கும் சும்மா இருங்கோ!"

"இல்லை தம்பி என்னவோ இன்றைக்கு எல்லாவற்றையும் உன்னோடு சொல்லி என்ர மனப் பாரத்தை இறக்க வேணும் போல ஒரு அவா! என்ர மூச்சு அடங்க முன்பு என்ர ஈறல் எல்லாம் கொட்டித் தீர்க்க வேணும் போல துடிப்பாய் இருக்கு!"

"அந்தக் காலத்தில நானும் உன்னைப் போல வாட்ட சாட்டமான ஆண்தான். ஆறடிக்கு ஒரு அங்குலம் குறைவு. ஆளும் சிவலை. நல்ல உத்தியோகம். கை நிறைய சம்பளம். ஒரு பொறுப்பும் இல்லை. பின்னை கேட்க வேணுமே! என்னை மாப்பிளையாக எடுக்க ஊரில கடும் போட்டி. எல்லாரும் தங்கள் தங்கள் மகள்மாருக்கு கல்யாணம் பேசிக்கொண்டு மல்லுக் கட்டிக் கொண்டு நிற்க ஒரு கியாதியும். கெப்பரும் எழும்பியிட்டுது. என்னை அறியாமலேயே அகம்பாவம் கொள்ள வைச்சதை நான் அப்ப

உணர்ந்தேனில்லை. கல்யாணம் பேசி வருகிற பெண்களை எல்லாம் அவள் கறுப்பி, இவள் கட்டை, அவள் நெட்டை, இவள், குட்டை என்று சொட்டை சொல்லிக் கொண்டு திரிந்தேன். ஒரு சுமாரான பெண் அகப்பட்டால் கூட அவர்கள் நினைத்தும் பார்க்க முடியாத வகையில் சீதனமும், சீர்வரிசையும் கேட்டுத் திணறடிப்பேன். இப்படி ஒவ்வொரு காரணம் கற்பித்து ஒவ்வொன்றையும் தட்டிக் கழித்து வந்தேன். இந்த விளையாட்டிலேயே என்னைக் குஷிப்படுத்தி ஊரில் எனக்கொரு 'இமேச்' சை உருவாக்கி உலாவிக் கொண்டிருந்தேன். இதற்கு வேறு காரணமும் இருக்கத்தான் செய்தது. அப்பொழுது எனது அலுவலகத்தில் வேலை செய்து கொண்டிருந்த சாரதாவை நான் விரும்பியிருந்தேன். ஆனால், அதற்குத் தடையாக சில காரணங்களும் முளைத்தன".

"உனது அப்பாச்சி, அதுதான் எனது அம்மா, படு பிடிவாதமாக இருந்தார். நீ ஊரிலை உன்ர ஆசை போல சீதனம் வாங்கி 'ஆமான பொடிச்சியை'ப் பார்த்துக் கட்டு. அதை விட்டுட்டு காதல் கீதல் எண்டு கண்ட ஊதாரியை மருமகளாகக் கூட்டிக்கொண்டு வீட்டுக்கு வந்தீரோ! தெரியும்தானே ஆத்தையின்ர குணம். என்னைப் பேந்து ஊயிரோடு காணமாட்டாய் கேட்டியோ! புற்றளைக் கிணற்றுக்குள்ளை தான் என்ர சவம் கிடக்கும் சொல்லிப் போட்டன்." என்று சந்நதம் ஆடிக்கொண்டு நின்றது மனுசி".

"அப்பர் ஒரு சேமிப்பும் வையாமல் எங்களை அனாதரவா விட்டுட்டு செத்துப் போக உரல் இடித்தும், பனை ஓலைப் பெட்டி பாய் இழைத்துச் சம்பாதித்து எங்களைப் படிப்பித்து ஆளாக்கின வைராக்கியம் கொண்ட பிறவி. சொன்னதைச் செயலிலும் காட்டி விடும். அப்பிடி ஒரு நெஞ்சழுத்தக்காரி. அப்போதைய நிலையிலை அவ கீறின கோட்டைத் தாண்ட முடியல".

"அத்தோடு என்ர காதலைக் கை கழுவி விட்டிட்டன். ஆனால், அவள் சாரதா கட்டினால் என்னைத்தான் கட்டுவேன் என்று சபதம் செய்தவள் இன்றுவரை திருமணம் ஆகாமலேயே இருக்கிறாள் என்று சமீபத்தில்தான் அறிந்து, அதிர்ந்து போனேன். என்னை மனமாரக் காதலித்தவளுக்கு நான் செய்த துரோகத்தை எண்ணி இன்றைக்கும் குமைகிறன். இனி என்ன செய்ய!"

"அப்பொழுதுதான், அத்தான்காரன் ஒழுங்குபண்ணிக்கொண்டு வந்த சம்பந்தத்திற்கு நானும் 'ஓம்' பட்டிட்டன். பொம்பிளை-ஆள் ஒன்றும் சொப்பன

சுந்தரி என்றில்லாவிட்டாலும் அசிங்கம் என்றில்லை. சுமார்தான்! நான் கேட்டபடியே கல்வீடு, காணி, நகை நட்டு என்று அமர்க்களப்படுத்தி விட்டார்கள். பெயர் கூட வள்ளிநாயகி என்றிருந்ததை நாயும் வேண்டாம் கிளியும் வேண்டாம் என்று நக்கல் அடித்துவிட்டு, பெயரை வசந்தி என்று சட்டப்படி மாற்றிய பின் தான் கல்யாணத்திற்கே சம்மதித்தேன்".

"கடமைக்காக நடந்தேறிய கல்யாணத்தில் எனக்குத் துளி கூட விருப்பமில்லை.. என்றாலும் வேண்டா வெறுப்பாகத்தான் காலம் நகர்ந்தது. வேண்டாப் பெண்டாட்டி தானே! கைபட்டாலும் குற்றம்! கால்பட்டாலும் குற்றம்! என்ற போக்கில் வீட்டிலே பெற்றோருக்கு செல்லமகளாக வளர்ந்திருந்தாளே ஒழிய வெளிநடப்பு, விவேகம், இங்கிதம், ஒன்றும் தெரியாது. வெகுளி! நாகரிகம் கொஞ்சமும் அறியாத கர்நாடகம்!"

"திருமணம் முடிந்து, கொழும்புக்குப் போன நான் ஆரம்பத்தில் மூன்று மாதத்திற்கு ஒரு தடவை கொழும்பில் இருந்து லீவில் வந்து அதிக நாட்கள் வீட்டில் தங்காது திரும்பிவிடுவேன். எப்படியோ, தம்பி, தங்கச்சி மூவரும் பிறந்தீர்கள். உங்களைப் பராமரிப்பதிலேயே தன் நேரத்தையும் மனதையும் செலவிட்டாள் உங்கள் அம்மா. போகப் போக எங்கள் இருவருக்கும் இடையில் இடைவெளி மேலும் கூடிக்கொண்டே போயிற்று. அவளை ஒரு கோயில் குளமென்றோ, சினிமா, கூத்தென்றோ எதற்கும் அழைத்துப் போனது கிடையாது. அவளும் என்னைக் கேட்டதும் இல்லை. நான் செய்ததும் இல்லை. நான் அவளுடன் இணையாக எங்கும் செல்வதைத் தவிர்த்தே வந்தேன். அவள் ஒரு கிணற்றுத் தவளையாக வீடே கதியென்று இருந்து காலத்தைக் கடத்திவிட்டாள்".

"கல்யாணப் பேச்சின் போது உங்கள் அம்மம்மா கொடுத்த சீர் வரிசையில் திருப்திப்பட்டிருந்த நான் காலம் செல்லச் செல்ல அவளின் பெயரில் உள்ள காணி, பூமி, காசிலும் கண் வைக்க முற்பட்டேன். வந்ததே வினை!"

"உங்களுக்குத் தரவேண்டிய சீதனமெல்லாம் தந்துதானே விட்டனான். இனிப்பின்னால் இருக்கிற ஆண்பிள்ளைகள் இரண்டையும் நான் என்ன கிணற்றுக்குள் தள்ளி விடவா சொல்லுறியள். அதுகளுக்கு இனி ஒருவழி கோல வேண்டாமே! இருக்கிற மிச்ச மீதியையும் உங்களுக்குத் தந்திட்டு நான் கடலிலப் போய் விழவே! இனி ஒரு வெள்ளைச் சல்லி கூடத் தர முடியாது." என்று கெம்பி எழும்பியிட்டா உங்கள் அம்மம்மா. எனக்கும் இருந்த கொழுப்பினால் "நீ தந்த

வீட்டிலே ஆம்பிளைப் பிள்ளைகளோட அம்பாளிச்சுக் கொண்டிரு" என்று உரப்பிச்சுவிட்டு உங்கள் அம்மாவையும் கூட்டிக்கொண்டு வந்திட்டன்.

"எனக்குச் சொந்தமான காணிதான் இப்போ நாங்கள் இருக்கிற வளவு ஒரு அறையும், நீளவளப் பக்கமாக ஒரு குதிரை மால் ஒன்று போட்டு கிடுகு கொண்டு வேய்ந்தோம். ஒருபக்க வளையில் இருந்து ஒரு ஒத்தாப்பு இறக்கி பக்கமெல்லாம் பனைமட்டை வரிந்து ஒரு அடுப்படி உண்டாக்கினோம். பெரிய அறையை விட மற்றெல்லா நிலத்துக்கும் மண் அடித்து, சாணம் மெழுகினோம். அன்று செய்த அமைப்பு இன்றுவரை அப்படித்தானே இருக்கு".

"சொந்தமான சீதன வீட்டை விட்டு விட்டு வந்து இந்தக் குச்சு வீட்டுக்குள்ளை 'சில்' எடுக்க எனக்குத் தலையெழுத்தோ!" என்று உங்கள் அம்மா தலை தலையாக அடித்தா. இந்தக் குடிசை வீட்டில் அன்று இருண்ட உங்கள் அம்மாவின்ர முகாரவித்தம் இதுவரையில் மலரவில்லை. அத்துடன் அம்மாவுடன் சங்கார்த்தமே இல்லாமல் போச்சு.

"இந்த வீட்டில் அம்மாவுக்கு ஒரு நிம்மதியில்லாமல் போச்சு. உங்கள் மாமியும் அம்மாவும் எப்பொழுதும் நாய்கடி பூனை கடிதான்".

நானும் மாமியின்ர சொல்லைக் கேட்டு அம்மாவை அடக்கி வைச்சேன். "அக்காவின்ர தாளத்திற்குத்தான் இவர் ஆட்டம் போடுகிறார்" என்று மாமி மேல் விரோதம் பாராட்டத் தொடங்கிவிட்டா. மாமியும் இந்த உறவை வேண்டாமென்று வேறு வீட்டுக்குப் போய்விட்டார்.

"அதுவரை தடதடத்துக் கொண்டு போன வாழ்க்கை 'பென்சன்' எடுத்து வந்து வீட்டில் நிலையாக இருக்கத் தொடங்க தடம் புரள ஆரம்பித்தது. வீட்டில் எப்பொழுதும் சண்டை சச்சரவு தான். கோயில், குளம், திருவிழா என்றாலும் உங்களை நான்தான் அழைத்துச் செல்வேன். உங்கள் அம்மா என்னுடன் சேர்ந்தும் இல்ல, நான் நிர்ப்பந்தித்ததும் கிடையாது. ஊருக்குப் பேருக்கு குடும்பம் நடத்தினோமே தவிர இதில் உப்பில்லை, சப்பில்லை".

"அம்மாவின்ர ஆக்கினை தாங்காமல் எனக்கு ஆறுதல் தேடி மாமி வீட்டிற்குப் போய்விட்டேன். அதாவது, இந்த வளவில் அண்டை அயல் குழந்தைகளைக் கூட்டி வைத்து 'ரியூசன்' சொல்லிக் கொடுத்தேன். இதை இங்கேதான் செய்தேன். ஊர் சனசமூக நிலையத்தில் செயலாளராக இருந்தேன். பாடசாலை பழைய மாணவர் சங்கத்தில் நான் தலைவர். இப்படி ஊர் தொளபாரம்

எல்லாம் குத்தகை எடுத்துச் செய்து கொண்டு வந்த நான் கூடிய நேரம் மாமி வீட்டில் கழித்தேன். "நான் அவிச்சு வைக்க விழுங்க மட்டும் வரவேணுமே! அக்கா வீட்டிலேயே அடுகிடையாகக் கிடக்கிறது.தானே!" என்று உன்ர அம்மா எகத்தாளமாகப் பேசிப் போட்டா.

"அதன் பிறகு கொஞ்ச நாள் அக்காவுக்கும் சொல்லாமல் கடைச் சாப்பாட்டோட காலம் போக்கினேன். எத்தினை நாளைக்குத் தாங்கும்? உனக்குத் தெரியாதே! ஏற்கனவே இரண்டு தரம் 'ஹாட் அற்றாக்' வந்திட்டுது. இனியும் தாங்காது என்றெண்ணி இங்கேயே, மாமி வீட்டிலேயே தங்கிவிட்டேன். நீ இடைக்கிடை வந்து என்னைப் பார்க்கிறதுதான் ஒரு மன நிறைவு. ஆனால், அம்மாவும் தம்பி தங்கையும் என்னை எட்டிப் பார்க்கிறதே இல்லை".

"நான் ஓய்வு நேரத்தில் என்றாலும் உங்கள் அம்மாவுக்கு ஆதரவாக இருக்கலாம். என் அகம்பாவம் விடவில்லை. எனக்குச் சுய விளம்பரம் தேடி, ஊர்த் தொளபாரம் எல்லாம் குத்தகைக்கு எடுத்து காலம் போக்கத் தெரிந்த எனக்கு வீட்டு விருத்தியிலோ பிள்ளைகளாகிய உங்கள் படிப்பிலோ முன்னேற்றத்திலோ அக்கறை காட்டத் தெரிந்திருக்கவில்லை".

"அம்மாவை என்ன ஒரு சாதாரண பெண்ணாகக்கூட அக்கறை காண்பிக்கவில்லை. நான், என்ர ஆணவம், மலிவான விளம்பரம் தேடல் என்று என் சீவியத்தையே மண்ணாக்கிப் போட்டேன். கடைசியிலேயே பிள்ளைகளாகிய உங்களை நட்டாற்றிலே தத்தளிக்க விட்டுவிட்டுப் போகிறேன். நான் சாரதாவுக்கு ஒரு நல்ல காதலனாகவோ உனது அம்மாவுக்கு ஒரு நல்ல கணவனாகவோ இருக்க இல்லை. உங்கள் மூவருக்கும் ஒரு பொறுப்புள்ள அப்பாவாகவோ நடக்கவில்லை".

தொண்டை கரகரக்க ஹீனமாக அனுங்குகிறார் இரு கண்ணோரம் நீர் அரும்பு கட்டுகிறது. நீண்ட நெட்டுயிர்ப்பு!

"அப்பா அதிகம் மனதை அலட்டாமல் இருங்கோ!" என்று இரண்டு கரண்டி நீர் பருக்குகிறான். மீண்டும் அவர் பேசுகிறார்.

"தம்பி மனோகரன்! இனி நான் அதிக நாள் இருப்பேன் என்று நம்பவில்லை. என்னை எங்கள் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போ. என்ர உயிர் பிரிய முன்பு அம்மா தங்கச்சியவையைப் பார்க்க வேணும். அம்மாவிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். என்று சோட்டையாக இருக்கு. செய்வியா?

என்றபடி இருமுகிறார்".

மாமிக்காரியின் எதிர்ப்புக்கு மத்தியிலும் ஒரு முச்சக்கர வண்டியை வாடகைக்கு எடுத்து அவரை அழைத்துக்கொண்டு மனோகரன் செல்கிறான். அன்று அவரின் நிலைமை கவலைக்கிடமாகவே இருந்ததை அவனால் அவதானிக்க முடிந்தது. அடிக்கடி நினைவு தப்புவதும், திரும்புவதுமாக இருந்தது. வாயைத் திறப்பதும் ஏதோ சொல்ல உன்னுவதும் பின் கண் அயர்வதுமாய்..

மனோகரனுக்குப் பயம் தொற்றிக் கொண்டது. பயந்தது போலவே அவர்கள் வீட்டைப் போய் சேரு முன்பே அவரின் ஆவி வழியில் பிரிந்து போனது.

"உனது கண்ணில் விழிக்கமாட்டேன்" என்று சொன்னது போலவே, மனைவியைக் காணுமுன்பே அவர் போய்விட்டார்.

கணவனைச் சடலமாகக் கண்டதும் கலங்கிப் போனாள் வசந்தி. அவள் சோகமே உருவாக இருந்தாளே தவிர ஒருதுளி கண்ணீர் விடவில்லை. அவள்தான் வாழ்நாள் பூராவும் கண்ணீர் விட்டுத் தீர்த்து விட்டாளே! கல்லுப்போல் விறைத்தபடி இருந்தாள்.

தினகரனுக்கும் அப்பா மீது அடங்காத வெறுப்பு இருப்பினும் காட்டிக் கொள்ளாமல் மேலும் நடக்க வேண்டிய கருமங்களை மனோகரனுடன் சேர்ந்து செய்தான். பாவம் சித்திரா! அப்பாவின் சடலம் மீது விழுந்து அலறிக் கொண்டிருந்தாள்.

சமூகசேவகர் செல்வரத்தினம் என்றால் சும்மாவா? ஊரே கூடி விட்டது.

"பாராட்டு விழா நடந்து ஒரு மாதம் கூட ஆகவில்லை. மனிதனைக்கொண்டு போட்டுது! ஆர் வைத்த கண்ணூறோ!" என்று சிலரும்

"என்ன இருந்தாலும் சீமானுக்கு குடும்ப வாழ்வு சரியாக அமையவில்லை. பார்க்கவில்லையோ கல்லுப் போல உட்கார்ந்திருக்கிறாள் அவர் பெண்சாதிக்காரி, ஒரு கண்ணீர்த்துளி கூட விழவில்லை" என்று வேறு சிலரும்

"எல்லாம் அவரவர் செய்த வினைப் பயன்" என சூசகமாகச் இன்னும் வேறு சிலரும்

"ஐயோ! இனி இந்தப் பிள்ளைகளின்ர கதி!" என்று அனுதாபம் தெரிவிப்போருமாக...

கிரிகைகள் தொடங்கிவிட்டன. அப்பொழுதுதான் அக்காக்காரி தலையில் இரு கைகளையும் வைத்தபடி "ஐயோ! தம்பி! என்னை விட்டுட்டு போட்டியே! நான் ஆரை நம்பி இருப்பேன்." என ஒப்பாரி வைத்தபடி நுளைந்தாள்.

"கிரிகைகள் நடக்குது கொஞ்சம் சத்தம் வைக்காமல் இருங்கோ!" என்று அவளை அடக்கினர் சில பெண்கள். மனோகரனும், தினகரனும் சேர்ந்து பொற்சுண்ணம் இடித்தனர். கிரியைகள் நடந்து கொண்டிருந்தது. கடைசியில் புரோகிதர் மனைவியின் தாலியைக் கழற்றிப் போடும்படி சொன்னார்.

வசந்தி இதுவரை அடக்கி வைத்திருந்த அழுகையெல்லாம் சேர்த்து அலறியபடி தாலியைக் கழற்றி சவத்தின் மார்பில் போட்டதுதான் தாமதம்.... தாலியைக் கழற்றிப் போடும் வரை காத்திருந்தவள் போல அக்காக்காரி எழுந்து வந்து தாலியை 'இறாஞ்சி' எடுத்து தனது மடிக்குள் கட்டிவிட்டாள்.

"இதென்ன வேலையடி! சவத்திலை போட்ட நகைகள் சுடலையிலே போய்த்தானே கழற்றி எடுக்கிறது. இதென்ன சீலம்பாய் வேலை!" பெண்களில் சிலர் சப்தமிட்டனர்.

"ஆ! அது கல்யாண சமயத்திலை, தாலி செய்ய நான் தான் காசு கொடுத்தனான். நீங்கள் உங்கள், உங்கள் வேலைகளைப் பாருங்கோ!" பெண்டுகள் எல்லோரும் வாயடைத்துப் போய் நின்றனர். காரியமெல்லாம் முடித்து சவம் பன்னாங்கில் வைக்கப்பட்டு பாடைக்குள் வைத்துச் தூக்கிச் செல்லப்பட்டது. பறை மேளம் உச்ச ஸ்தாயியில் ஒலித்தது.செல்வரத்தினம் அவர்கள் இறுதிப் பயணத்தைத் தொடங்கிவிட்டார்.

தரிசனம் -2012
வடமராட்சி வடக்கு கலாசாரப் பேரவை வெளியீடான
நிதர்சனம் சஞ்சிகையில் வெளியிடப்பட்ட சிறுகதை.

# வீட்டுக்கு வீடு

சித்ரா பம்பரமாய்ச் சுழன்று கொண்டிருந்தாள். காலை எழுந்த கையோட தேநீர் "ஆத்தி" எல்லோருக்கும் கொடுத்துவிட்டுக் காலை ஆகாரம் தேடுவதில் முனைந்தாள். சமையல் செய்து முடிப்பதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது. அவளை கிஞ்சித்தும் நோகவிடாது எல்லா வேலைகளையும் தன் தலைமேல் இழுத்துப் போட்டுக்கொண்டு செய்து முடிக்கும் தயாளன் இன்று ஒரு அவசர வேலை நிமித்தம் காலையில் "பிளேன் ரீயுடன்" புறப்பட்டுப்போக சகல வேலைகளும் இவள் தலைமேல் பொறிந்து விட்டது.

"அம்மா! அம்மா!" எனக் கழிப்பறையிலிருந்து சின்னமகளின் கூச்சல் செவிப்பறையில் நாராசமாய் முட்டியது. அவள் காலைக்கடன் முடித்து விட்டதன் அறிகுறி அது விரைவில் வந்து குளிப்பாட்டிவிடும்படி அறை கூவல் விடுக்கிறாள்.

"ஐயோ! நேரம் போச்சுது இவள் ஒரு......... பொறடி வாறன். நான் என்ன சும்மா இருக்கிறனே! எரிச்சலுடன் கத்திவிட்டு அடுப்பில் எண்ணெய்ச் சட்டியில் போட்டது போட்டபடியே இருக்க, கழிப்பறைப் பக்கம் ஓடினாள். ஏதோ "காணான் கோணான்" என அவளைக் கடமைக்கு குளிப்பாட்டிவிட்டு.......... "எடி எடியே! அடுப்பிலே போட்டது கருகப் போகுது" எனப் பதறியபடி அடுப்படிக்குள் போய்ப் பார்த்தால் கருகப் போகுதென்ன கருகியே விட்டது. "இனி என்ன! உங்களுக்கு பொரியலும் இல்லை மண்ணாங் கட்டியுமில்லை" வெறும் புட்டை 'மிண்டி' விழுங்கிவிட்டுப் போங்கோ எனப் புறுபுறுத்தபடி பால் பாத்திரத்தை அடுப்பில் ஏற்றிப் பாலை ஊற்றி..... "அம்மா! அம்மா......... மறுபடியும் காடிட்டுக்கத்தல்

அண்ணா, என்னை 'யூனிபோம்' போடவிடானாம். 'ரை'யைப் பறிச்சுக் கொண்டு ஓடுறான்....

"டேய் தமிழ்! நீ பூசை வேண்டப் போறாய் அவளின்ர 'ரை' யைக் குடுத்திட்டு வதவதவெண்டு சாப்பிடு அங்கைபார்! நேரம் ஏழரையாயிட்டுது. நேரம் போச்சுது.....! வழக்கமான சுலோகம் தான் "பள்ளிக்கூடத்துக்கு நேரம் போகுதெல்லோ" அதன் பிறகுதான் அவன் புட்டை நோண்டிக் கொண்டிருந்தான். அவனுக்கு இரண்டு கவளம் என்றாலும் ஊட்டிவிட்டால் தான் சாப்பாடு இறங்கும். அதற்கு அவளுக்கு எங்கே நேரம் இப்போது நேரம் போச்சுது. சாப்பிடு கெதியா. எனக்குப் புட்டு தின்னுறதென்றால் மாம்பழம் வேணும்." அவன் சிணுங்கினான்.

"மாம்பழம் என்ன கொப்பற்றை தோட்டத்தில் கொட்டிக் கிடக்கே? புட்டைக் கெதியா விழுங்கு அல்லது சாப்பாட்டுத் தட்டை வைச்சிட்டுக் கையைக் க்ழுவு மிச்சத்தை நாய்க்குப் போடலாம்."

"ஐயோ! அவரும் இண்டைக்கெண்டு கண்டறியாத 'கம்மக்கை'யிலை போயிட்டார். நான் இதுகளோட படுற சீரழிவு" எனப் புறுபுறுத்தபடி இருவரின் சாப்பாட்டுப் பெட்டியில் சாப்பாட்டை வைத்துப் பூட்டி வெளியில் வந்தாள்.

இருவரும் சாப்பிட்டு முடித்த பாடில்லை. இருவரின் சாப்பாட்டுத் தட்டுக்களையும் பறித்து ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு இருவரும் யூனிபோம் அணிவதைச் சரியாக்கிவிட்டாள். தமிழை நடந்து போகுமாறு பணித்துவிட்டு சின்னவளைச் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு போவதற்கு ஆயத்தமாகிச் சைக்கிளை எடுத்தால்.... சைக்கிள் சில்லில் காற்றில்லை 'வால்ப்' போட்டுதோ என விசனப்பட்டபடி கழற்றிப் பார்த்தால் "வால்ப்' சரியில்லை. ஓடிப்போய் இலாச்சியைத் திறந்து பார்த்தால் நல்ல வேளையாக 'வால்வ்' துண்டொன்று பல்லை இளித்தபடி கிடந்தது. இனி புதிய வால்வு மாற்றிக்காற்றடித்து.... ஒருவாறாக சின்னவளை ஏற்றிக்கொண்டு சைக்கிளை உன்னி மிதித்தாள். நல்ல வேளை கடைசி மணி அடிக்கவில்லை. அவளை இறக்கி உள்ளே அனுப்பி விட்டு வீட்டுக்கு விரைந்தாள்.

ஐயோ! அப்பொழுதுதான் நினைவு வந்தது. மதிய உணவுக்காகச் சோற்றுக்கு உலை வைத்துவிட்டு போனது. கிளைந்த அரிசி நனைந்தபடி

ஊறிக்கிடந்தது. ஓடிச் சென்று பார்த்தால் உலையில் நீர் கொதித்துக் கமறிக் கொண்டிருந்தது. அரிசியை உலையில் இட்டு நெருப்பைத் தளணித்து விறகைத் தள்ளிவிட்டவள் எட்டி நேரத்தை நோட்டம் விட்டாள். நேரம் எட்டரைமணியும் தாண்டிவிட்டது. நேரம் போச்சுது.....!

இத்தனைக்கும் அவள் மனம் ஒரு நிலையிலில்லை மனசு சஞ்சலப் பட்டது, சங்கடப்பட்டது. நேற்று மாலையில் அருந்ததி அக்கா சொல்லிவிட்டுப் போன சங்கதிதான் மனதைக் குடைந்து கொண்டிருந்தது.

அவள் வள்ளிக்கு ஆபத்தாம் அவளைக் கொல்லச் சதி நடக்குதாம். அவள் வள்ளி எவ்வளவு நல்லவள், குணக் கொழுந்து உற்ற கணவனை உளமாரக் காதலிப்பவள், அவனைத் தெய்வமாக மதிப்பவள். கடைத்தெடுத்த காவாலியாகத் திரிந்த அவனை விதிவசத்தால் கணவனாக அடைந்தும் அவனைத் திருத்தி நல்வழிப்படுத்திய புனிதவதி அவள். அவளின் நிம்மதியான வாழ்க்கையைக் கண்டு சகிக்காத அவளுடைய மைத்துனி அவளைக் கொல்லச் சதி செய்தாள். அன்று அவர்கள் முதலிரவுக்காகக் ஹோட்டல் செல்லும் போது வழியில்..... மறித்து.... ஐயோ பாவம் வள்ளி! அவளுக்கு ஒன்றும் நேர்ந்து விடக்கூடாதே! அம்மளாச்சி! தெய்வத்தை மனமார வேண்டினாள்.

சித்ராவுக்குக் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. வள்ளிக்கு என்ன நேருமோ என எண்ணியவளுக்கு ஒரே பதற்றத்தில் வெண்டைக்காய் நறுக்கியவள் அவளின் கைவிரலையும் நறுக்கிவிட்டாள். இரத்தம் கொளகொளவெனக் கொட்டுகிறது. விரலுக்குச் சுற்றி அப்போதைக்கு ஒரு கட்டு கட்டிவிடுவோம் என்று 'பன்டேஜ்' துணியைத் தேடினாள். ஒரு சாமான் வைத்த இடத்தில் இருந்தால் தானே வீட்டிலை தறுதலைப் பிள்ளைகள் எங்கேயோ இடம்மாற்றி வைத்து விட்டுதுகள் போலும் அதைத் தேடி விரலுக்குப் பஞ்சு வைத்துக் கட்டுப் போட்டு..... உலையில் சோறு பதம் தப்பி வெந்துவிட்டது. அதை வடிக்கப் போனால் சோறு குமைந்துவிட்டது. இண்டைக்கு அவரிட்டை அர்ச்சனைதான் கேட்கவேணும். உலையை வடித்துக் கிளறிவிட்டு தேங்காய் துருவிக் கறி சமைத்து வறுவல் செய்து, பொரியலாக்கி... சொதி வைத்து.....ம்!

"நேரம் அங்கை பத்தரை மணியாய் போச்சு" எனக் சூழ்கொட்டிய படியே அவசர அவசரமாக சாமான்களை ஒறாறு பண்ணிவிட்டு உடைமாற்றி பாலர்

வகுப்புக்கு செல்ல ஆயத்தமானாள். அங்கே பிள்ளை நின்று அம்மாவைக் காணயில்லை எண்டு முழிக்கப் போகுது?

சைக்கிளை எடுத்துக்கொண்டு ஒரே ஓட்டம் நாயோட்டமும் சில்லறைப் பாய்ச்சலுமாய்... ஓட்டம்..... ஓட்டம்......

நல்ல வேளையாக அப்பொழுதுதான் பிள்ளைகள் வண்ணப் பறவைகளாய் வெளியேறிக் கொண்டிருந்தார்கள்.

அவளை அழைத்துக்கொண்டு வீட்டிற்கு விரைந்தாள். வதவதவென விட்டகுறை தொட்டகுறையெல்லாம் பார்த்து முடித்தாள்.

அப்பாடா ஒன்றரைமணியாச்சா சின்னவளுக்குக்ரிய சாப்பாட்டுக் கோட்டாவை தட்டில் இட்டு குழம்பு வேண்டாம் உறைக்கும். வெள்ளைக்கறி ஐயோ அவள் சாப்பிடமாட்டாள் கொஞ்சம் பருப்பும் பச்சைமிளகாய் போடாத வெள்ளைச் சொதியும் மாத்திரம் போட்டு கூடத்துக்கு வந்தால் சின்னவள் ரீவியில் லயித்திருந்தாள்.

என்னவோ ஒரு 'சனலில்' ஏதோ ஒரு படம் அரைகுறை ஆடையுடனான ஒரு அழகியை வாலிபன் துரத்திக்கொண்டிருந்தான். அவளே அவனுடைய கோரிக்கைக்கு மசிவதாய் இல்லை. அவனை எடுத்தெறிந்து பேசிவிட்டு அப்பால் நகர.... அவன் விடுவதாக இல்லை. பின்னே தொடர....

சின்னவள் சிரித்த படியே அம்மாவை நோக்கி "இவன் என்ன மோடனாகக் கிடக்கு. அவளுக்கு ஒரு ரோஜாப்பூவைக் குடுத்து அவளை மடக்கலாம் தானே" என்றாள் பெரியமனுசி தோரணையில்.

சின்னவளுக்கு ஆறு வயதும் பூர்த்தியாகவில்லை. முதலாம் தரத்தில் படிக்கிறாள். முளைத்து மூன்று இலைவிடவில்லை. காதலுக்குக் கட்டியம் கூறுகிறது.

சித்திராவுக்குச் சீற்றம் தலைக்கேறியது. "கொண்டாடி றிமோட்டை இது தான் கட்டி டி.வி பார்க்கிற இலட்சணம். படம் பார்க்கிறாள் என்ன? வாடி சாப்பிட....." அருகில் அழைத்து சின்னவளுக்குச் சாப்பாடு ஊட்டுவதில் முனைத்தாள்.

"அம்மா! எனக்குப் பசிக்கேல்ல" ஒரு சிணுங்கல். "ஓ" இப்ப பசிக்காது பின்னேரம் நாலுமணிக்குத்தான் பசிக்குமாக்கும்.... வாயைத் திறவடி....." சாப்பாட்டைத் திரணையாக உருட்டி வாய்க்குள் பொதிந்தாள்.

சின்னவள் ஓரக்கண்ணால் டி.வி.யைப் பார்த்தபடி வாயைத் திறந்தாள். சாப்பாடு போய்க்கொண்டே இருக்கிறது. வாய்க்குள் பாதி வெளியில் மீதி.....

ஆ! இனி என்ன சித்திரா எதிர்பார்த்த அந்த வேளை நெருங்கி விட்டது. இரண்டு மணி சரியாக.

"வள்ளி.... வள்ளி.... வள்ளீ" ரீங்காரமாய் ஒலித்தது. "அம்மா! வள்ளி தொடங்கப் போகுது" சின்னவள் குதுகலித்தாள். அவளுக்கும் கதை அத்துபடி.

குசினிக்குள் விரைந்த சித்திரா சாப்பாட்டுத்தட்டில் ஒரு அகப்பை சோறும் இரண்டு இறைச்சித் துண்டும் போட்டுக்கொண்டு ஹோலுக்கு விரைந்தவள் கதிரையில் அமர்ந்தபடி சின்னவளுக்குச் சோற்றுக்கவளம் ஊட்டினான். வள்ளி தொடங்கிவிட்டது. வள்ளியை ஒரு கார் துரத்திக் கொண்டுவருகிறது. வள்ளிக்கு இன்று 'அஸ்த்த' காலம் தான் உன்னிப்பாக படத்தைப் பார்த்தபடி சோற்றுக் கைகை சின்னவள் பக்கம் நீட்டினாள். கை இங்கே பார்வை அங்கே வள்ளியைத் தொடர்ந்து நீட்டிய கைப்பிடிச் சோற்றை வாயில் வாங்காதே சின்னவள் மெல்ல நகர்ந்தாள் அடுக்களையை நோக்கி ஒரு மிடறு தண்ணீர் குடிக்க அவளுக்கு உறைப்பு காரம் தாங்கமுடியாமல்.

நீட்டியசோற்றுக் கை நீட்டியபடி இருக்க சித்திரா ரீ.வி.யில் லயித்துப் போய் பார்த்துக் கொண்டிருந்தாள். அப்போதுதான் அதைக் கண்ணுற்ற ஜிம்மி இறைச்சி வாசம் சேர்ந்த சோற்றுப்பிடியை லபக்கெனக் கவ்வப்போக சித்திரா அப்போதுதான் திடுக்குற்றுக் கையை இழுத்தாள். கையில் ஜிம் மியின் பல் ஆழமான கீறலுடன் பதிந்து விட்டது. இரத்தம் கசியக் கசிய அவளுக்கோ எரிச்சல் கண்டது.

ஐயோ! சனியன் கடிச்சுப்போட்டுது என எரிச்சலுடன் கையை தூக்கியவள் செய்வதறியாது திகைத்து நின்றாள். சின்னவன் அம்மா அம்மா என்ற படி விம்மிக் கொண்டிருந்தாள். சோற்றுக் கையும் வாயும்.....

அப்போது பாடசாலையில் இருந்து வந்த தமிழ் அம்மா அலறுவதைக் கண்டு கலங்கியபடி போனை எடுத்து அப்பாவுக்குச் சொன்னான். பாதி வழியில் வந்தவர் அக்சிலேட்டறை அமுக்கி முறுக்கி வீட்டில் வந்து நின்றார் சனியன்களே

நாய்களே எருமைகளே! உங்களுக்-கொரு நாடகம் தான் குறைச்சல். வெளிக்கிடுங்கோ ஆஸ்பத்திரிக்கு என்றபடி பரபரத்தான். ஓடிக் கொண்டிருந்த டி.வி றிமொட்டைச் சொடுக்கிட அணைத்தபடி உங்களுக்கொரு நாடகம் ரீ.வியை ஓவ் பண்ணி விட்டு சாப்பிட்டு விட்டு ரியூசனுக்குப் போக ஆயத்தமாகுங்கோ நாங்கள் வந்திடுவோம் என்றபடி சித்திராவை சைக்கிளில் ஏற்றியபடி ஆஸ்பத்திரி நோக்கி விரைந்தான். பசி ஒரு பக்கம்.

"ஐயோ இரண்டு பல்லு ஆழமாகப் பதிந்து போச்சு ஊசிபோட வேணும். டாக்குத்தர் இன்னும் வரவில்லை. ரிக்கற் போடுகிறம் வாட்டிலே இருங்கோ சொல்லியவாறே தாதி அப்பால் செல்லுகிறாள்.

வழக்கமான நடபடிகள் முடிந்து வாட்டில் கொண்டுபோய் விட்டார்கள். டாக்டர் வரும்வரை காத்திருக்கவேணும் அதோட இன்னைக்கு என்னை வீட்டுக்கு விடுவினம் என்று தோன்றயில்லை. என ஆலோசனையில் ஆழ்ந்தபடி ஆஸ்பத்திரிக் கட்டிலில்"

அப்பொழுது அவளுடைய சிந்தனை வள்ளிக்கு என்ன நடந்திருக்கும் என்றபடிதான் இருந்தாள். பக்கத்து வீட்டு அருந்ததிமாமியைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியதுதான் வேறென்ன செய்ய?

வீடியம் – 2018



# புலோலியூர் செ.கந்தசாமி

14.03.1937 இல் புற்றளையில் இவர் பிறந்தார். 1966 இல் இலக்கிய உலகப் பிரவேசம் செய்தார். அன்றில் இருந்து இன்று வரை பல சிறுகதைகளை இவர் எழுதியுள்ளார். சில கவிதை களையும் எழுதியுள்ளார். ஆனால் கவிதைகள் நூலுருப் பெறவில்லை. சில சிறுகதைகள் "மெல்லத் தமிழ் இனி ......" என்ற நூலாக 1999 இல் வெளிவந்தது. இப்போது " என்னுயிர் நீ தானே" என்ற தலைப்பில் பதினான்கு சிறுகதைகள் தொகுக்கப் பட்டு வெளிவருகிறது.

இவருக்கு 2004 இல் நோர்வே தமிழ் சங்கத்தினால் நடாத்தப்பட்ட உலகச்சிறுகதைப் போட்டியில் முதல் பரிசும், தங்கப் பதக்கமும் கிடைத்தன. வடமராட்சி வடக்கு பிரதேச கலாசார பேரவை "கலைப்பரிதி" என்ற விருதினை 2011 இலும், யாழ் மாவட்ட கலை கலாசார பேரவை "யாழ் முத்து" என்ற விருதினை 2017 இலும், வடமராட்சி கல்வி வலயம் "கலை வாரிதி" என்ற விருதினை 2017 இலும் வழங்கி கௌரவித்தது. மேலும், வடமராட்சி வடக்கு கலாசாரப்பிரிவால் நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் பல தடவைகள் பரிசில்கள் கிடைத்துள்ளன. "ஞானம்" சஞ்சிகையால் நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டிகளிலும் இரண்டு தடவைகள் பரிசில்கள் கிடைத்துள்ளன.

நீண்டகாலமாக இலக்கியத்துறையில் ஈடுபட்டுள்ள இவர், தனது ஆளுமையால் ஈழத்து இலக்கியத்தில் தனக்கென ஓர் இடத்தைத் தக்கவைத்துள்ளார். இவரது சிறுகதைகள் தனித்துவமானவை. சமூகத்தில் நடக்கும் அநீதிகளைக் கண்டு கொதித்தெழுபவை.

படித்தவுடன் செஞ்சில் பதியும் பாத்திரங்கள், ஆற்றொழுக்குப் போன்ற மொழி நடை உணர்வலைகளை இலாவகமாக சொல்லும் அனுபவம் இவைதான் செ.கந்தசாமியின் வெற்றிக்குரிய படிக்கட்டுக்கள்.

**பெரிய ஐங்கரன்**

978-955-71203-0-0